# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 62 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 14, வெள்ளிக்கிழமை 27.01.2017







## மழை வீழ்ச்சி நாளை வரை தொடருமாம்

யாழ்ப்பாணம், ஜன. 27

நாட்டின் பல பாகங்களில் நாளை வரை கன மழை பெய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய, ஊவா மாகாணங்களில் 100 மில்லி மீற்றர் மழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இரவு நேரங்களிலேயே இந்த மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் எனவும் அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. (வ-5)

## கறுப்புப் பணத்தால் மட்டுமே ஆட்சியை கவிழ்க்க முடியும்

### ஜே.வி.பி. கூறுகிறது

கொழும்பு, ஜன. 27

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கினால்தான் ஆட்சியைக் கவிழ்க்க முடியும். அதற்குக் கறுப்புப் பணம் வேண்டும். அதைத் தவிர வேறுவழியே இல்லை என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

இந்தவருடம் ஆட்சி கவிழ்க்கப்படும் என்று மகிந்த அணி கூறிவருகின்றமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டியதுதான். அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. இது >> 24

புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் தொடர் பின்னடைவு

# 10 நிமிடங்களில் கூடிக் கலைந்தது வழிகாட்டல் குழு

## ஆக்கபூர்வமான பேச்சு ஏதுமில்லை

யாழ்ப்பாணம், ஜனவரி 27

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற வழிநடத்தல் குழு நேற்று 10 நிமிடங்கள் மட்டும் கூடிக் கலைந்தது. எந்தவொரு ஆக்கபூர்வமான பேச்சும் இடம்பெறாமல் கூட்டம் அடுத்த மாதத் துக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் தனது கருத்தைத் தெரிவிப்பதற்குக் கால அவகாசம் போதாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்ததைத் தொடர்ந்தே குறுகிய நேரத்தில் கூட்டம் முடிவடைந்தது. >> 05



## மாணவிகள் விடுதியில் நேற்றுத் திடீர்த் தீ

### பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து நாசமாகின

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவிகள் தங்கியிருந்த புதிய விடுதியின் முதலாம் மாடியில் நேற்று ஏற்பட்ட பெரும் தீயினால் மாணவிகளின் உடைமைகள் மற்றும் விடுதியின் உடைமைகள் எனப் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் எரிந்து நாசமாகின.

மாடியிலிருந்து ஜன்னல் வழியாக ஏணி மூலமாக மாணவிகள் >> 24

முச்சந்தி முரளி



நம்பிக்கை வைத்ததுக்குத் தானே உங்க ஐயா பொறுப்பில்லாமல் பதில் சொல்லிப் போட்டார்....

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நேரில் சென்று சந்திப்பு


## வாக்குறுதியை அடுத்து போராட்டம் நிறுத்தம்

வவுனியா, ஜன. 27

காணாமற்போனோரின் உறவுகளால் கடந்த 4 நாள்களாக வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வந்த உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று >> 24



(மேலும் செய்திகள் 3ஆம் பக்கத்தில்)



## நல்லூர் ஆலய முன்றலில் அநாமதேய அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜன. 27

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில், போராட்டங்கள் - கூட்டங்கள் >> 24

## கூட்டாட்சி அரசியல் தீர்வே ஐ.தே.கவின் நிலைப்பாடு

*கூட்டு அரசிலிருந்து விலகிய அத்துரலிய ரத்ன தேரர் கூறுகிறார்*

கொழும்பு, ஜன. 27

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன் ஒற்றையாட்சியின் கீழ்தான் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதும் >> 24

## காணாமற்போனோரின் உறவினர்கள் அரசில் நம்பிக்கை வைக்கவேண்டும்

### யாழ்ப்பாணத்தில் வலியுறுத்தினார் அமைச்சர் மங்கள

யாழ்ப்பாணம், ஜன. 27

காணாமற்போனோரின் உறவினர்கள், கூட்டு அரசு மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் >> 24



(மேலும் செய்திகள் 3ஆம் பக்கத்தில்)

## தமிழ் மக்களின் பெருமளவு தங்கம் வைப்பீட்டிலுள்ளதா?

### வாசு எம்.பியின் கேள்விக்குப் பதிலளிக்க இரு வாரம் அவகாசம் கோரியது அரசு

கொழும்பு, ஜன. 27

போரின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு தங்கம் எங்கேனும் நம்பிக்கைப் பொறுப்பில் வைப்பீடு செய்யப்பட்டதா என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்கு இரு வாரங்கள் அவகாசம் கோரியுள்ளது அரசு.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல >> 05



## ஊழல் மோசடிகளைக் கதைக்க சம்பந்தனுக்கு உரிமையில்லை

### இப்படிச் சொல்கிறார் டிலான்

கொழும்பு, ஜன. 27

ஊழல் மோசடிகள் குறித்துப் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு உரிமை கிடையாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். >> 24






குடும்பத்தவர் அனைவரையும் சேமித்து உச்சம் பெற DFCC வங்கி அழைக்கின்றது!

ரூபா.25,000 வைப்பிலிட்டு ரூபா.1,250 முதல் ரூபா.2,500 வரை வெகுமதிகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

இச்சலுகை 2017 ஜனவரி 31 வரை மட்டுமே.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

# உறவுகளின் போராட்டத்துக்கு வடக்கில் உணர்வுபூர்வ ஆதரவு



## ஓட்டோ உரிமையாளர்கள் வவுனியா நகரில் ஊர்வலம்

வவுனியா, ஜன. 27
காணாமற்போனோரின் உறவுகள் மேற்கொண்டு வரும் உணவு ஒறுப்பு போராட்டத்துக்கு வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் அணிதிரண்டு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி ஆதரவு வழங்கினர். ஏ-9 முதன்மைச் சாலையின் ஊடாக - போக்குவரத்துக்கு இடையூறில்லாமல் - பேரணியாகச் சென்று, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அவர்கள் இணைந்து கொண்டனர்.
காணாமற்போனோரின் உறவினர்கள் கடந்த நான்கு நாள்களாக, உணவு-குடிதண்ணீர் எதுவுமின்றி போராட்டம் நடத்தி வருகின்றனர். பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் அவர்களுக்கு ஆதரவு வழங்கப்படுகின்றது. வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டிச் சாரதிகள் 300க்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து நேற்றுக் காலை 9.30 மணிக்குப் பேரணியாகப் புறப்பட்டனர். பஜார் சாலை வழியாக மணிக் கூட்டுக் கோபுரம் ஊடாக உணவு ஒறுப்பு மேற்கொள்ளப்படும் இடத்துக்கு அவர்கள் சென்றனர்.
'அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'கையளித்த உறவுகள் எங்கே?', 'விடுதலை செய் விடுதலை செய் எங்கள் உறவுகளை விடுதலை செய்', 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பதில் என்ன ?', 'பயங் கரவாதச் சட்டத்தை இரத் துச் செய்' என்ற வாசகங்கள் அடங் கிய பதாகைகளை அவர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர். வவுனியா மையப் பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாகச் சென்ற வவுனியா வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், உரிமையாளர்கள் உணவு ஒறுப்பு மேற்கொள்ளப் படும் இடத்துக்குச் சென்று அமைதியான முறையில் ஆதரவை வழங்கினர்.

(வ-5)

## வவுனியா வளாக மாணவர் அடையாள உணவு ஒறுப்பு



வவுனியா, ஜன. 27
உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமற்போனோரின் உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேற்று அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
நான்கு நாள்களாக காணாமற்போனோரின் உறவுகள் வவுனியா நகரில் உணவுப் ஒறுப்பு போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். இரவு - பகலாக இவர்களது போராட்டம் இடம்பெறுகின்றது.
காணாமற்போனவர்கள் எங்கே, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய் என்ற கோசங்களை முன்வைத்து, பல்கலைக்கழக மாணவர்கள் சுமார் 100 பேர் இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்டனர்.
இதேவேளை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கைதிகளின் உறவினர்களும், அணி திரண்டு வந்து வவுனியாவில் முன்னெடுக்கப்படும் உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள். சுமார் 200 பேர் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கலந்து கொண்டார்கள். நேற்றுக் காலையிலிருந்து மதியம் வரையில் அவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

(வ-5-402)

## நூற்றுக் கணக்கான உறவுகள் நல்லூரில் அணி திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 27
வவுனியாவில் காணாமற்போனோரின் உறவுகள் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, வடக்கு பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் உறவினர்களின் சங்கம் நல்லூரில் நேற்று அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தது. நேற்றுக் காலையிலிருந்து மாலை வரை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. மாலையில் இந்தக் கவனவீர்ப்புக்கு ஆதரவு தெரிவித்து இளைஞர்களும் அணி திரண்டனர்.
காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் கடந்த 4 நாள்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இவர்களுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து தமது போராட்டங்களை நடத்தினர்.
வடக்கு பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கம் நல்லூர் ஆலய முன்றலில் நேற்றைய தினம் கவனவீர்ப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது. காலையில் போராட்டம் ஆரம்பமாகும் போது பத்துக்கும் குறைவானோரே திரண்டிருந்தனர். நேரம் செல்லச் செல்ல போராட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.
சமூகவலைத் தளம் ஊடான போராட்டத்துக்கு இளைஞர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். அதற்கு அமைவாக மாலை 4 மணிக்கு 150 இளைஞர்கள் வரையில் அணி திரண்டனர். அவர்களும், காலையிலிருந்து போராடிய உறவுகளுடன் சேர்ந்து மாலையில் அடையாள கவனவீர்ப்புப் போராட் டத்தை நடத்தினர்.

(வ-5-101-37)



## அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்

### *சபையில் வலியுறுத்தினார் செல்வம் எம்.பி.*

கொழும்பு, ஜன. 27
காணாமற்போனவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் சிறப்புக் கவனம் செலுத்தி, அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உறுதியான உத்தரவாதத்தை வழங்க வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மருத்துவ (திருத்தச்) சட்ட வரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தவிசாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
காணாமற்போனவர்களைத் தேடி அவர்களது உறவினர்கள் அங்கும் வவுனியா உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல இடங்களிலும் போராட்டங்கள் நடக்கின்றன. அவ்வாறு நடத்துபவர்கள் வவுனியாவுக்கு வந்து ஆதரவைத் தெரிவித்தால் அது பலமாகவும் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இருக்கும் - என்றார்.

(வ-5)


### காணாமற்போனோர் தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன?

## வவு. மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் இளையோரால் முற்றுகை

காணாமற்போனோர் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இது வரையில் எடுத்த நடவ டிக்கை என்ன ?
இவ்வாறு கேள்வி எழுப்பி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தை இளையோர்கள் நேற்று முற்றுகையிட்டனர்.
வவுனியாவில் காணாமற்போனோரின் உறவுகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வந்த இளையோர்கள், அங்கிருந்து ஏ-9 முதன்மைச் சாலையின் ஊடாகச் சென்று, இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தினுள் புகுந்தனர். அங்கு பிராந்திய அலுவலகத்தின் இணைப்பதிகாரியைச் சந்தித்தனர்.
காணாமற்போனவர்கள் தொடர்பில் இதுவரை எத்தனை முறைப்பாடுகள் உங்களுக்கு கிடைக்கப்பெற்றன. அதற்குஎன்னநடவடிக்கை எடுத்துள்ளீர்கள். எட்டு வருடங்களாக இவ்வாறான முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்காமல், மேல்அதிகாரிகள்தான்நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் வவுனியா அலுவலகம் எதற்கு என்று கேள்வி எழுப்பினார்கள்.
'உடனடியாக இந்த வினாக்களுக்கு என்னால் பதில் வழங்க முடியாது. மேல் அதிகாரிகளிடம் பேசித்தான் பதில்வழங்கமுடியும்' என்று இணைப்பதிகாரி குறிப்பிட்டார். தொலைபேசியில் உரையாடிய பின்னர் இணைப்பதிகாரி, கேள்விகளை எழுத்தில் தருமாறு கோரினார். இளைஞர்கள் அதற்கு இணங்கி தமது கேள்விகளை எழுத்தில் கொடுத்தனர். அதற்குப் பதில் வழங்குவதற்கு இணைப்பதிகாரி சம்மதம் தெரிவித்தார்.
'நான்கு நாள்களாக உணவு ஒறுப்பு வவுனியா நகரில் இடம்பெற்று வருகின்றது. மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவராக இருந்து கொண்டு இதுவரை நீங்கள் ஏன் அவர்களைச் சென்று பார்க்கவில்லை?' என்று இளைஞர்கள் இணைப்பதிகாரியிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் வேலைப்பழு காரணமாக வரவில்லை என்றும், விரைவில் அங்கு வருவேன் என்றும் குறிப்பிட்டார். அதன் பின்னர் இளையோர் அங்கிருந்து வெளியேறினர்.

(வ-5-402)





# பிராந்திய கொன்சூலர் அலுவலகம் யாழ். செயலகத்தில் நேற்றுத் திறப்பு

## வெளிநாட்டிலுள்ள உறவுகளுக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

அயலுறவுத் துறை அமைச்சின் பிராந்திய கொன்சூலர் அலுவலகம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை 10 மணிக்கு அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் திறந்துவைக்கப்பட்டது.

அயலுறவு அமைச்சின் கொன்சூலர் சேவை கொழும்பில் மட்டும் இயங்கி வந்த நிலையில் நேற்று முதல் முறையாக யாழ். மாவட்டத்தில் பிராந்திய அலுவலகம் ஊடாக சேவைகளை ஆரம்பித்தது.

வெளிநாடு செல்வோருக்கான பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ் போன்றவற்றை உறுதிப்படுத்தல், வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் அங்கு இறக்கும் போது அவரின் உடலை இங்கு கொண்டுவருவதற்கான உதவிகளை வழங்குதல், இறந்தவரை அங்கு தகனம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருப்பின் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல், வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகின்ற தொழிலாளிக்கு இழப்பீடு மற்றும் சட்ட ரீதியான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுக்க உதவிகளை வழங்குதல் .இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற பிறப்பு, இறப்புக்கள் போன்றவற்றை பதிவு செய்தல் ஆகிய சேவைகள் இந்த அலுவலகத்தில் பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என கட்டட திறப்பு விழாவின் போது தெரிவிக்கப்பட்டது.

அலுவலகத்தின் கடமை நேரங்களில் பிற்பகல் 1.30 மணிக்கு பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்க படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பதில் அயலுறவுத் துறை அமைச்சர் ஹர்சா டி சில்வா, கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், யாழ். மாவட் டச் செயலர் நா.வேதநாயகன், பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-8)

# அரசுக்கு எதிராக மக்கள் அணி திரளவேண்டும்

## இன்றைய போராட்டத்துக்கு மகிந்த அணி அழைப்பு

அரசுக்கு எதிரான இன்றைய போராட்டத்தில் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று மகிந்த ஆதரவு அணியான, தேசிய சுதந்திர முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான மொஹமட் முசமில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். இதன் போதே அவர் மேற்படி அறைகூவலை விடுத்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

2015 ஆம் ஆண்டு பல்வேறு வாக்குறுதிகளுடன் ஆட்சி பீடமேறிய அரசால் தற்போது எந்தவொரு செயற்பாட்டையும் செய்து கொள்ள முடியாமல் போயுள்ளது. அனைத்துப் பெரும் மோசடியாளர்களும் இந்தக் கூட்டு அரசில் தான் இருக்கிறார்கள். இந்த அரசு மோசடி யாளர்களுக்கு பாதுகாப்பையும் மறுபுறத்தில் வழங்கி வருகிறது. இதுபோன்ற மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அரசுக்கான எதிர்பிணைத் தெரியப்படுத்த அனைத்து மக்களும் நாளை (இன்று) நுகேகொடையில் நடைபெறவுள்ள எமது போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் - என்றார். (வ-5)

# போரில் நடந்த உண்மைகளை மறைக்கவே பிரகீத் படுகொலை

## விக்கிரமபாகு கருணாரத்ன சாடல்

கொழும்பு, ஜன. 27

விச வாயுக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட போரின் உண்மைகளை வெளிப்படுத்திவிடுவார் என்ற அச்சத்திலேயே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டார் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதப் போரின் உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு எக்னெலிகொட தயாராக இருந்ததோடு, அந்தப் போருக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என்று வலியுறுத்தி வந்ததாகவும் விக்கிரமபாகு கருண்ாரட்ன தெரிவித்தார். (வ-5)

# உறவுகளின் நிலையை அறியவே தாய்மார்கள் போராடுகின்றனர்

## அரசு பொறுப்புக் கூறவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜன. 27

வவுனியாவில் போராட்டம் நடத்துகின்ற தாய்மார் என்ன கேட்கின்றனர். தமது பிள்ளைகளுக்கு - கணவனுக்கு என்ன நடந்தது என்றுதான் கேட்கின்றார்கள். இதனைக் கேட்பதற்கு அவர்களுக்கு முழு உரித்தும் இருக்கின்றது. அவர்களுக்கு அரசு பதில் வழங்கப்பட வேண்டும். அதற்குப் பொறுப்புக் கூறுவதே முக்கியமானது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அயலுறவுத்துறை அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோரைக் கண்டறிவது மாத்திரம் காணாமற்போனோர் அலுவலகத்தின் பணியல்ல. முக்கியமான விடயம் பொறுப்புக்கூறல். நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும். சமாதானம் ஏற்படுவதன் ஊடாகவே சமத்துவம் ஏற்பட வேண்டும். இறைமையின் அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டும்.

இதற்கான பணி ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது அது தாமதமடைந்துள்ளது. இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட்டே ஆக வேண்டும் என்று கூறுகின்றேன். இதனைத் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள முற்போக்குவாதிகளும் விரும்புகின்றனர். நாட்டில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின் இந்தக் கருமம் நிறைவேறியாக வேண்டும்.

காணாமற்போனோர் விடயத்தில், வவுனியாவில் 3 மாதங்களுக்கு முன்னர் தாய்மார் சிலரைச் சந்தித்தேன். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் நாம் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்தோம். அதன் ஊடாகவே காணாமற்போனோர் அலுவலகம் உருவாக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டது. நீண்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் அது நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் அந்த அலுவலகம் இன்னமும் இயங்கவில்லை.

வவுனியாவில் தாய்மார், தமது பிள்ளைகள், கணவன், உறவுகளுக்கு என்ன நடந்தது என்றுதான் கேட்கின்றனர். அவர்கள் கேட்பதற்கு உரிமை உண்டு. பதில் வழங்கப்பட வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைக்கு, மனம் ஆறுதலடையும் வகையில் பதில் வழங்கப்பட வேண்டும். பதிலைக் கண்டறிந்து அதற்குப் பொறுப்புக் கூறுவதே முக்கியமானது.

தற்போதைய கூட்டு அரசின் முக்கிய அமைச்சரான மங்கள சமரவீர இங்கு உள்ளார். காணாமற்போயுள்ள உறவுகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தரும் பொறுப்பை அவரிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் சமர்ப் பிக்கின்றேன். அரசு விரைந்து தீர்வை வழங்க வேண்டும் - என்றார். (வ-5-8-10)

# நாட்டின் பாதுகாப்பில் எனக்கு அக்கறையுண்டு

## அமைச்சர் மங்கள முன்னிலையில் வடக்கு முதலமைச்சர் விக்கி உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 27

50 வருடங்களுக்கு மேலாக ஒரு சட்டத் தரணி. அதில் பாதிக் காலம் நீதிபதியாகவும் பணியாற்றிய எனக்கு நாட்டின் பாது காப்பு பற்றிய அக்கறை இருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அயலுறவுத் துறை அமைச்சின் பிராந்திய கொன்சூலர் அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் மங்கள சமரவீர தனது அமைச்சின் நிர்வாகத்தை வாக்குறுதியளித்தபடி பரவலாக்கி உள்ளார். அயலுறவுத்துறை அமைச்சின் ஒரு பிரிவை வடக்கு மாகா ணத்துடன் நெருக்கமாக்கி உள்ளார். பன் னாட்டுச் சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் நாம் இப்பொழுது ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும். இந்த அலுவலகம் திறக்கப்பட்டதன் ஊடாக இதுவரை கொழும்புதான் செய்ய வேண்டும் என்று இருந்தவற்றை இனி எம்மால் செய்ய முடியும். எமது மக்களுக்கு மொழி, பயணத் தூரம், கொழும்பில் தங்கி நிற்கும் செலவு, பழக்கம் இல்லாத சூழலில் நடமாடும் சிரமம் என்று வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய பயணம் பல அசௌகரியங்களைச் சந்திக்க வைத்தன. இடைத் தரகர்களை நம்பும் நிலை மேலோங்கி இருந்தது. இந்தச் சந்திப்புகள் சில சமயங்களில் செலவை இரட்டிப்பாக்கின. மக்களுக்கு அருகாமையில் அமைச் சைக் கொண்டு வந்தமைக்காக அமைச்சருக்கு நன்றி கூறுகிறோம். வாடுபவர்களின் நண்பன் என்று அமைச்சர் எப்பொழுதுமே அறியப்பட்டவர். மக்களின் அருகாமையில் அமைச்சைக் கொண்டு வந்ததன் மூலம் தன் பெயருக்கேற்ப இவர் வாழ்ந்துள்ளார். இனச் சிக்கலுக்கு தீர் வைக்கொண்டு வருவதில் தன்னால் முடிந்ததை அமைச்சர் செய்து வருகிறார் என்பதை நாம் அறிவோம்.

நான் கனடா பயணமாகி அங்கு வாழ் கின்ற இலங்கை மக்களைச் சந்தித்தேன். அவர்கள் எல்லோருமே எங்கள் திறன் அபிவிருத்தி, முதலீட்டு முன்னேற்ற ஆக்க முயற்சி, கலாசார பரிமாறல் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். எல்லோருமே நாட்டோடு இசைந்து இவற்றைச் செய்யத் தயாராக உள்ளார்கள்.

அரசும், அதிகாரிகளும் வெளிநாட்டு இலங்கையர் மீது கொண்டுள்ள சில கருத்துக்கள் இவர்களை இங்கு வராது தடுக்கின்றன. தெரிவு செய்யப்பட்ட தடை நீக்கங்களைக் கொண்டு வராமல் எல்லா அமைப்புகளின் தடையையும் நீக்கி இங்கு வரும் ஒவ்வொரு நபரையும் நான்கு விசாரணை செய்யுங்கள் என்று நான் பரிந்துரைக் கிறேன்.

பயங்கரவாத முகத்தோடு எங்கள் மக்க ளைப் பார்ப்பதை நிறுத்த வேண்டும். எங்கள் நலனுக்காக இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கி இவர்கள் திறமைகளைப் பயன்படுத்துங்கள்.

வடக்கிலும் - கிழக்கிலும் இருக்கும் நாங்கள் எங்களைச் சிறுபான்மையினர்களாகக் கொள்ளவில்லை. நாம் நமது பிரதேசத்தில் பெரும்பான்மையினர்தான். 1919ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களத் தலைவர்கள் இதை ஒப்புக் கொண்டுள்ளர்கள். அதிகாரப் பகிர்வுக்கு முழு உரித்தான நாங்கள் இதைக் கோருகின்றோம். எங்கள் வேலைகளை நாங்களே பார்த்துக் கொண்டு இருக்கவும் முடியும் - என்றார். (வ-5)

# மெய்வல்லுநர் போட்டிகள்

அளவெட்டி, ஜன. 27
அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று கல்லூரி சமூகத்தினர் அறிவித்தனர்.
கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸும், கௌரவ விருந்தினர்களாக அருணோதயன் பழைய மாணவர் சங்கம் வி.சிவசக்திநாதனும், அருணோதயன் விளையாட்டுப் போட்டி அனுசரணையாளர் செ.செல்வநேசனும் கலந்து கொள்வர் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10, 36)

++++++++++++

அளவெட்டி, ஜன. 27
கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1மணிக்கு அதிபர் எஸ்.சிவராஜன் தலைமையில் நடைபெறும் என்று கல்லூரி சமூகத்தினர் அறிவித்தனர்.
கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வி.கமலேஸ்வரனும், திருமதி ராஜேஸ்வரி, ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் கமலேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் விஞ்ஞான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதியும், கௌரவ விருந்தினராக கந்தரோடை கந்தையா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் எம். அருளையாவும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10, 36)

++++++++++++

அளவெட்டி, ஜன.27
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.ஒரு மணிக்குக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று கல்லூரி சமூகத்தினர் அறிவித்தனர்.
கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பாடசாலைகள் வேலைத்திட்டம் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுப் பணிப்பாளர் தே.சுரேஸ்குமாரும், சிறப்புவிருந்தினர்களாக பழைய மாணவர் சங்கத்தின் அ.விமலதாசனும், தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரி மா.ஆனந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10,36)

++++++++++++

அளவெட்டி, ஜன.27
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று கல்லூரி சமூகத்தினர் அறிவித்தனர்.
கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பழைய மாணவர் சங்கத் தலைவர் கலாதேவி முருகானந்தமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குணபாலசிங்கமும், கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் கார்த்திகேசு துவாரகனும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10, 36)

++++++++++++

யாழ்ப்பாணம், ஜன. 27
கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று பாடசாலை சமூகத்தினர் அறிவித்தனர்.
பாடசாலை அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

++++++++++++

யாழ்ப்பாணம், ஜன. 27
வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என்று கல்லூரி சமூகத்தினர் அறிவித்தனர்.
பாடசாலை அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் அ.மனோரஞ்சிதமும் கலந்து கொள்வர் என அவர்கள் தெரிவித்தனர். (வ-10, 122)

++++++++++++

யாழ்ப்பாணம், ஜன. 27
ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று கல்லூரிச் சமூகத்தினர் அறிவித்தனர்.
வித்தியாலய அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேமனோகரனும் கலந்து கொள்வர் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

++++++++++++

யாழ்ப்பாணம், ஜன. 27
உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30மணிக்கு பாடசாலை முன்றிலில் நடைபெறும் என்று பாடசாலை சமூகத்தினர் அறிவித்தனர்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார் என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

# மகிந்த அரசின் கடனை அடைக்கும் மூலோபாயங்கள் கிடைத்துவிட்டன

## நிதியமைச்சர் ரவி சொல்கிறார்

கொழும்பு, ஜன. 27
முன்னாள் அரசு பெற்றுக் கொண்ட கடனில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும்விடுவித்துக்கொள்வதற்காகவே கூட்டு அரசு சிறந்தமூலோபாயங்களை இனங் கண்டுள்ளது.
இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
பன்னாட்டுச்சுங்க தினத்தை முன்னிட்டு சுங்கத்திணைக் களத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுங்கத் திணைக்களம் ஊழலையும், மோசடிகளையும் இல்லாதொழித்துப் பொருளாதாரத்துக்குப் பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. ஆட்சி மாற்றத்தின் மூலம் ஊழலுக்கு எதிராக சுதந்திரமாகச் செயற்படுவதற்கான வாய்ப்புத் தோற்றம் பெற்றது.
அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டின் அபிவிருத்திக்கென பெரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.
சுங்கத் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனை அதிகரித்து ஆசியாவில் சிறந்த சுங்கத் திணைக்களமாக மாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். கடந்த காலத்தில் சுங்கத் திணைக்களத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் தாண்டி நாட்டின் தேசிய நலனுக்கானவேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். கடந்த அரசு பெற்ற கடனையே தற்போது மிகவும் சிரமத்துடன் செலுத்தி வருகின்றோம். கடன் சுமை மக்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளது. இதனை இல்லாமலாக்கவே இவ்வளவு போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம். எமது தவறுதான், நாம் சத்தமில்லாமல் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது. அதனால்தான் எமது அபிவிருத்தித் திட்டங்களை பலரும் குறை கூறுகின்றனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டுதலில் அபிவிருத்திக்கான சிறப்பான மூலோபாயங்களை அரசு அடையாளம் கண்டுள்ளது - என்றார். (வ-5)

### கொலைக் குற்றச்சாட்டு

# இணையத்தளத்தில் வெளியான செய்திக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 27
ஊர்காவற்துறையில் கர்ப்பிணிப் பெண் கோரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்துடன், ஒருவரைத் தொடர்புபடுத்தி இணையத் தளங்களில் செய்தி வெளியிடப்பட்டமைக்கு எதிராக ஒருவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.
இவ்வாறு யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்தார்.
கொலையுடன் தொடர்புபடுத்திய அந்தத் தகவலில், பொலிஸாரால் தேடப்படும் ஒருவராக அவரைத் தகவலிட்டு புகைப்படமும் பதிவேற்றப்பட்டுள்ளது என்றுகூறி அவர் முறையிட்டார். அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிடுமாறு அறிவுறுத்தியதாக ஸ்ரனிஸ்லஸ் மேலும் தெரிவித்தார். (வ-4,101)



# ரம்சியாவின் உடல் நேற்று நல்லடக்கம்

தீவகம், ஊர்காவற்துறையில் கொலை செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை இடம்பெற்றன. பலரது கண்ணீர், கதறல்களுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.
நெடுந்தீவைச் சேர்ந்தவரும் கணவனின் பணி நிமித்தம் ஊர்காவற்துறை கரம்பனில் வசித்து வந்தவருமான ஞானசேகரன் மேரிரம்சியா (வயது 27) என்ற 8 மாதக் கர்ப்பவதியே கடந்த செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். அவரது சிசுவும் உயிரிழந்திருந்தது. மண்டையோட்டு எலும்புகள் நொருங்குமளவுக்கு அடித்து அதனுள் இருக்கும் மூளை சிதைவடைந்தே அவர் உயிரிழந்தார் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது. அவரின் இறுதிக் கிரியை நெடுந்தீவில் உள்ள அவரது வீட்டில் நேற்றுமாலை இடம்பெற்றது. அவரது உறவுகளும் கணவனும் பிள்ளையும் கதறி அழுத காட்சிகள் அனைவரையும் கண்ணீர் சிந்த வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் கர்ப்பிணியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இந்தக்கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4)

# சு. கட்சியைப் பிளவுபடுத்த மகிந்த இடமளிக்கமாட்டார்


## அடித்துக் கூறுகிறார் டிலான்

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் பொது எதிரணியும் ஒரு போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் வகையில் நடந்து கொள்ள மாட்டார்கள் என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நுகேகொடையில் நாளை (இன்று) பொது எதிரணியின் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அரச தரப்பில் உள்ளவர்களுக்குத்தான் கூறியுள்ளதாக மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவரின் தந்திரம் எப்படியிருக்கின்றது. இதனைத்தான் டிக்கிரி மூளை என்பது.
எவ்வாறாயினும் மைத்திரிபால, மகிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகிய மூவரில் ஒருவர் குறைந்தாலும் கட்சியை முன்கொண்டு செல்ல முடியாது. கட்சியை வெற்றிப் பாதைக்கு கொண்டுசெல்ல மூன்று பேரின் ஒற்றுமையும் வேண்டும்.
பொது எதிரணியில் உள்ள எமது கட்சியினரும் இதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். வேறு தரப்பினரே இதனைக் குழப்ப முயற்சிக்கின்றனர் - என்றார். (வ-5)

# ஓரினச் சேர்க்கை விவகாரம் சபையிலும் எதிரொலித்தது

கொழும்பு, ஜன. 27
கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த ஓரினச் சேர்க்கை தொடர்பான கருத்துக்கள், நாடாளுமன்றத்தில் நேற்று எதிரொலித்தன.
இந்த விவகாரத்தால் கடந்த வாரம் அமைச்சரவையிலும் கடும் விவாதம் இடம்பெற்ற நிலையில் நேற்று நாடாளுமன்றத்திலும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர் மருத்துவ (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதம் ஆரம்பமானது.
இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான பியல் நிசாந்த, ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெறுவதற்காக ஓரினச் சேர்க்கை என்ற சமூக விரோத நிபந்தனை ஏற்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இதனால், எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் ஏற்படும் - என்றார்.
குறுக்கிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும, அவ்வாறு எந்தவொரு யோசனையும் முன்வைக்கப் படவில்லை. நீங்கள் கூறுவது தவறு, என்று சுட்டிக்காட்டினார். 'இல்லை. அப்படியொரு யோசனை முன்வைக்கப்பட்டது எனவும், அதைத் தான் நிராகரித்துள்ளேன் எனவும் அரச தலைவர் மைத்திரிபால கூறியுள்ளார்' என்று பியல் நிசாந்த வாதிட்டார்.
இதையடுத்துக் கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை சபையில் இருக்கின்றது.
இதைப்படித்துப்பார்த்தால் உண்மை நிலையை அறிந்து கொள்ளலாம். ஓரினச்சேர்க்கை என்ற எந்தவொரு யோசனையும் முன்வைக்கப்படவில்லை. பாலியல் நாட்டம் என்ற விடயமே தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறானவற்றை நாம் நிராகரித்து விட்டோம் - என்றார். (வ-5)

## புதிய இந்தியத் தூதுவருடன் அமைச்சர் மங்கள சந்திப்பு



கொழும்பு, ஜன. 27

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக பொறுப்பேற்றுக்கொண்ட தரன்ஜித் சிங்சந்து, அயலுறவுத்துறை அமைச்சர் மங்களசமரவீரவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அயலுறவுத்துறை அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தரன்ஜித் சிங் சந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து தமது நியமனப் பத்திரங்களைகையளித்து, முறைப்படி இலங்கைக்கான தூதுவராக பதவியேற்றுக் கொண்டார். இந்த நிலையிலேயே அவர் அயலுறவுத்துறை அமைச்சரை முதல் முறையாக சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான எந்தத் தகவல்களும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

சீனக்குடா எண்ணெய்க் குதங்கள் தொடர்பான விவகாரம் உள்ளிட்ட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள், புதிய இந்தியத் தூதுவருடன் பேச்சு நடத்துவதற்காக இலங்கை அரசு காத்திருந்த நிலையிலேயே சந்திப்பு இடம்பெற்றது.

இந்தியத் தூதுவராக பதவியேற்க கொழும்புக்கு வருவதற்கு முன்னர், தரன்ஜித் சிங் சந்துவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனியாக சந்தித்து கலந்துரையாடியிருந்தார். புதுடில்லியில் கடந்த 20ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இலங்கையுடனான உறவுகள் தொடர்பான இந்தியாவின் எதிர்பார்ப்புகள் மற்றும் விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவருகிறது. (வ-5)

## வடக்கு சுகாதாரத் துறை குறித்து ஆராய வருகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜன. 27

வடக்கு மாகாண வைத்தியசாலைகளிலுள்ள பிரச்சினைகள் குறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக 3 நாள்கள் பயணம் மேற்கொண்டு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்குக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மருத்துவ (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே வடக்குக்கான தனது பயணம் தொடர்பில் சுகாதார அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை தம்மைச் சந்தித்து சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைக்கலாம் என்றும் அவர் கூறினார்.

'திறப்பு விழா நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நான் வடக்குக்குச் செல்லவுள்ளேன். பெப்ரவரி 18,19,20 ஆகிய திகதிகளில் வடக்கில் இருப்பேன். வைத்தியசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் உட்படச் சகல விதமான சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் என்னிடம் தெரிவிக்கலாம்' என்று அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார் . (வ-4)

## கடற்படை அதிகாரியின் விளக்கமறியல் நீடிப்பு

### தமிழர் இருவரைக் கடத்திச் சென்று கொன்றார் என்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜன. 27

இரண்டு தமிழர்களைக் கடத்திச் சென்று கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் கடற்படை புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியை மேலும் 14 நாள்களுக்கு விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

வெலிசறை கடற்படை முகாமின் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய அனில் மாபா என்ற இந்த அதிகாரி, 2009ஆம் ஆண்டு யோகநாதன், பிரேமானந்தன் ஆகியோரைக் கடத்திச் சென்று கொலை செய்ததார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அது பற்றிய விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றப் புலனாய்வு பிரிவினர் மன்றில் நேற்று முன்னிலையாகி, இந்த வழக்குத் தொடர்பில் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்கான அனுமதியைக் கோரினர். மன்று அதற்கு அனுமதி வழங்கியது. இதன் போதே கடற்படை புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (வ-4)

## தானியக் களஞ்சியசாலை மன்னாரில் நேற்றுத் திறப்பு

மன்னார், ஜன. 27

10 ஆயிரம் மெற்றிக்தொன் தானியத்தை களஞ்சியப்படுத்தும் வசதிகளுடன் 264 மில்லியன் ரூபா செலவில் மன்னார் முருங்கனில் அமைக்கப்பட்ட தானியக் களஞ்சியசாலையை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுத் திறந்து வைத்தார்.



நிதி அமைச்சு மற்றும் உலக வங்கியின் நிதி உதவியுடன் மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் பகுதியில் இந்தத் தானிய களஞ்சியசாலை திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இணைந்து தானியக் களஞ்சியசாலையைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் மதத்தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள், அமைச்சின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (வ-4,56)

## சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

## 10 நிமிடங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வழிநடத்தல் குழுவின் கடந்த கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது பதிலைச் சொல்வதற்குக் கால அவகாசம் கேட்டது. இன்றைய (நேற்றைய) கூட்டத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது முடிவை - பதிலைச் சொல்ல வில்லை. இதனால் கூட்டம் 10 நிமிடங்களிலேயே முடிவடைந்தது'' என்று, வழிநடத்தல் குழுவின் உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததும் அறிவித்தது. அதற்காக கடந்த ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில் புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவும் அமைக்கப்பட்டது. நாட்டின் தன்மை, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம், அதிகாரப் பகிர்வு என்பன தொடர்பில் ஆராய்ந்து புதிய அரசமைப்புக்கான யோசனைகளை முன்வைப்பது இந்தக் குழுவின் முக்கிய பணியாக இருந்தது.

பல தடவைகள் இந்தக் குழு கூடிப் பேசிய போதும் இதுவரையில் இணக்கமான ஒரு முடிவு எட்டப்படவில்லை.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை டிசெம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது பிற்போடப்பட்டது. ஜனவரி மாதம் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் உபகுழு அறிக்கை மீதான விவாதம் நடைபெறும் போது வழிநடத்தல் குழுவின் அறிக்கை முன்வைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது.

அதற்கு முன்னதாக ஜனவரி மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில், குழுவின் கூட்டத்தை ஒத்தி வைக்கும் முடிவும், 9, 10, 11 திகதிகளில் நடைபெறவிருந்த விவாதத்தை ஒத்தி வைக்கும் முடிவும் எடுக்கப்பட்டது. மீண்டும் எப்போது கூடுவது என்று தீர்மானிக்கப்படாமலேயே குழு கலைந்தது.

இந்த நிலையில் வழிநடத்தல் குழு நேற்று வியாழக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது. கூட்டம் 10 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு கால நீடிப்புத் தேவை என்று தெரிவித்தது. இதற்கு அமைவாக வழிநடத்தல் குழுவின் கூட்டம் அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-5)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடைக்கான கேள்விச் சுற்றின்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும்இந்துமத அலுவல்கள் அமைச்சரிடம், வாசு தேவ நாணயக்கார எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கவே அவகாசம் கோரப்பட்டுள்ளது.

போரின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு தங்கம் எங்கேனும் நம்பிக்கைப் பொறுப்பில் வைப்பீடு செய்யப்பட்டதா?, இந்த வைப்பீடுகளைக் கணக்கிட முடியுமா?, இதுவரையில் அவர்களின் தங்கம் அவர்களுக்குத் திருப்பிக் கிடைக்கவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அறிவாரா? என்று நாடாளு மன்ற உறுப்பினர் வாசுதேவ கேள்வியெழுப்பினார். (வ-5)

**வீடு வாடகைக்கு**
இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(வாகனத்தரிப்பிடம் உண்டு)
076 997 9528, 077 494 9485, 077 210 9216

**வீடு வாடகைக்குண்டு**
கோப்பாய் வீதி, உரும்பிராயில் 3 அறைகள் மற்றும் சகலவசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. மாதம் - 5000/=
முற்பணம் - 100, 000/=
077 082 2846, 077 272 0561

✓ சட்டமாணி அனுமதிப் பரீட்சை - 2017 (திறந்த பல்கலைக்கழகம்)
✓ சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை (ஆங்கில மொழி மூலம்)
போட்டிப் பரீட்சையில் உயர் சாதனை பெறல்
(சட்டத்துறையினரின் சிறப்பு வழிகாட்டல்)
ஆரம்பம் - 28.01.2017 - சனி 3P.M
D.C.M. கல்லூரி
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) Jaffna.
076 362 6304

**வேலையாள்கள் தேவை**
அச்சகத்தில் பணிபுரியக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை.
- பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. (யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
- அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.
075 029 2392

**Air Ticket & Visa**
சகலநாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள், விசாக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சென்னை, மதுரை விசேட விலைக்கழிவுடன் 23, 800/=
மலேசியா, தாய்லாந்து, பாங்கொக், இந்தியா நாடுகளுக்கான விசாக்களை மிக விரைவில் பெறலாம்.
Air Ticketing வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளுடன் தற்போது.
SB Travels & Tours(Pvt) Ltd.
216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1080, 81 / 076 691 1082, 83

**உடனடித் தேவை**
யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு நித்திய பூசைகள் செய்வதற்கு "பிரதம குருக்கள், உதவிப் பூசகர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குவதற்கு வீடு வழங்கப்படும். கீழ்க்காணும் தொலை பேசிகள் ஊடாக தொடர்பு கொள்ளவும்.
077 843 5771, 072 4945906
021 222 2797 அல்லது நேரில் வரலாம்.
தலைவர், பரிபாலன சபை, ஸ்ரீ சிதம்பரநடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில், அத்தியடி, யாழ்ப்பாணம்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27

சித்தன்கேணி வட்டு. இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அதன் செயலர் அறிவித்தார். இந்தக் கூட்டத்தில் நிர்வாகக்குழு தெரிவு செய்யப்படவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் வருகைதருமாறு அவர் கேட்டுள்ளார். (வ-10)

## நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 27

வடமாகாண நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை தொடங்கி தொடர்ந்து மூன்று நாள்கள் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அறிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் நீர்வளத்தை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் என்னும் விடயப் பரப்புகளை உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்துக்கு பொருத்தமான ஒரு நீரியல் கொள்கைளை வகுப்பதற்காக பன்னாட்டு மற்றும் உள்ளூர் நிபுணர்கள் கலந்து கொள்ளும் ஆய்வரங்காக இது நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கின் முதல் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## நாடகப் பயிற்சிப் பட்டறை

கொழும்புத்துறை, ஜன. 27

யாழ். ராகஸ்வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் நாடக பயிற்சிப் பட்டறையும் பாடல் போட்டியும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. காலை 9 மணி தொடக்கம் பி.ப 1 மணிவரை நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறையும் பி.ப 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மாபெரும் குரல் தேர்வுக்கான பாடல் போட்டியும் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் குறித்த நேரத்தில் கலந்து கொள்ளுமாறு ராகஸ்வரம் இசை மன்றப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (வ-135)

ST. CLAIR COLLEGE
கனடாவில் உயர்கல்வி
கனடா சென்று உயர்கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கீழ் காணும் துறைகளில்
- Business Management
- Computer System & Networking Technology

Duration : 03 Years
6 Months : IIS City Campus, Jaffna
2½ Years : St.Clairs College, Canada
நேர்முகத்தேர்வு: 30.01.2017 திங்கட்கிழமை
10.00a.m to 8.00p.m.
(உங்கள் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்)
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுகளுக்கு முந்துங்கள்
Hotline: 071 777 5666
info@iis.edu.lk
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
021 222 8060 | 021 4900 900



மனமுவந்த பாராட்டுக்கள்
கடந்த 10.01.2017 அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
" அரசறிவியல் சிறப்புக் கலைமாணி"
பட்டத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மாதகல் வடக்கைச் சேர்ந்த
செல்வி லக்ஸ்சினி சிவபாலசுப்பிரமணியம்
(B.A.(Hons) First Class)
அவர்கள் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.
Congratulations
Best Wishes
அன்புடன் வாழ்த்தும்: மாமா, மாமி, மைத்துனர்கள் (பிரான்ஸ்)



sierra cables
39 வருடங்கள் பழமைவாய்ந்த Sierra Cables நிறுவனம் புதிய பரிணாமத்தில் வடக்கு மாகாணத்தில்...
வீட்டுக்குத் தேவையான மற்றும் தொழிற்சாலைக்கு தேவையான Cables ஐ உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனமான Sierra Cables நிறுவனம் இன்று தொடக்கம் மூன்று நாள்கள் (27,28,29) யாழ் மண்ணில் நடைபெறும் வர்த்தகக் கண் காட்சியில் 162 ஆவது காட்சியறையில் தமது நிறுவனத்தின் உற்பத்தி சம்பந்த மான விளக்கங்களை வழங்கவும் அவற்றினைக் காட்சிப்படுத்தவும் உள்ளனர்.
TRUSTED SAFETY FOREVER
Fire PROTECT
ISO 9001 , 14001 & OHSAS 18001
CERTIFIED COMPANY
SLS 1186 733 1143 750
CERTIFIED BY THE SRI LANKA STANDARDS INSTITUTION FOR QUALITY
வர்த்தக கண்காட்சிக்கு வருகைதரும் அன்பான மக்களே!
தவறாது எங்களுடைய காட்சியறைக்கும் வருகைதந்து தரமான Cables ஐத் தெரிவு செய்வதற்குத் தேவையான மேலதிக விளக்கங்களை பெற்றுக் கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றனர் Sierra Cables நிறுவனத்தினர்.




Sierra Cables PLC
PO Box 6, Kaduwela,
Sri Lanka
T: 011 4412000
F: 011 4412573/ 011 2770291
E: info@sierracables.lk
W: www.sierracables.com

New போத்தீஸ்
எங்கும் இல்லாத புத்தம் புதிய டிசைன்களில் ஆடைத் தெரிவுகளுக்கு
திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்
Alayam of Silks
ஆடவர்கள், சிறுவர் சிறுமியருக்கான அனைத்துத் தெரிவுகளும் ஒரே இடத்தில்
ஆண், பெண்களுக்கான திருமண பட்டுப் புடைவைகள் மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து புடைவைகளும்
New Collection New Style
காரியாலயத்துக்குரிய புடைவைகள்
(Office wear sarees)
ஒரே நிறத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.
இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டம்)
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5464





## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் பூபாலன் ஜெகன் அவர்களின் அன்புத் தந்தை

**தம்பன் பூபாலன்**

அவர்களின் மறைவையொட்டி

துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

## மரண அறிவித்தல்கள்

### கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்

**(ஓய்வுபெற்ற வேலணை பிரதேச சபைச் செயலகம்)**



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு 5ஆம் வட்டாரம் சிற்றாடலை வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் நேற்று (26.01.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை - விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நகுலேசபிள்ளை - பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், நித்தியலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் இராசையா, காலஞ்சென்றவர்களான கனகம்மா, விநாயகரத்தினம்,வசந்தலட்சுமி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் பெறாமகனும், சற்குணலிங்கம், தேன்மொழி (கனடா), கிருபாகரன் (சுவிஸ்), சுதாகரன், பிரபாகரன் (ஜேர்மனி),ஜங்கரன், விஜயரூபன், காந்தரூபன் (பிரான்ஸ்), நாகலோஜினி, லிங்கரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிர்காமநாதன் (கொழும்பு),கைலாயநாதன் (கனடா), விஜயலட்சுமி (கனடா), இராஜேஸ்வரி,தனலட்சுமி, காலஞ்சென்ற வரதலட்சுமி மற்றும் மல்லிகாதேவி (கனடா), செல்வநிதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அருளானந்தத்தின் (ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி வடபிராந்திய முகாமையாளர் - தற்போது NDB வங்கியின் வடபிராந்திய முகாமையாளர்) சகலனும்,அருணன் (வேலணை பிரதேச சபை), அஜந்தன், சுகன்ஜா, அருஜீனா (IIS City Campus விரிவுரையாளர்) ஆகியோரின் பெரிய தந்தையும், வாருணி (கனடா), யதுஷா (கனடா), ருத்திலா ஆகியோரின் மாமனும், யஷ்வினியின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(AJA/00635)
(11,18)

தகவல்: **குடும்பத்தினர்.**



தோற்றம்
08 . 01 . 1937

மறைவு
24 . 01 . 2017

### பத்மநாதன் நதானியல் இராஜதுரை

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்- தொலைத்தொடர்பு பிரிவு)**

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிடாரி கோயிலடி, உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் நதானியல் இராஜதுரை 24.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை - அக்னெஸ் தம்பதியரின் அன்பு மருமகனும் விக்ரோரியாவின் அன்புக் கணவரும் கீதாஞ்சலி (சுவிஸ்), சுரேஸ்குமார் (லண்டன்), புஷ்பாஞ்சலி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோசப் திரவியம் (சுவிஸ்), ஜெனிட்டா (லண்டன்), யூட் றிக் விஜி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜென்சி, மெனி, ஷேர்லி, ஜெஸ்லின், ஷெரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நீ. கமலம், ப.தேவசகாயம், பா. அலிஸ் சரோஜினி மற்றும் து. கமலலோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றெ. தேவயோகம், சூ.யேசுதாசன் (ஜேர்மனி), சூ.சௌந்தரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 118, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து இன்று (27.01.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்திற்கு இரங்கல் திருப்பலிக்கென எடுத்துச் செல்லப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:இ.விக்ரோறியா (மனைவி)**

**021 222 9107, 072 611 1986**

## கொக்குவில் இந்து மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 27

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்கள் பிரதி அதிபரிடம் விண்ணப்பத்தை பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்தார். (வ-10)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமேஸ்வரி இராசலிங்கம்

யாழ்.சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசலிங்கம் 25.01.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**கொட்டடி, உடுவில்,**
**சுன்னாகம்.**

(AJA /00625)
(11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 224 1315**



### திருமதி ராஜேஸ் புவனேஸ்வரி பிலிப்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ் புவனேஸ்வரி பிலிப் 20.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிமியோன் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பிலிப் துரைராஜாவின் அன்பு மனைவியும் றெரன்ஸ் விமல்ராஜ் (கனடா), ஜேன் புளோரிடா (US), செறின் லயண்டா (கனடா), இவ்விளின் மறிண்டா (கனடா), இவோன் மக்சில்டா (சுவிஸ்), காலஞ்சென்ற ஜஸ்மின் பிறிசில்டா ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வமணி (ராணி - கொழும்பு), ஜெகசோதி மலர் (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா, ஆனந்த வடிவேல் (கொழும்பு), பேபிசரோஜா (கனடா), நித்தியானந்த தேவி (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சக்திகுமார் மற்றும் விக்னேஸ்வரி (US) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெனஸ்ரா (கனடா), செல்வம் (US), ரவி (கனடா), வேல்ரமணன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் மரியதாசன் (இத்தாலி), அலோசியஸ் (பிரான்ஸ்), ஜசிந்தா (சோதி), காஞ்சனா (கொழும்பு), ஞானேந்திரா (கனடா), ராசலிங்கம் (ஜேர்மனி), ஜேன் (பிரான்ஸ்), ஜெயாகாந்தி (US), ஜேக்கப் புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிளமன்ஸ், ஜெனிபர், பிறையன், றாயன், ஸ்ரெபானி, றெஜீன், றெனோஸ், லக்ஷிகா, பியோனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2017) சனிக்கிழமை Christ the king cemetery ,Canada இல் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**123, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**சிறீஸ்கந்தராஜா**
**(சகோதரன்)**

**பிலிப் (கணவர்)- +164 732 90210**

## ஸ்கந்த ஹோம வழிபாடுகள்

தென்மராட்சி, ஜன. 27

நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி ஸ்கந்த ஹோம வழிபாடுகள் நாளையும் நாளைமறுதினமும் கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நாளை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி 5 மணி வரையும் மறுநாள் காலை தொடக்கம் யாக வழிபாடு, ஹோம வழிபாடு, அஸ்டோத்திர கலச சங்காபிசேகம், சிறப்பு வழிபாடு, சண்முகார்ச்சனை ஆகியவை இடம்பெறும்.

ஆலய முதன்மைக் குரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார கணேசக் குருக்கள் தலைமையில் நாட்டின் பல பாகங்களிலிருந்து தலைசிறந்த சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு ஹோம வழிபாட்டில் பங்குபற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 27

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் தைமாத இதழ் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்குத் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகன் தாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் மதிப்பீட்டுரையைப் புலோலி புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## கர்த்தர் ஆலயம் திறப்பு

கொழும்புத்துறை, ஜன.27

குருநகர் தொடர்மாடிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கர்த்தர் ஆலயத் திறப்பு விழா நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்.மறைக் கோட்ட குரு முதல் வரும் யாழ். பேராலய பங்குத் தந்தையுமான அருட்திரு சி.எக்ஸ் நேசராஜா அடிகள் புதிய ஆலயத்தைத் திறந்து வைத்துத் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

1988ஆம் ஆண்டு சிற்றாலயமாகக் கட்டப்பட்ட இந்த ஆலயம் போரால் முழுமையாக சேதமடைந்து இராணுவப் பாதுகாப்பு வேலிக்குள் சிக்கியிருந்தது. 2010ஆம் ஆண்டு இந்தப்பகுதி விடுவிக்கப்பட்டதையடுத்து முன்னாள் பேராலய பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எச். சகாயநாயகம், முன்னாள் ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரின் அனுமதியுடன் இந்தப் பகுதி மக்களால் இந்தப் புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. (வ-135)

## அரச ஊழியர்களுக்கு மீண்டும் சம்பள அதிகரிப்பு

கொழும்பு,ஜன.27

அரச சேவையாளர்களின் தொழிற்தரத்தை மையமாகக் கொண்டு அவர்களுக்கு வழங் கப்படும் சம்பளத்தில் 2 ஆயிரம் ரூபா தொடக்கம் 16 ஆயிரம் ரூபா வரையிலான சம்பள அதிகரிப்பை மீண்டும் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பானது இம்மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன்ரத்ன பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள அரச மருந் தாளர் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## தாயானார் சின்னஞ் சிறுமி பேருந்து நடத்துநர் கைது

பதுளை, ஜன.27

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றினை எதிர்பார்த்திருந்த மாணவி ஒருவர், ஆண் குழந்தையொன்றை பிரசவித்த சம்பவமொன்று பதுளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவி பதுளை அரசினர் மருத் துவமனையில் நேற்றுமுன்தினம் குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட எல்ல பொலிஸார் பேருந்து நடத்துநரொருவரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளனர்.

அதேநேரம், அப்பகுதி குடும்பநல மருத் துவத்தாதி குறைந்த வயதுள்ள இம் மாணவி கர்ப்பம் தரித்திருந்தமையை அறிந்திருந்தும், அதுபற்றி மேலதிகாரிகளுக்கு அறிவிக்காமையினால் அவருக்கெதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-ய-4)

# மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களை விசாரிக்க தனியான நீதிமன்றம் வேண்டும்

## அமைச்சர் அசோகா அபயசிங்க தெரிவிப்பு

கொழும்பு,ஜன.27

மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களுக்கு எதிரான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக தனியான நீதிமன்றம் அமைக்க வேண்டும் அல்லது இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒன்றிரெண்டைத் தெரிவு செய்ய வேண்டும் என்று அமைச்சர் அசோகா அபயசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், மகிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டு எம்மீது சுமத்தப்படுகின்றது.

நாம் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம். சுமார் 15 பேரளவில் இப்போது பிணையில் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதும், 2018 அல்லது 2019 இல் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படலாம். அதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

இந்த விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு தனியான நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் அல்லது இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒன்றிரெண்டைத் தெரிவு செய்து தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றுவோம். அதற்காக அரசியல் பழி வாங்கல் போல் அவசர அவசரமாக செய்ய முடியாது. நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுத்தும் செய்ய முடி யாது. எல்லாம் சட்டப்படியே இடம் பெறும் - என்றார். (ஐ)

# பருத்தித்துறை கலாசார மையம் நாளை திறப்பு

புலோலி புற்றளையில் புதிதாகக் கட்டப்பட்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கான பருத்தித்துறை கலாசார மைய நிலையக் கட்டடத்தின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. உள்ளக அலுவல்கள் வட மேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் கலாசார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார பிரதியமைச்சர் பாலித்த தேவப்பெரும யாழ்ப்பாண மாவட்ட இணைப் புக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொள்வர். (வ-173)

# துமிந்தவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.27

துமிந்த சில்வா தொடர்பாக வழக்கு விசா ரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

துமிந்த சில்வா நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கில் முன்னிலையாகாமை தொடர்பில் மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## ஆண்டுகள் ஐந்தில் நீங்காத நினைவலைகள்



அமரர் நடராசா காசிவேந்தன்
MA, B.Com, Dip in PDS, Dip in MgF
(முன்னாள் முகாமைப் பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்கம், உடுவில்)

தோற்றம் 25.06.1967 — மறைவு 22.01.2012


திதி: தை அமாவாசை (27.01.2017)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்த
- அருந்தவமே!
வாழ்வினில் நறுமணம் பரப்பி இல்லத்தின்
- விருட்சமாய்
உறவுகள் பேணிடும கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பால் பகிர்ந்தே
ஊரும் உலகமும் போற்றிய வேந்தனே!
ஆண்டுகள் ஐந்து பறந்து ஓடினாலும்
பிரியாது என்றும் உங்கள் நினைவுகள்

குடும்பத்தினர்.
கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உடுவில் கிழக்கு.
(a.j.a)(m 00481) (13.18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 . 11 . 1947



உதிர்வு 28 . 12 . 2016


### நாகன் ஞானபண்டிதன்

கடந்த 28.12.2016 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் நாகன் ஞானபண்டிதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (27.01.2017) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 12, புகையிரத வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி க. பாமா
அவர்களின் துணைவர்
ந.கண்ணதாசன்
(ஆசிரியர் கிளி/ இராமகிருஸ்ண வித்தியாலயம் கிருஸ்ணபுரம்)
அவர்கள் காலமான செய்தியறிந்து துயர் பகிர்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி திலகவதி சிவலோகநாதன்



அன்னை மடியில்
25.08.1949

ஆண்டவன் அடியில்
08.02.2016

அன்னம் கூட அவளிடத்தில் வந்து நடைபயிலும்
இன்னிசையைப் பாடம் கேட்க எண்ணிவரும் குயிலும்
இயற்கையெல்லாம் அவள் குரல் இனிமையிலே துயிலும்
என்ற கவிஞர் உடுமலை நாராயண கவியின்
கவிவரிகளுக்கு இலக்கணம் வகுத்த இலக்கிய
நாயகியே நீ மறைந்து ஓராண்டு - ஆனாலும்
உன் நினைவுகள் எங்கள் சிந்தையில்
இன்னமும் சிறகடித்த வண்ணம் உள்ளன
காலங்கள் கடந்து வந்தாலும் உன் நினைவு
மட்டும் என்றும் எங்களிடம் பசுமையாய் நிலைத்து நிற்கும்

மடத்தடி, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 17 . 06 . 1956



உதிர்வு 29 . 12 . 2016

அமரர் வேலுப்பிள்ளை வல்லிபுரம் (சின்னராசா)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (28.01.2017) சனிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு.
தாளையடி. 077 330 1494

குடும்பத்தினர்.
(கே.280) (13.18)

# 9 குடும்பங்களின் காணி முகமாலையில் விடுவிப்பு

## இன்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும்

கிளிநொச்சி, ஜன.27

முகமாலைப் பகுதியில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்த காணிகளில் ஒரு தொகுதி இன்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன. 9 குடும்பங்களின் காணிகள் இன்று வழங்கப்படும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பி. ஜெயராணி தெரிவித்தார்.



"முகமாலை கிராமத்தில் காணிகள் விடுவிக்கப்பட்டபோதும் 9 குடும்பங்களின் காணிகளில் தொடர்ச்சியாகப் படையினர் நிலைகொண்டிருந்தனர். எனினும் இந்தக் காணிகளையும் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். இன்று மாலை 2மணியளவில்காணிகள் உரிமையாளர் களிடம் கையளிக்கப்பட உள்ளன. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார்" என்றார்.

கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளது முகமாலை. போர்க் காலத்தில் விடுதலைப் புலிகள் மற்றும் படையினரின் பலமான முன்னரங்கப் பகுதிகள் அமைந்திருந்த இடம். உலகின் மிக ஆபத்தான கண்ணி வெடி வயல்கள் இந்தப் பகுதியிலேயே இருக்கின்றன.

முகமாலைக் கிராமத்தின் ஒரு பகுதிக் காணி கடந்த டிசெம்பர் மாதம் படையினரால் விடுவிக்கப்பட்டது. எனினும் இராணுவத்தின் கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் 9 குடும்பங்களின் காணிகளில் தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தனர். தமது காணியை விடுவிக்குமாறும் இல்லை எனில் இராணுவத்தினருடைய வேலியை சற்று உள் நோக்கி அமைக்குமாறும் அந்தக் குடும்பத்தினர் கோரி வந்தனர். இதற்கு இராணுவத்தினர் சம்மதித்தபோதும் வேலிகளை உள்நோக்கி அமைக்கவில்லை. அரசோ, தனியார் நிறுவனமோ தற்காலிக வீடுகள் தரும்போது இராணுவம் காணியில் இருந்துவெளியேறாவிட்டால் இராணுவ முகாமினுள் அத்துமீறி உள்நுழைந்தாவது வீடு அமைப்போம் எனக் காணி உரிமையாளரான பெண் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் படையினர் தற்போது அந்தக் காணியை விடுவித்துள்ளனர். (உ-21,6)

# ஒட்டுமொத்த தமிழரையும் முட்டாளாக்குகிறார் ரணில்

## சுரேஸ் காட்டம்

வவுனியா, ஜன. 27

காணாமற்போன 23 ஆயிரம் பேருக்கும் என்ன நடந் தது. அவர்கள் தொடர்பில் இந்த அரசு உருப்படியான பதிலை வழங்காது தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க ஒட்டு மொத்த தமிழ் மக்களையும் முட்டாளாக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

23 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். கூட்டு அரசு அவர்களின் பட்டியலை வெளியிட வேண்டும். பட்டியல் இல்லாவிடின், இல்லை என்று சொல்ல வேண்டும். தமிழ் மக்களின் தலைவர் என்று சொல்லப்படுகின்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இந்த விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது உறவுகள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். ஆனால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவோ ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் முட்டாளாக்கும் வகையில் பதில் சொல்கின்றார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிநாடு செல்வதற்கும் வாய்ப்பு இல்லை.

நாம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று சொல்வதற்குள், கைது செய்யப்பட்டவர்களும், சரணடைந்தவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அரச தரப்பின் படைகளிடமே சரணடைந்தார்கள். அரச படைகளே கைது செய்தார்கள். அவர்கள் தொடர்பில் தெளிவான - திடமான பதிலை கூட்டு அரசு சொல்ல வேண்டும்.

அவர்கள் சொல்ல மாட்டார்கள். சொன்னால் காணாமல் ஆக்கப்பட்ட 23 ஆயிரம் பேரும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பதைத்தான் சொல்ல வேண்டிவரும். இது இலங்கை அரசுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும். இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களை விசாரிக்க வேண்டிவரும். பாதுகாப்புத் தரப்பினர் மாட்டிக் கொள்வார்கள். அவர்கள் பதில் சொல்லவேண்டி வரும். இதனால் கூட்டு அரசு பொறுப்பான பதிலை வழங்காது - என்றார். (வ-5-402)

# ஜனவரியில் மட்டும் குடாநாட்டில் 450 பேருக்கு டெங்கு பரவியது

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் 25ஆம் திகதி வரை 450 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் என்.நந்தகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார். யாழ்ப்பாணம், சாவகச்சேரி, உடுவில், கோப்பாய், வடமராட்சி கிழக்கு உட்பட பருத்தித்துறை ஆகிய இடங்களில் டெங்கு நோய் பரவக்கூடிய சூழல் அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

தண்ணீர் சேகரிக்கும் பாத்திரங்கள், பயன்படுத்தபடுகின்ற, பயன்படுத்தப்படாத நீர்த்தாங்கிகள், கட்டி முடிக்கப்படாத கட்டங்கள், அதனைச் சுற்றியுள்ள இடங்கள், மரப்பொந்துகள், எறியப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள், இளநீர்க் கோம்பைகள், வெற்று சோடாப் போத்தல்கள், ஐஸ்கிறீம் கோப்பைகள், வெற்றுக் கலன்கள் என்பவற்றில் தண்ணீர் தேங்கி நிற்பது டெங்கு நுளம்பு பரவுதலை தீவிரப்படுத்துகிறது என்று சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர். பொதுமக்கள் இது குறித்து அவதானமாகச் செயற்படுவதன் மூலமே இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

"நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பான சூழலை முதலில் இல்லாதொழிக்க வேண்டும். சுகாதார சேவைகள் திணைக்களமோ அல்லது அதனுடன் சேர்ந்து இணைந்து செய்யக்கூடிய திணைக்களங்களும் தனியார் நிறுவனங்களும் பொதுமக்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்" என்றார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர். வேகமாகப் பரவும் டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் பல நடவடிக் ககைகளை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். தற்போது மழை பெய்வதால் டெங்கு நோய் பரவக் கூடிய வாய்ப்பு மேலும் அதிகரிக்கும், வாய்ப்பு உள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கடந்த வருடம் ஜனவரி மாதம் 543 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர். அதே எண்ணிக்கையை இந்த வருடமும் எட்டவிடாது தடுக்கவேண்டும்" என்றார் மருத்துவர் நந்தகுமார். (உ-10)

## தமிழில் தேசிய கீதம் கேட்கையில்

# இதயத்தில் குளிரடிக்கிறதாம் அமைச்சர் விஜயகலாவுக்கு

யாழ்ப்பாணம், ஜன.27



"தமிழில் தேசிய கீதம் பாடும் போது எமது இதயம் குளிர்கின்றது. கூட்டாட்சியில் தமிழுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தின் வெளிப்பாடு இது" என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில், நேற்று திறந்து வைக்கப்பட்ட வெளி விவகார அமைச்சின் கொன்சூலர் அலுவலத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தார் அவர்.

நிகழ்வில் உரையாற்றிய அவர், "இன்று யாழில் திறக்கப்பட்ட இந்த அலுவலகம் கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டிருந்தால் போர் நிகழ்ந்திருக்காது.

அன்றைய நாளில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இந்தச் செயலகத்துக்காகக் கொழும்புக்குச் சென்ற பலரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். போருக்கு அதுவும் காரணமாகிவிட்டது" என்றார்.

கடந்த அரசோ அம்பாந்தோட்டையில் துறைமுகம் கட்டுவதிலேயே ஈடுபட்டபோதும் கூட்டாட்சி அரசு மக்களின் தேவை அறிந்து அலுவலகங்களைக் கட்டுகின்றது என்றும் தெரிவித்தார். "யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகமும் சுவிஸ் நாட்டின் துணைத் தூதரகமும் தற்போது உள்ளன.

ஏனைய ஐரோப்பிய நாடுகளினதும், கனடா நாட்டினதும் தூதரகங்களும் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட வேண்டும். அந்த அலுவலகங்கள் திறக்கப்படுவதற்கு எங்கள் வெளியுறவு அமைச்சர் ஆவன செய்து அதற்குரிய ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றார். (101)

# முன்னாள் போராளிகள் மூவர் நேற்று விடுவிப்பு

வவுனியா, ஜன. 27

விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் மூவர் நேற்று சமூகத்துடன் மீளிணைக்கப்பட்டனர். ஒரு வருட மறுவாழ்வுப் பயிற்சிகளின் பின்னர் அவர்கள் விடுவிக் கப்பட்ட னர்.

வவுனியா பூந்தோட் டம் நலன்புரி நிலையத்தில் அவர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நேற்றுக் காலை இது தொடர்பான நிகழ்வு நடந்தது. கார்த்திகேசு நாதன் (முல்லைத்தீவு), குழந் தைவேல் தயாபரன் (கிளிநொச்சி), கணபதிப்பிள்ளை யோகராசா (மட்டக்களப்பு) ஆகியோர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியா புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி, பூந்தோட்டம் புனர்வாழ்வு பணியகப் பணிப்பாளர், பின் இணைப்பு அதிகாரி, சமயத்தலைவர்கள், பூந்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 10 பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. சுயதொழில் தொடங்குவதற்காக அவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

"வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து இதுவரை 12 ஆயிரம் போராளிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு வெளியேறியுள்ளார்கள். வெளியேறியவர்கள் வாழ்வாதாரத்துக்காக அவரர் செய்யும் தொழில்களுக்கு ஏற்ப உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 1,000 பேருக்கு புதிய வீடுகளும் அமைத்து கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. மீள்குடியேற்ற அமைச்சால் புனர்வாழ்வு ஆணையகப் பணிப்பாளர் ஊடாக வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படும்" என்றார் நிகழ்வில் உரையாற்றிய வவுனியா பூந்தோட்ட மறுவாழ்வு நிலைய பொறுப் பதரிகாரி என்.என் ஹமில்டன். (உ-21)

# வவுனியாவில் டெங்கு தீவிரம்

## ஜனவரியில் மட்டும் 36 பேர் பாதிப்பு

வவுனியா, ஜன.27

வவுனியா மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துள்ளது, கடந்த 26 நாள்களில் 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மே.ஜெயா தெரிவித்தார். கடந்த மாதம் இந்த எண்ணிக்கை 19 ஆக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரை 36 பேருக்கு டெங்கு பரவியுள்ளது. கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால் இதன் தாக்கம் இன்னும் அதிகரிக்கக்கூடும். மழை மேலும் நீடித்தால் பாதிப்பும் அதிகமாகும்.



இறம்பைக்குளம் மயான வீதியில் டெங்கு பரவும் வகையில் காணப்படும் சுற்றுச் சூழல் நீண்ட நாள்களாக அப்படியே காணப்படுகிறது

முல்லைத்தீவு, மன்னார், போன்ற பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் வவுனியாவிலேயே டெங்கின் தாக்கம் இந்த மாதத்தில் அதிகமாக உள்ளது. இலங்கைப் புள்ளி விவரத்திலும் இதுவே அதிகம். நகரை அண்டிய பகுதிகளிலேயே தாக்கம் அதிகமாக உள்ளது. இருப்பிடங்கள், பொது இடங்கள், பாட சாலைகள், அலுவலகங்கள் என அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்திருப்பதே இதனைக் கட்டுப்படுத் துவதற்கான சிறந்த வழி. ஆள்களற்ற இடங்களிலும் பொது இடங்களிலும் தொண் டுப் பணிகளை முன்னெடுக்க எல்லோரும் முன் வரவேண்டும் - என்றார். (உ-21)

# அரச-தனியார் பஸ் போட்டியினால் வினை

## சாரதிகள், நடத்துநர்கள் நால்வர் கைதாகிப் பிணையில்

கிளிநொச்சி, ஜன.27

அரச மற்றும் தனியார் பேருந்துகளின் சாரதிகள், நடத்துநர்கள் என நால்வர் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். போட்டி போட்டதன் விளைவாக இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. அதனால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்தினர். எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி வழக்கை ஒத்திவைத்தார் நீதிவான்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது இலங்கை போக்குவரத்து சபை பேருந்து. வட்டக்கச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்தது தனியார் பேருந்து. பளை பகுதியில் பயணிகளை ஏற்றுவதற்கு இரு பேருந்துகளும் முண்டியடித்துப் போட்டி போட்டு ஓடின.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் உரசல் ஏற்பட்டது. பளையில் இரு பேருந்தின் சாரதிகளும் நடத்துநர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் கைகலப்பும் ஏற்பட்டது என்று பயணிகள் தெரிவித்தனர்.

வீதி போக்குவரத்து கடமையில் நின்ற பளைப் பொலிஸார் நால்வரையும் கைது செய்தனர். பேருந்துகளும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டன. பயணிகள் வேறு பேருந்தில் பயணத்தைத் தொடர வேண்டி ஏற்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் இரு பேருந்துளின் சாரதிகளும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். பொலிஸார் அன்று மதியமே நால்வரையும் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தினர் எனப் பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். நால்வருக்கும் ஆள் பிணை வழங்கப்பட்டது.

(உ-6)



# வவுனியா பேருந்து நிலைய இழுபறிப் போராட்டம் முடிவு

## பழையது, புதியது இரண்டையும் பயன்படுத்தும் வகையில் திட்டம்



வவுனியா, ஜன.27

வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் பழைய நிலையத்தில் இருந்து புறப்படுவது என்றும் வெளி மாவட்டச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் புதிய நிலையத்தில் இருந்து புறப்படுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

வவுனியா புதிய பேருந்து நிலையம் கடந்த 16ஆம் திகதி திறக்கப்பட்டது. ஆனால் அங்கிருந்து சேவையை நடத்த முடியாது என்று வவுனியா அரச பேருந்து சாலையினர் முரண்டு பிடித்தனர். அத்தோடு பேருந்து நிலையத்தைத் தாண்டிக்குளத்திற்கு மாற்றுவதால் தமது வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்று நகர பேருந்து நிலையத்தில் உள்ள வர்த்தகர்களும் கவலை தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து இந்தப் பிரச்சினை தொடர்பில் அரச, மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களை வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் சந்தித்துப் பேசினார். அவரது தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடந்தது. சுமார் 4 மணி நேரம் நீடித்தது கலந்துரையாடல். முடிவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபடும் சகல பேருந்துகளும், வவுனியா நகரத்தின் மையத்தில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தமது சேவைகளை ஆரம்பிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அங்கிருந்து புதிய பேருந்து நிலையத்திற்குச் சென்று அங்குள்ள பயணிகளையும் ஏற்றிக் கொண்ட பின்னரே தமது பயணத்தைத் தொடர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதேபோன்று வவுனியா மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அனைத்தும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்தே இனி மேல் தமது சேவையை வழங்கவுள்ளன. பழைய பேருந்து நிலையத்திற்கு வந்த பின்னரே அவையும் தமது பயணத்தைத் தொடருவது என்று முடிவு செய்யப்பட்டது. அங்குள்ள பயணிகளையும்ஏற்றிக்கொண்டு தமதுசேவையைநடத்துவார்கள் என்றும் முடி வெடுக்கப்பட்டது.

ஏனைய மாகாணங்களில் இருந்து வரும் சகல தூரசேவை பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்தின் நுழைவாயில் வழியாக உள்ளே சென்று தரித்து நிற்காமல் பயணிகளை இறக்கி பின் தமது பயணத்தை தொடர வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பான ஒழுங்குகளை நேரக் கணிப்பாளர்களே கவனித்துக்கொள்வார்கள்.

கலந்துரையாடலில்வடக்குமாகாண சபையின் உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன், வடக்கு சுகாதார அமைச்சரின் பிரதிநிதியாக அமைச்சரது இணைப்பு செயலாளர், வவுனியா மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்டச் செயலாளர், வடக்கு போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பிரதி பொலிஸ்மா அதிபர், இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர், மாவட்ட அதிகாரிகள், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்தின் தலைவர், வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத்தினர், மற்றும் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே நேற்றைய தினம் சேவைகள் நடைபெற்றன என்று மக்கள் தெரிவித்தனர். இதனால் இழுபறி முடிவுக்கு வந்தது. (உ-21)

## சர்வமத செயற்பாட்டுக்கு 16 மாவட்டங்கள் தெரிவு

மட்டக்களப்பு, ஜன.27

நாட்டில் இனங்களிடையே நிலவும் கசப்புணர்வைக் களையும் சர்வமத இன ஐக்கிய செயற்பாட்டுக்கு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் உட்பட 16 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவை இணைப்பாளர் ரசிகா செனவிரெட்ண தெரிவித்தார். போரினால் இன ஐக்கியம் சிதைவடைந் துள்ள மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, அநுராதபுரம், இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, பதுளை, பொலன்னறுவை உட்பட 16 மாவட்டங்களிலே இத்திட்டம் எதிர் வரும் பெப்ரவரியிலிருந்து 2019 வரை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதும், நல்லிணக்கத்தை உருவாக்குவதும் தனியே ஒரு சாராரின் அல்லது ஒரு சமூகத்தின் அல்லது ஒரு மதத்தின் பங்களிப்பாக மாத்திரம் இருக்க முடியாது. ஒட்டுமொத்த சிவில் சமூகமும் இந்தச் செயற்பாட்டில் இணைந்து கொள்ள வேண்டும். நிலைமாறுதலுக்கான நீதிதொடர்பாக சிவில் சமூகத்தை அறிவூட்டல், பொறிமுறைகளை உருவாக்குதல், பிரதேச மட்டத்தில் காணப்படும் இன முரண்பாடுகளைத் தீர்ப்பதனூடாக இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல் என்ற மூன்று விளைவுகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனடிப்படையில் சமயத் தலைவர்களும், மதங்களைப் பின்பற்றுகின்ற ஏனைய மக்களும், பொதுநலன் விரும்பிகளும் ஒன்றாக இணைந்து, போரினால் பாதிக்கப்பட்டுள்ள பல்லின மக்களை மனித நேயத்தோடு நாடி அவர்களின் தேவைகளை முழுமை செய்ய முடியும்.

போர் முடிவடைந்து நாங்கள் இப்பொழுது சத்தமில்லாத சூழலில் இருந்தாலும் கூட போரினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ன வகையான விளைவுகளை அடைந்தார்கள், அதனால் அவர்கள் அடைந்த அவலங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கான பரிகாரம், உதவி ஒத்தாசைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இன்னுமொரு போர் இந்த நாட்டிலே ஏற்படாத வண்ணம் இந்த நாட்டு மக்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். எங்களது கடந்த கால கசப்புணர்வுகளின் வைராக்கியங்கள், சந்தேகங்கள், குரோதங்கள் ஒழிக்கப்பட்டு சுமுகமான நிலைமை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். -என்றார். (ஐ-ய-46)

## பள்ளிவாசலுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

திருக்கோவில் பிர தேச செயலகப் பிரி வுக்கு உட்பட்ட பொத்தானைப்பள்ளிவாசலைச்சுற்றி தொல்பொருள் திணைக்களத்தினர் விதித்திருந்த தடை நீக்கப்பட் டுள்ளதாக கிழக்கு மாகாணசபை உறுப் பினர் ஏ.எல்.தவம் தெரிவித்தார். கடந்த டிசெம்பர் 7ஆம் திகதி இப்பள்ளிவாச லைச் சுற்றி, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் எல்லைக் கற்களையும் அறிவுறுத்தல் பலகையை இட்டமையால், அப்பள்ளிவாசலுக்குச் செல்வதற் குத் தடை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக தொல் பொருள் திணைக்களப் பணிப்பாளருக் கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக் கும் இடையிலான கலந்துரையாடலில் பள்ளிவாசலுக்குச் செல்லும் தடையை நீக்குவதற்குஇணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)



கிழக்கு மாகாணத்தில் 336 பாடசாலை அதிபர்களுக்கு நேற்று முன்தினம் நியமனாங் கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகம் அறிவித் துள்ளது. இலங்கை அதிபர்சேவை மூன்றாம் தரத்துக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள் ளனர். சிங்களமொழி மூலமாக 87 பேருக்கும். தமிழ்மொழி மூலம் 249 பேருக்கும் நியமனாங்கள் வழங்கி வைக்கப்பட்டன. திருகோணமலை உவர்மலை விவேகானந் தாக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் அஹமட் புதிதாக நியமனம் பெற்ற பாடசாலை அதிபர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார். (ஐ-ய-46)

## குச்சவெளியில் 1000 பேருக்கு காணி அனுமதிப்பத்திரங்கள்

திருமலை,ஜன.27

திருகோணமலை, குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புல்மோட் டைப் பிரதேசத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வட்டாரங்களில் வசிக் கும் ஆயிரம் பேருக்கு குடியிருப்புக் காணி களுக்கான அனுமதிப்பத்திரங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

புல்மோட்டை அரபா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, இவர்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களை கிழக்கு மாகாணக் காணி அமைச்சர் ஆரியவதிகலப்பதிவழங்கினார்.



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் புல் மோட் டையில் புனித பூமிக்காக சுமார் மூவாயிரம் ஏக்கர் காணிகள் அளவிட முற்பட்ட வேளையில், பிரதேச அரசியல் பிரமுகர்கள், பள்ளிவாசல் தலைவர், பொது மக்கள் எனப் போராட்டத்தில் ஈடுபட்டு அளவீட்டைத் தடுத்து நிறுத்திய தாகவும், அக்காணிகளுக்கும் காணி அனுமதிப்பத் திரங்கள் வழங்கப்பட் டுள்ளதாகவும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் தெரி வித்தார். (ஐ-ய,45,46)



# இந்தியாவுடன் இணைந்து இலங்கை செயற்படவேண்டும்

## அந்த நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27
இலங்கையின் அபிவிருத்தியில் வலுவான - காத்திரமான பங்க ளிப்பை வழங்குவதில் இந்தியா பெருமை அடைகின்றது. எனவே இலங்கை இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டும். இவ்வாறு இலங்கைக்கான புதிய தூதுவர் ரன்ஜித்சிங் சந்து தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள இந்திய தூதரகத் தில் நேற்று நடைபெற்ற இந்தியாவின் 68ஆவது குடியரசு தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட் டார்.
பன்னாட்டுப் பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரலில் வளர்ச்சி அடைந்து வரும் இந்தியா இலங்கையின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தப் பின்னணியில் எமது நாட்டுடன் இணைந்து இலங்கை செயற்பட வேண்டும் என்று இந்தியத் தூதுவர் மேலும் கூறினார்.
இதேவேளை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுரகத்திலும் இந்தியக் குடியரசு தின விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.
துணைத் தூதுவர் நடராஜன் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். இதில் அனைத்து மதத் தலைவர்கள், கற்றறிந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (வ-ஐ)



## சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்ந்த மூவர் கைது

கொழும்பு,ஜன.27
பொகவந்தலாவ கொட்டியாகலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி நேற்று முன்தினம் இரவு பொகவந்தலாவ பொலிஸாரினால் 3 பேர் கைது செய்யப்பட்டனர்.கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வுக்குப் பயன்படுத்திய பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ஐ-ய-43)

## அரச வங்கியில் கொள்ளை; நால்வர் கைது

மொனராகலை - மெதகம பகுதியில் உள்ள அரசவங்கியொன்றில் கொள்ளையிட்ட 4 சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.
சந்தேகநபர்கள் நால்வரிடமும் இருந்து, 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் பல உபகரணங்களைப் பறிமுதல் செய்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரத்தை உடைத்தே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளை வங்கி முகாமையாளர் வழங்கிய சி.சி.ரி.வி காணொலியை வைத்தே சந்தேகநபர்களைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஊழல், மோசடியை நல்லாட்சி அரசு ஊக்குவிக்கிறது

## ஊழலுக்கு எதிரான முன்னணி மீண்டும் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.27
மகிந்த ராஜபக்ச அரசு செய்ததைப் போன்று நல்லாட்சி அரசும் ஊழலை ஊக்குவிப்பதுடன், மோசடி செய்வோரையும் பாதுகாக்கிறது என்று ஊழலுக்கு எதிரான முன்னணியினர் குற்றஞ்சாட்டினர்.
ஊழலை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, மோசடிக்காரர்களும், திருடர்களும் உள்ள அரசாக மாறியுள்ளதாக முன்னணியின் ஆலோசகர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஊழல் சம்பவங்கள் தொடர்பான உரிய விசாரணைகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமையே, ஊழல் தொடர்பான சுட்டெண்ணில் இலங்கை மேலும் சரிவடையக் காரணம். முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்புபட்ட மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனை தொடர்பான விடயமே



அரசில் காணப்படும் முதலாவது மோசடி - என்றார்.
இதேவேளை நல்லாட்சி அரசு ஏற்படுத்தப்பட்ட பின்னர், இலங்கையில் ஊழல் அதிகரித்துள்ளதாக ஊழலுக்கு எதிரான பன்னாட்டு அமைப்பான ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநேசனல் தெரிவித்தது.
குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள கடந்த வருடத்துக்கான ஊழல் தொடர்பான சுட்டெண்ணில் இலங்கை 36 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.
176 நாடுகள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதில் இலங்கை 36 புள்ளிகளுடன் 95 இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு 168 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை 83 ஆவது இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
90 புள்ளிகளுடன் டென்மார்க் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளதுடன், பின்லாந்து, சுவீடன் மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் ஊழல் குறைந்த நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
தெற்காசியாவில் ஊழல் குறைந்த நாடாக இந்தியா பதிவாகியுள்ளதுடன், அந்த நாடு 40 புள்ளிகளுடன் 79 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு

# நாட்டின் இறையாண்மையையே காட்டிக் கொடுத்து விட்டது அரசு

### ரி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன.27
சட்டம், ஒழுங்கு மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து ஐரோப்பிய பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி எமது நாட்டின் இறையாண்மையை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கூட்டு அரசு காட்டிக் கொடுத்துள்ளதாக முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.
பொரளையில் என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேசிய ரீதியிலான விடயங்களை ஏற்றுக் கொள்ளாமல் வெளிநாடுகளுக்குச் சார்பாக அரசு செயற்படுவதனால் நாட்டின் பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக்காக எந்தவொரு நிபந்தனைகளுக்கும் உட்படவில்லையென அரசு தெரிவித்து வருகிறது. அது முற்றிலும் பொய்யாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் 58 நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.
கடந்த டிசெம்பர் 16 ஆம் திகதி அலரி மாளிகையில் கூட்டமொன்று தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் நீதியமைச்சர் விஜயதாச மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகிய இருவரும் கலந்து கொண்டிருந்தனர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் ஏழு பேரும் கலந்து கொண்டனர்.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றிலுமாக நீக்குவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. மக்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்தத் தீர்மானத்தை எடுக்கவில்லை. வெளிநாட்டுத் தூதுவர்களின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதுவர்களின் மனதை வெல்வதற்காகவே இவ்வாறான தீர்மானங்களை அரசு எடுத்துள்ளது.
இந்த விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகளுடன் பேசியுள்ள இந்த அரசு, அந்த நாட்டின் தூதுவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதிலிருந்து எமது நாட்டின் இறையாண்மையை வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் இந்த அரசின் போக்கு தெளிவாகப் புலப்படுகிறது. மகிந்தவின் ஆட்சிக் காலப் பகுதியில் இந்த நிபந்தனைகள் எமக்கும் விடுக்கப்பட்டது. அப்போதைய மகிந்தவின் அரசு இந்த நிபந்தனைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை - என்றார். (ஐ-5)

# குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவே ஆணைக்குழு

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன. 27
குற்றவாளிகளுக்கு உயர்ந்தபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே, மத்திய வங்கியின் பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
நடந்த சம்பவங்களை மூடி மறைப் பதற்காகவே ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சிலரால் குற்றஞ் சாட்டப்பட்டாலும் கூட ஊழல், மோசடி மற்றும் தவறான நிர்வாகம் என்பன அதிகளவில் காணப்பட்ட, கடந்த அரசிலிருந்து தான் பதவி



விலகியது மீண்டும் அவ்வாறானதொரு நிர்வாகத்தை ஏற் படுத்துவதற்காக அல்ல என்றும் அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.
நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிணைமுறி தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒருவரையொருவர் வெறுமனே குற்றஞ்சாட்டிக் கொள்வதாக மட்டுமே இருந்தது. தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் உண்மையாக நிறைவேற்றுவதற்கு அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.
பிணைமுறி சம்பவம் தொடர்பான குற்றவாளிகள் யாராகவிருந்தாலும் அரசுத் தலைவர் என்ற வகையில் அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தயாராக இருப்பதுடன், மக்களின் நம்பிக்கையுடனேயே எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்படுவேன்.
அத்துடன் கடந்த இரு வருடங்களில் இடம்பெற்ற பிணைமுறி சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்குத் தகுந்த தண்டனையை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைப் போன்றே, கடந்த ஏழு அல்லது எட்டு வருட காலங்களாக நடைபெற்ற பிணைமுறி தொடர்பான சம்பவங்கள் குறித்தும் இவ்வாறான ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் அமைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் -என்றார். (ஐ)

# பாடலை உரத்து ஒலிக்கவிட்ட சாரதிக்குத் தண்டம்

தென்மராட்சி, ஜன. 26

பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் முச்சக்கர வண்டியில் சினிமா பாடலை உரத்து ஒலிக்க விட்ட சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கையின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸார் இந்தச் சாரதியைக் கைது செய்தனர்.

சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்கு தொடரப்பட்டது. அது நேற்றுமுனதினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (உ-9)

# முன்னாள் போராளி ஒருவரின் குமுறல்!

முல்லைத்தீவு, ஜன. 27

முன்னாள் போராளிகளுக்கான உதவிகள் என்று கூறிவிட்டு உதவி தேவைப்படும் முன்னாள் போராளிகளுக்கு வழங்குகிறார் கள் இல்லை என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

"தடுப்பில் இருந்து வந்தவர்களுக்கான உதவித் திட்டம் என்று அறிவித்தல் பலகையில் எழுதியிருந்தார்கள். அங்கு சென்று கேட்டால் முன்னாள் போராளிளான எம்மில் பலரின் பெயர்கள் பட்டியலில் இல்லை என்றார்கள்" என்றார் முத்துலிங்கம் விநோதினி.

முன்னாள் போராளியான இவர் புனர்வாழ்வு பெற்ற பின்னர் 2013ஆம் ஆண்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வாழந்து வரும் தடுப்பில் இருந்து வெளியேறிய முன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் நேற்றைய தினம் தேராவிலில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

புதுக் குடியிருப்பு பிரதேச செயலகமே உதவிகளை வழங்குவதாக அறிவித்திருந்தது. அது தொடர்பாகவே குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன.

"அறிவித்தல் பலகையில் இருந் ததைப் பார்த்துவிட்டு அங்கு சென்றோம்.

ஆனால் உதவிக் கான பெயர்ப் பட்டியலில் தடுப்பில் இருந்து வெளியேறிய பல குடும்பங்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

நாங்களும் தடுப்புக்குச் சென்று தற்போது மிகுந்த கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்கிறோம், எங்களுக்கு உதவி கிடைக்காதா என கேட்டோம். வீடு இல்லாதவர்களுக்குத்தான் தற்போது வழங்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்கள்.

தடுப்பில் இருந்து வந்தவர்களுக்கான வாழ்வாதார உதவினஅறிவிப்புவெளியிட்டு விட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங் குவதே தேராவிலில் வழமையாக உள்ளது. வாழ்வாதார உதவிகளை வழங்குப வர்கள் யாருக்கான உதவிகள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கினால் நல்லது.

மாற்று வலுவுடைய குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக் கான உதவிகள் என்று குறிப்பிட்டால், முன்னாள்போராளிகளான எல்லோருமே உதவியை எதிர்பார்த்து அங்கு செல்ல வேண்டியிருக்காது.

அதேநேரம் உதவிகளைப் பெறுபவர்களின் தேவை குறித் தும் அவற்றை வழங்குபவர்கள் அக்கறை எடுக்கவேண்டும்" என்றார் விநோதினி.

நடப்பவற்றைப் பார்க்கும் போது உதவி வழங்கலில் முறைகேடு இடம்பெறுகிறதோ என்கிற அச்சம் எழுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

"புதுக்குடியிருப்பு பிரதேச செய லகத்தில் வாழ்ந்து வருகின்ற அனைவருக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு ஏற்ற வகையில் எமக்கு நிதி கிடைக்கவில்லை.

ஏற்கனவே உதவி வழங்கப்படாதவர்களுக்குத் தான் தற்போது வழங்கப்பட்டது.

மீள்குடியேற்றப்பட்ட காலத்தில் சில குடும்பங்களுக்கு ஆறுமாத காலம் இந்த உதவி வழங்கப்பட் டது.

பல குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. உதவிகள் வழங்கப்படவேண்டியவர்கள் எங்கள் பிரதேசத்தில் நிறையப் பேர் இருக்கின்றார்கள்.

இதுவரைக்கும் உதவிகள் கிடைக்காதாவர்களின் பெயர் விவரங்களைக் கிராம அலு வலகர் ஊடாகச் சேகரிக் கிறோம். அவர்களுக்கும் உதவிகள் வழங்கப்படும்'' என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இது தொடர்பில் தெரிவித்தார். (உ-21,7)



# கிளிநொச்சியின் அபிவிருத்தி ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சி நகரை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டங்களுக்குத் துறைசார் அமைச் சுக்கள் ஊடாகப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தட்டுவன்கொட்டி, ஊரியான், முரசுமோட்டை, கோரக் கன்கட்டு, பரந்தன், பன்னங்கண்டி மற்றும் மருதநகர் போன்ற இடங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கிளிநொச்சியை அபிவிருத்தி செய்வது தொடர்பான கூட்டம் கடந்த வருடம் மே மாதம் 7ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. திட்டமிட்ட நகராகக் கிளிநொச்சியை உருவாக்குவது தொடர்பில் அங்கு ஆராயப்பட்டது. பரந்தன் உப நகரத்தை கைத் தொழில் மையமாகவும், கரடிப்போக்குச் சந்தியை சேவைகளின் மையமாகவும், கிளிநொச்சி நகரை கைத்தொழில்வணிக சேவை தொழில்துறை மையமாகவும், இரணைமடுச்சந்தியை சுற்றுலா மற்றும் கல்வி அபிவிருத்தி மையமாகவும், திருமுறிகண்டிப் பகுதியை பண்பாட்டு மையமாகவும் உரு வாக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கிளிநொச்சியின் அபி விருத்தி இந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கை வளங்களையும் தொழில்சார் வளங் களையும் உள்ளடக்கியதாகக் காணப்படும் கிளிநொச்சியில் கட்டடங்களை எழுப்புவது மட் டுமே அபிவிருத்தி அல்ல. நகரின் இயற்கைப் பல்வகைத் தன்மையைப் சமனிலைப்படுத்தி பசுமை மிக்கதோர் நகரமாக இதனைக் கட்டியெழுப்பு வதே நோக்கம். கிளிநொச்சி - டிப்போ சந்தியை மையப்படுத்தி பரந்தன், கரடிப்போக்குச் சந்தி மற்றும் இரணைமடு வரையான பகுதிகள் இந்த திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இதன் முதற்கட்டமாக கிளிநொச்சி பிரதான பஸ் நிலையத்தை நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெறுமனே பஸ்கள் வந்து போகும் இடமாக மாத்திரம் அல்லாமல் பயணிகள் தங்கிச்செல்லக் கூடிய வகையில் ஓய்வு விடுதிகள் மற்றும் குளியலறை வசதிகளும் அமைக்கப்படவுள்ளன. அந்த வளாகத்தில் பசுமைத்தன்மை பேணப்பட்டு நவீன முறையில் கடைத்தொகுதிகளும் அமைக்கப்படும்.

அத்துடன் பொதுச்சந்தையை அண்மித்த பகுதியில் அனைத்து வசதிகளையும் உள்ள டக்கியதாக நவீன சந்தை கட்டத்தொகுதிகளும் அமைக்கப்படுவதுடன் பல்வேறு திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.

கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சிக்கு வரு கைதந்த நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர். கிளிநொச்சி ஏ9 வீதியை மையமாகக்கொண்டு முன்னெடுக்கப் படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்குள் அருகிலுள்ள கிராமங்களை உள்வாங்குவது தொடர்பாகவும் அப்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கிளிநொச்சி ஏ-9 வீதி ஆனையிறவில் இருந்து பழைய கண்டிவீதி வழியாக இரணைமடுச் சந்திவரை சென்று ஏ9 வீதியுடன் இணையும் வகையில் வெளிச்சுற்று வீதியொன்றை அமைப்பது தொடர்பிலும் அதிகாரிகள் ஆலோசித்தனர் - என்றார். (உ-ய-21)

# மருத்துவ மாணவர் பவனிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை ஒழுங்கு செய்துள்ள நடை பவனிக்கு ஆதரவு தெரிவிப்பதாக சமூக நீதிக்கான வெகு மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப் பினால், ஊடகங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:

மருத்துவக் கல்வியினைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக மருத்துவ பீட மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த பல நாள் களாக இந்தப் போராட்டம் நடந்து வருகிறது.

இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் நாளை வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட வுள்ள நடை பவனிக்கு சமூக நீதிக்கான வெகு மக்கள் அமைப்பு தனது ஆதரவை வழங்கு கிறது. பவனியில்அது பங்கெடுக்கவும்உள்ளது -என்றுள்ளது. (உ-10)

# கிள்ளித் தெளித்ததற்கே இத்தகு பெரு விழாவா?

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம் ஜன.27

வடக்கில் 63 ஆயிரம் ஏக்கரை படையினர் தம்வசம் வைத்திருக்கின்றனர். அதில் இருந்து 243 ஏக்கரை மட்டும் விடுவிப்பதற்கு மாபெரும் விழா எடுக்கப்பட்டுகிறது. இது தேவையா?

இவ்வாறு சீறிச் சினந்திருக்கிறார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

ஏற்றுமதி இறக்குமதி வரி, காணி வழிகாட் டிச் சட்ட மூலம் தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்றது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற் றினார். அவரது உரையில் முக்கிய மாகத் தெரிவித்ததாவது:

243 ஏக்கரையே படையினர் பெரிதாக கருதுவார்களானால் 63 ஆயிரம் ஏக்கர் தொடர்பில் தமிழ் மக்களின் மனநிலை எப்படியிருக்கும்?

உண்மையில் வடக்கில் படையினர் வசமுள்ள நிலங்களின் அளவு நான் சொல்வதை விடவும் அதிகம். நான் சொல்வது மாவட் டச் செயலாளர்களின் தரவுகளின் அடிப் படையிலானது.

மக்களின் வாழ்விடங்களையும் வாழ்வாதார இடங்களையும் படையினர் அப கரித்து வைத்திருந்தால் மக்கள் வருமானத் திற்கு என்ன செய்வார்கள்? தமது வருமானத்துக்கான அனைத்து வாய்ப்புகளையும் இழந்து தவிக்கும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு எடுக்கும் நடவடிக்கை தான் என்ன? அரசு திரட்டும் வரிப் பணம் அனைத்து மக்களுக்குமே உரியது.

ஆனால் பெரும் தொழிற்சாலைகள் வேலை வாய்ப்புக்கள் மட்டும் தெற்கில் உள்ள வர்களுக்கே கிடைக்கின்றது. வடக்கி லும் தொழிற்சாலைகள் அமைக் கப்பட்டு அங்குள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்க ஆவன செய்யப்படவேண்டும் - என்றார். (உ-101)



# இஸ்ரேல் மீண்டும் அடாவடி

## பலஸ்தீனத்துக்கு நெருக்கமாக கட்டடத் தொகுதி அமைப்பு

ஜெருசலேம், ஜன. 27

பலஸ்தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கட்டடத் தொகுதிகளை அமைப்பதில் மீண்டும் முனைப்புக் காட்டுகிறது இஸ்ரேல் அரசு என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகியன பரம வைரி நாடுகளாக உள்ளன. பஸ்தீனத்திடமிருந்து கிழக்கு ஜெருசலேம் உட்படப் பல பகுதிகளை ஆக்கிரமித்து வைத்துள்ளது இஸ்ரேல் அரசு. குறித்த பகுதிகளிலும் பலஸ்தீனத்துக்கு மிக நெருக்கமாக, குடியிருப்புக்களையும்-கட்டடத் தொகுதிகளையும் அமைப்பதில் இஸ்ரேல் தீவிரம் காட்டியது. ஆனால், இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இஸ்ரேலின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. இஸ்ரேல் - பலஸ்தீனம் விவகாரத்தில் அமெரிக்கா, காலாகாலமாக இஸ்ரேலுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்தது. இதனால் குடியிருப்பு விவகாரத்தில் இஸ்ரேலுக்கு எதிராக எழுந்துள்ள தீர்மானத்தை அமெரிக்கா, தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இல்லாமற் செய்ய வேண்டும் என்று ட்ரம்ப் வலியுறுத்தினார். ஆனால், அமெரிக்காவின் அப்போதைய அதிபரான ஒபாமா நடுநிலையைப் பேணினார். இதனால் ஒபாமாவுக்கு, ட்ரம்ப் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். 20 ஆம் திகதிக்குப் பின்னர் (ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர்) காட்சிகள் மாறும் என்றும் அவர் எச்சரித்தார்.

தற்போது ட்ரம்ப் பதவியேற்றுள்ளார். ட்ரம்ப், இஸ்ரேலுக்கு ஆதரவாகவே செயற்படுவார் என்பது வெளிப்படை. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி, தனது குடியிருப்புத் தொகுதிகளை அமைப்பதில் இஸ்ரேல் மீண்டும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை தனது கண்டனத்தை நேற்றுத் தெரிவித்தது. (ம-எ)



## குவைத் இளவரசருக்குத் தூக்கு

குவைத், ஜன. 27

குவைத் அரச குடும்ப உறுப்பினர் உள்ளடங்கலாக, 7 கைதிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

குவைத் மத்திய சிறைச் சாலையிலேயே கைதிகள் அனைவருக்கும் தண்டனை நிறைவேற்றப்பட்டது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அரசு குடும்பத்தைச் சேர்ந்த இளவ ரசர் பாசில் அப்துல்லா அல் ஜாபரினுக்கு கொலைக் குற்றத்துக்காக தண்டனை வழங்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு குவைத்தில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது இதுவே முதல் தடவை. (ம-எ)

## இந்தியாவின் குடியரசு தின விழா நேற்று கோலாகல அரங்கேற்றம்


புதுடில்லி, ஜன. 27

இந்தியாவின் 68 ஆவது குடியரசுத் தின விழா தலைநகர் புதுடில்லியில் நேற்று கோலாகலமாக அரங்கேறியது.

புதுடில்லி – ராஜபாதையில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். சிறப்பு விருந்தினராக அபுதாபி இளவரசர் கலந்துகொண்டார்.

விழாவின் முக்கிய அம்சமாக, நாட்டின் பலத்தை பறைசாற்றும் வகையில் முப்படையின் அணிவகுப்பு நடைபெற்றது. இதுதவிர தேசிய பாதுகாப்பு படைப் பிரிவு, எல்லைப் பாதுகாப்பு படையின் பிரத்தியேக ஒட்டகப் படைப்பிரிவு என பல்வேறு படைப் பிரிவுகளின் அணிவகுப்பும் மலைக்க வைத்தது.

நாட்டின் பன்முக கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும் ராஜபாதையில் அணிவகுத்தன. (ம-எ)



## சோமாலியாவில் புதனன்று தொடர் குண்டு வெடிப்பு

### 28 பேர் உயிரிழப்பு; பலருக்குக் காயம்

மொகடிசு, ஜன. 27

சோமாலியத் தலை நகர் மொகடிசுவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இரட்டைத் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர்.

விடுதி ஒன்றில் முதல் தாக்குதல் இடம்பெற்றது என்றும் சில நிமிட இடைவெளியில் பிறிதொரு தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. ஒட்டுமொத்தமாக 28 பேர் உயிரிழந்தனர். முதல் தாக்குதலில் எத்தனை பேர் சாவடைந்தனர் என்றும் இரண்டாவது தாக்குதலில் எத்தனை பேர் சாவடைந்தனர் என்றும் தனித் தனியாகத் தெரிவிக்கப்படவில்லை. எனினும் இரண்டாவது தாக்குதலிலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்தனர் என்று சொல்லப்பட்டது.



உயிரிழந்தவர்களில் செய்தியாளர்களும் உள்ளடங்குளின்றனர் என்று உத்தியோகபூர்வமற்ற தகவல் வெளியானது.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இந்தத் தாக்குதலுக்கு அலி சபாப் என்ற ஆயுதக் குழு பொறுப்பேற்றது. (ம-எ)

## மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பும் திட்டம்: ட்ரம்ப் கைச்சாத்து

வொஷிங்டன். ஜன. 27

மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பும் திட்டத்துக்கு கையெழுத்திட்டார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளில் ட்ரம்ப், நான் ஜனாதிபதியானால், அமெரிக்காவின் அயல் நாடான மெக்சிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பப்படும். அந்தச் செலவை மெக்சிக்கோவே பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்தத் திட்டத்துக்கு நேற்று முன்தினம் அவர் கையெழுத்திட்டு ஒப்புதல் வழங்கினார். இந்தத் திட்டத்தின்படி அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவுக்கும் இடையில் 3 ஆயிரத்து 200 கிலோ மீற்றர் தூரத்துக்கு சுவர் எழுப்பப்படவுள்ளது. 16 பில்லியன் அமெரிக்க டொலர் கிட்டத்தட்ட செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால், அமெரிக்காவின் இந்தத் திட்டத்துக்கு பணம் தரமுடியாது என்று மெக்சிக்கோ ஜனாதிபதி நெய்டோ தெரிவித்தார். அமெரிக்காவின் இந்தத் திட்டத்துக்கு மெக்சிக்கோவால் பணம் தர முடியாது. ஜனாதிபதியாக நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டியது எனது கடமை.

இந்த விடயம் தொடர்பில் வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். மெக்சிக்கோ அமெரிக்காவுடன் உறவைப்பேண விரும்புகிறது. எனவே இரு தரப்புக்கும் நன்மை பயக்கும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என்று நெய்டோ மேலும் தெரிவித்தார். (ம)



## செய்தித் துளிகள்

**பிளாஸ்ரிக்குக்குத் தடை**

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பிளாஸ்ரிக் கழிவுகளை வெளியேற்ற அந்த நாடு தடை விதித்தது. அதிகரித்துவரும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது. புதுடில்லியில் காற்று மாசு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மிக அதிகளவில் இருந்தது. கழிவுகளாகக் கொட்டப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள்தீயிட்டுக்கொளுத்தப்படுவதனாலும் காற்று மாசு ஏற்படுகிறது என்று ஆரம்பம் முதலே வலியுறுத்தப்பட்டு வந்தது. இதன் அடிப்படையிலும் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக் கலாம் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

**தண்ணீருக்காக 1,000 கோடி**

மழை பொய்த்ததால் தமிழ்நாட்டில் பெரும் குடிதண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இந்த நிலைமை மோசமாகும் என்று எதிர்வுகூறப்படும் நிலையில். நெருக்கடியை சமாளிக்க ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது.

**கேரளாவுக்குக் கண்டனம்**

தமிழ்நாட்டில் திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்களின் பாசன ஆதாரமாக் விளங்கும் பாம்பாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணிகளை கேரள அரசு மீண்டும் தொடங்கியிருக்கிறது. இரு மாநில உறவுகளை பாதிக்கும் வகையிலான கேரள அரசின் இந்த செயல் கண்டிக்கத்தக்கது என்று பா.ம.க. இளைஞர் அணித் தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்தார். கேரள அரசு உடனடியாக இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**தி.மு.கவுக்கு எதிராகக் குற்றச்சாட்டு**

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் நடத்திய அறப்போராட்டம் அதன் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தபோது, தமிழ்நாட்டில் பரவலாக பல அசம்பாவிதங்கள் அரங்கேறின. இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னணியில் தி.மு.கழகம் உள்ளது என்று இந்தியாவின் சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**வாயுக் கசிவால் ஒருவர் சாவு**

ஒடிஸா மாநிலத்தில் உள்ள ரூர்கேலா இரும்பு ஆலையில் நேற்றுமுன்தினம் வாயு கசிவு ஏற்பட்டு, ஒருவர் சாவடைந்தார். வாயு கசிவு ஏற்பட்ட போது அந்த ஆலைக்குள் 6 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். ஏனைய ஐவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தகவல் எதுவும் வெளிப்படுத்தவில்லை.

# 8வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JITF 2017

27 28 29 ஜனவரி JANUARY
10.00AM - 8.00PM

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
MUNICIPAL GROUNDS - JAFFNA

கல்வி 2017 Special Education Pavilion

CO-SPONSOR S-lon | ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED | IN ASSOCIATION WITH CCIY



## Message from

**H. E. Hon. Maithripala Sirisena**
President of the Democratic Socialist Republic of Sri Lanka

I am pleased to send this message of greetings and best wishes to the 8th Jaffna International Trade Fair (JITF).

JITF will be an excellent show window for people to explore the trade and investment opportunities in the North, after the end of the war. The North is yet to be fully penetrated by private investments and many of the resources in the area yet to be fully utilized. The Jaffna peninsula has among its natural riches and resources a vibrant community filled with passionate human resources who are willing to harness and expand their potential.

I believe the infrastructure development currently underway in the region has also paved way for many investment opportunities in the region which could not be afforded previously. The region's infrastructure like roads, electricity, bridges and all other core facets are currently being developed in the government's endeavor to ensure the region is on par with many of the most potent business and lifestyle destinations in the world.

It is a historic event where the North meets the rest and is considered by everyone who participates as the best and most comprehensive destination to further their knowledge, investments and businesses.

I commend the efforts by the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council and Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd., for bringing together an exhibition of this magnitude.

I wish the event every success.

H. E. Hon. Maithripala Sirisena
President of the Democratic Socialist Republic of Sri Lanka



## Message from

**Hon. Rishad Bathiudeen M. P.**
Minister of Industry & Commerce

It is with great pleasure that I send this message of congratulations on the occasion of the 8th Edition of the Jaffna International Trade Fair 2017, which is considered as one of the mega trade exhibitions of the Northern Province. After the end of three decades of conflict in 2009, the Northern Province has now become a key region that provides promising opportunities and contributes to Sri Lanka's economic progress. JITF helps Lanka business entities from various industries to make commercial inroads into the peninsula and the profitable Northern region. In 2014, the Northern Province contributed more than Rs.360 Billion to national GDP.

The Northern Province is ranked ahead of Uva and Sabaragamuva provinces in economic and business climate ranking. Therefore it is clear that the JITF is a well-placed fair in Sri Lanka. As a Cabinet Minister of the Unity Government and the Member of Parliament from Vanni District, I wish to stress that the businesses of all scales in the Northern Province would be supported and assisted in various ways in the proposed economic reforms of the consensual government of HE the President Maithripala Sirisena and Hon Prime Minister Ranil Wickremesinghe. The latest in this series, JITF trade fairs takes at crucial time in Sri Lanka's history, as the new consensual government prepares to usher into a new era to position Sri Lanka, as a middle income developing country status.

Creating business and investment opportunities are imperative for economic and social development of a country but more importantly, involving regions in the process is crucial for overall development. Regionally focused trade fairs such as JITF is one way of expanding the development process and its awareness to the regions with great potential. Therefore, I am confident that under the direction of the new government led by committed H.E the President Maithripala Sirisena, JITF 2017 will play a leading role in providing the best opportunities to the Lankan Business Community as well as prospective entrepreneurs in enhancing the economy of the Northern region and thereby the economy of Sri Lanka itself.
I wish JITF 2017 a resounding success !.

Hon. Rishad Bathiudeen M. P.
Minister of Industry & Commerce



## Message from

**Shri A. Natarajan**
Consul - General of India, Jaffna

I am pleased to send this message of greeting to the Jaffna International Trade Fair (JITF) which is being held for the eight consecutive year in Jaffna. JITF has become one of the most prestigious and recognized events of the country. With professionalism and integrity hallmark. Immediately after the cessation of hostilities in Sri Lanka in May 2009, the first JITF was organised by the Lanka Exhibition and Conference Services Pvt. Ltd. (LECS) together with the Chamber of Commerce and Industry of Yarlpanam (CCIY) with the support of the consulate General of India in Jaffna and the Municipal Council.

India shares special relationship with Sri Lanka. It is a relationship of cultural practices, family linkages, linguistic commonalities, economic inter – linkages and the political understanding between the two democratic countries. The two countries share a precious and everlasting harmonies understanding cemented by the ideals of great visionaries like Lord Buddha Emperor Ashoka, Swami Vivekananda, Mahatma Gandhi, Rabindranath Tagore, One important pillar of indo-Sri Lanka relation is development Cooperation, which has been built on the basis of mutual trust and understanding. It is in that vein, India made commitment and implemented some mega projects which included the construction of 50 000 houses, reconstruction of Northern Railway, innovation of Duraiyappah Stadium, establishment of English Language Laboratory, etc.. The construction work on the establishment of Engineering and Agricultural facilities of the University of Jaffna in Kilinochchi, reconstruction of Thiruketeeswaram Temple at Mannar and the construction of iconic Cultural center at Jaffna continue to make excellent progress

Last year, a 50-member trade delegation of the Tamil Nadu chamber of commerce and industry (TNCCI) participated at the JITF and about 70-member companies led by ASSOCHAM, New Delhi is expected to participate at JITF 2017. One of our main objective is to setup SMEs in the war-affected Northern Province which could generate employment opportunities for the northern Tamils and we hope the participation of Indian companies in the JITF 2017 would support this objective. Meanwhile our consistence efforts in further strengthening our trade and commercial ties between India and Sri Lanka continue.
I wish the JITF 2017 a grand success!

Shri A. Natarajan
Consul - General of India, Jaffna



## Message from

**Arjun Dharmadasa**
Managing Director
Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that I extend this message for the 8th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors. As per the statistics there is 100% increase of the visitors to the exhibition which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community.

Special attractions at JITF will be the "Made In Jaffna" pavilion with over 30 stalls, under the flagship of Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY) and an unique pavilion named "KALVI" specially designed to host the education representatives. Over 20 educational institutes representing local and foreign universities will be present at the exhibition. A 2 day musical show and a carnival has also been organized to keep our visitors and exhibitors entertained. I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality. I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, former Ministry of Traditional Industries & Small Enterprise Development, The Indian High Commission in Sri Lanka, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council, Consulate General of India in Jaffna, the Ceylon Institute of Builders, the Sri Lanka Convention Bureau and all Exhibitors, Sponsors & participants. I also thank the Police and the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

Arjun Dharmadasa
Managing Director
Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd



## Message from

**Ponnampalam Vageshan**
Commissioner - Jaffna Municipal Council

It is my pleasure to give this message to the 8th Jaffna International Trade Fair (JITF). The traders who exhibited their endeavors in the past definitely have a lot to say about the achievements gained from the JITF. This continuous effort cannot be under estimated as the benefits from this fair are magnanimous.As the Special Commissioner of Jaffna Municipal Council, I like to thank the organizer, Lanka Exhibition and Conference Services (Pvt) Limited, supporters and sponsorers, for providing market opportunities for our local producers and introducing local markets to investors. It is not an exaggeration that the consumer protection and entrepreneurship improvement are two supplementary benefits from the JITF. Further, I appreciate the release of JITF magazine that compiles profiles of all organizations showcasing themselves as a guidance cum reference material. I expect a big crowd at the JITF from 27 -29 January 2017 as similar as it was in the past. The Jaffna Municipal Council is proud to have this kind of fairs within its limits for the betterment of local economy.

I wish all stakeholders of JITF to have a fair in grand scale in 2017.

Thank you.
Yours faithfully,

Ponnampalam Vageshan
Commissioner Jaffna Municipal Council



## Message from

**V.K.Vignesh**
Chairman
Chamber of Commerce and Industries Yaarlpannam

As the New Year set in, Chamber of Commerce and Industries Yarlpannam took the first available opportunity in the 8th Jaffna International Trade Fair (JITF) to outspread numerous positive impact on the Northern Province commerce and industrial activities. One of the Sri Lanka's largest exhibition and consumer fairs called JITF has earnestly received by all parties in our nation and it has met continuous success in the past 7 years. Therefore the expectation and participation of the 8th Jaffna International Trade Fair, being held on 27th, 28th and 29th of January 2017, will be prominent and magnificent.

At present our country is self- assured to refocus its political and economic policy approaches towards constructing opportunities for individual creativity and private investments in business. This is a great opening especially northern business community can enhance its business connectivity with the national capital Colombo and the rest of the island. Trade fairs are the powerful marketing mediums, provide visitors with a comprehensive overview of the entire market and industry.

North Sri Lanka still remains a virtually virgin market for many business entities, I would say JIFT is an ultimate proposal for our capitalists to showcase their uniqueness and product talents alongside their competitors to scope national as well as international market opportunities. Furthermore this significant trade fair grants a commendable prospective for industrialists to meet foreign trade delegates for Business to Business (B2B) opportunities to open networks for new partnership and business links and also businesspersons can meet enormous amount of customers at one place to reemphasise brand awareness and improve sales further. On this occasion we sincerely admit our gratitude to the exhibition organizer, Lanka Exhibition and Conference Services for their selfless involvement towards making JIFT 2017 a successful occasion. Additionally we acknowledge all participants of trade fair for giving us continuous boost and immense confident. In further we genuinely thank all our sponsors, media and press associates and all other government and nongovernmental bodies who lend helping hands in various modes to polish this trade fair more glorious.

As a Chairman of Chamber of Commerce and Industries Yaarlpanam, I would like to take this opportunity to thank Honourable Governor of Northern Province, Honourable Chief Minister of Northern Provincial Council, Consul General –Consulate General of India, Government agent/ district secretory, Commissioner Jaffna Municipal Council, Police and government officials; for your cherished support to make this trade fair an animated one.

V.K.Vignesh,
Chairman,
Chamber of Commerce and Industries Yaarlpannam.

OFFICIAL PARTNERS

BEAUTY CARE PARTNER | INTERIOR PARTNER idea | FOOTWEAR PARTNER DSI | PROCESSING MACHINERY & EQUIPMENT PARTNER ISF | HEALTH CARE PARTNER LANKA HOSPITALS | FOOD PARTNER | MACHINERY & POWER TOOL PARTNER | MOBILE TELECOMMUNICATION PARTNER Telecom | PRINT MEDIA TAMIL | ELECTRONIC MEDIA

SUPPORTED BY: Jaffna Municipal Council, SRI LANKA, ASSOCHAM
ENDORSED BY: Ministry of Industry and Commerce, Consulate General of India Jaffna, NCE
PARTNER COUNTRY: India

வணிகம்






# யாழ். பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பம்

## வடக்கில் இடம்பெறும் மாபெரும் பன்னாட்டு வர்த்தக சந்தையாக அமையவுள்ளது

யாழ். மாநகர சபை, இலங்கை மாநாட்டு பணியகம் மற்றும் பன்னாட்டு வர்த்தக சபை என்பவற்றின் ஆதரவுடன் யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனமும் இணைந்த விதமாக லங்கா எக்சிபிசன் அன்ட் கொன்பிறன்ஸ் சேவிஸ் பிறை வெட் லிமிடெட் நிறுவனம் ஏற் பாடுசெய்துள்ள வடக்கிற்கான நுழைவாயில் என்று அழைக்கப்படும் யாழ்.பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2017 நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன.



யாழ். மாநகர சபை மைதானத் தில் எதிர்வரும் 28 ஆம் ,29 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள மேற்படி கண்காட்சி நிகழ்வானது வட மாகாணத்தில் உள்ள குடி மக்கள், வியாபாரிகள், வர்த்தர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டிய ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

தவிர, மக்களது தேவைகள் மற்றும் சேவைகளை ஈடுசெய்யும் வகையில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு கண்காட்சிக் கூடங்கள் இந்த வர்த்தகச் சந்தையில் இடம்பெறவுள்ளன. குறிப்பாக நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பான வகை மற்றும் பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடையணி மற்றும் புடைவை, விவ சாயம், நுகர் வோர் உற்பத்திகள் மற்றும் பல தொழிற்துறைகள் சார்ந்த விசேடத்துவ அம்சங்கள் மூன்று தினங்களுக்குமாக இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மாகாண மற்றும் வடமாகாண மக்களிடையே யான வர்த்தகரீதியான இணைப்பை ஏற்படுத்துவதிலும் கூட்டு வியாபார முயற்சிகள், ஒன்றிணைவு சார்ந்த முன் னெடுப் புக்களை ஏற்படுத்துவதும் இக் கண்காட்சி நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, யாழ். இந்திய தூதரகம் மற்றும் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் என்பவை நிகழ்விற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> “ முதலீட்டு வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்கும் அது சார்ந்து வாய்ப்புகள் மற்றும் பரந்துபட்ட முதலீடுகள் தொடர்பில் பரிசீலிப்பதற்காக 75 பேரைக் கொண்டதான இந்தியக் குழு ஒன்று கண்காட்சி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளது. அத்துடன் அனைத்து வர்த்தகத் தேவை களையும் ஒரே இடத்திலேயே நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு நிகழ்வாகவும் இது அமைந்துள்ளது.



# மேன்மை கொள்ளட்டும் சைவமதம்

மிருசுவில் தமிழ்தாசன்



அவனன்றி ஓர் அணுவும் அசையாது. இந்தமுதுபெரும் வாக்கை அறியாதவர்களே கிடையாது. இந்தப் பிரபஞ்சம் தோன்றிய காலம் முதல் இறை நம்பிக்கையும் வழிபாடுகளுமிருந்து கொண்டு வருகின்றன. சமூகத்துக்குச் சமூகம் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றி ஏதேதோ தெய்வங்களை வணங்கி வந்தாலும், இறை சக்தியை மட்டும் மனிதர்கள் நம்பாமலிருந்ததில்லை. கற்றவர், பாமரர், பணக்காரர், பரதேசிகள் என்னும் வேறுபாடின்றிப் பொதுவாக நாமனைவருமே தெய்வ நம்பிக்கையுடனே வாழ்ந்து வருகின்றோம். மிக அபூர்வமாக மிகச் சிறிய தொகையினர் இறைவனை நம்பாது நாஸ்திகவாதம் பேசுபவர்களும் நம்மிடம் இல்லாமலில்லை. போதிய கல்வியறிவில்லாமையும் இதற்கு ஒரு காரணம். அதேவேளை மெத் தப்படித்த கல்விமான்களும் ஒரு சிலர் கடவுளை நம்பாதவர்களாக வெறும் ஜடங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியேயுள்ளது. தங்களுடைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவில்லையென்பதற்காக ஒரு பகுதியினரும், ஒருவரைப் பார்த்து ஒருவர் என்பது போல மற்றொரு தரப்பினரும் நாஸ்திக வழியைப் பின்பற்றி வருகின்றனர். இது அவர்களுடைய அறியாமையையும் அகம் பாவத்தையும் பிரதிபலிக்கும் வாழ்க்கை முறையாகும்.

இந்தப் பூமியில் முதன்முதலாகத் தோற்றம்பெற்ற ஆதாம் ஏவாள் முதல் தொடர்ந்து கொண்டிருக்கும் நாகரிக சமூதாயம் வரை இறை சக்தியை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத் துறையில் மாபெரும் சாதனைகளைச் சமைத்துக் கொண் டிருக்கும் விஞ்ஞானிகள் கூட தமது விஞ்ஞானத்துக்குப் பக்கபலமாக மெய்ஞானத்தையும் பேணிக் கொண்டிருக்கின்றனர் என்னும் உண்மையை யாரும் மறுத்தலித்துவிட முடியாது. முதன் முதலாக விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட நீல் ஆம்ஸ்ரோங் கூட ஒரு சமயத்தில் தன்னுடைய இறை நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதேபோல சமகாலத்தில் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாபெரும் மருத்துவ மணிகளும் தங்கள் கடமைகளில் ஏற்படும் சில சவாலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வேளைகளில் இறைவனை நினைத்துக் கொள்வதுண்டு. இவர்களைப் போல படித்துப் பல்துறைப் பாண்டித்தியம் பெற்ற ஏராளமானவர்கள் இறைவன் பால் அதீத அன்பும் நம்பிக்கையும் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இறை நம்பிக்கையென்பது ஒரு புறமிருக்க அந்த இறைவனை மனச்சலனங்கள் எதுவுமின்றி ஒரு நிலைப்பட்டு வணங்குவதற்கு அமைதியான ஒரு சூழல் தேவை. இதை உணர்ந்தே கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் போன்ற வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தத்தமது வேண்டுதல்களை வேண்டி வழிபடுவதற்கு ஏற்ற களங்களாக இவை கொள்ளப்படுகின்றன. பலதரப் பட்ட மதத்தினரும் தம்முடைய சமயத்தைச் சார்ந்த வழி பாட்டுத் தலங்களுக்குப் போய் வழிபடுவது பொதுவானதே.

இவைகள் இவ்வாறு இருக்க - வரலாற்றுத் தொன்மையைக் கொண்ட இந்து சமயத்தினரின் வழிபடும் பாங்குகளையும் அதன் எண்ணிக்கைகளையும் நோக்கும் போது ஒப்பீட்டளவில் ஏனைய மதங்களைவிட வீழ்ச்சியுற்று வருவது கண்கூடு. இந்து சமயத்துக்கு என்று பொதுவாகக் கட்டுப்பாடுகள் அதிகமாக விதிக்கப்பட வில்லையாயினும் ஏராளான கடப்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு கிறிஸ்த வரை எடுத்துக் கொண்டால், ஆகக் குறைந்தது வாரத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையிலாவது தேவாலயப் பிரார்த்தனையில் பங்கு பற்றியே ஆக வேண்டும். அங்கே குருவானவரின் போதனைகளையும் இறைமகிமைகளையும் அவரால் அனுபவித்து ஆனந்திக்க முடிகின்றது. இதேபோல இஸ்லாமி யர்களுக்கும் ஏராளமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. தினமும் ஐந்து வேளைத் தொழுகை உட்பட பிரதி வெள்ளிக்கிழமைகளில் கண்டிப்பாகப் பள்ளிவாசலுக்குச் சென்றேயாக வேண்டும். அதைவிடப் புனித ரம்ழான் தினங்களில் புனிதமாகவிருந்து நோன்பு கடைப்பிடிக்க வேண்டும். இது மிகவும் கட்டாயமானது. விதிவிலக்காக யாரேனுமொருவர் நோன்பு நோற்பதற்குத் தவறிவிட்டால் அவர் இஸ்லாம் மார்க்கத்திலிருந்து தூக்கி வீசப்படும் ஆபத்து முண்டாகலாம்.

> தேய்ந்து போய்க் கொண்டிருக்கும் சைவசமயம் எதிர்காலத்திலாவது சோம்பல் முறித்து, முதுகு நிமிர்த்தி ஏனைய மதங்களுக்குச் சளைக்காது வீறு நடைபோட வேண்டும். அதற்கு ஆசிரியர்கள், முதியவர்கள், சைவப் பெரியார்கள் ஊடகங்கள் இலக்கிய கர்த்தாக்கள் மற்றும் இந்துமத நிறுவனங்கள் ஒன்றிணைந்து உழைத்தால் அழிந்து போய்க்கொண்டிருக்கும் இந்துமதம் மீண்டும் தளைத்தோங்குவதற்குத் தடைகளில்லை.

இந்து சமயத்திலும் ஏராளமான கடமைகளிலிருக்கின்றன. ஆறுமுகநாவலர் இவைபற்றி விலாவாரியாகச் சொல்லியிருக்கின்றார். எனினும் எம்மவர்களில் எத்தனை பேர் அவைகளைக் கடைப்பிடிக்கின்றோம் என்பது கேள்விக்குரியதே. ஏனைய சமயத்தினரைவிட இந்து சமயத்திலேயே கடவுளைக் கட்டாயமாக வழிபட வேண்டிய ஏராளமான தினங்கள் காணப்படுகின்றன. வெள்ளியென்று மட்டுமில்லாமல், சனிக்கிழமைகளில் சிவன் கோயில்களில் சனீஸ்வர வழிபாடு, ஞாயிறுகளில் விஷ்ணு தரிசனம் திங்கட்கிழமைகளில் அம்பாள், செவ்வாய்க்கிழமைகளில் காளி, வைரவர் வழிபாடுகளென்று வகுக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இந்தத் தினங்களில் விரதம் அனுஷ்டிப்பதும் மிகப் பிரதானமானவைகளாகச் சொல்லப்படுகின்றன. இவைகளை விட ஏகாதசி அமாவாசை, பிர தோசம், சதுர்த்தி, பௌர்ணமி தினங்களிலும் விசேடமாக விரதங்கள் அனுஷ்டிப்பது மேலும் சிறப்பானவைகளாகக் கருதப்படுவதுண்டு.



இவை இவ்வாறிருக்க - இந்து சமயத்திலுருப்பவர்கள் மேற் படி முறைமைகளைக் கைக் கொண்டு வாழ்கின்றார்களா என்று கேட்டால், பதில் கூறுவது மிகவும் கடினமே. உண்மையாகப் பார்த்தால் நூற்றுக்குப் பத்து சதவீதமானவர்களே நாவலர் பெருமான் காட்டிய வழிகளைப் பின்பற்றி வருகின்றார்கள் என்னும் கசப்பான உண்மை புலப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட எல்லா நாள்களிலும் கோயிலுக்குப்போக விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய தேவையுள்ளவர்களைப் புறமொதுக்கிப் பார்த்தாலும், எஞ்சியிருப்பவர்களாவது சைவ நெறிகளைக் கடைப்பிடித்துச் சந்தோசமாக வாழலாம் அல்லவா!

இப்போதைய காலகட்டத்தில் இந்து சமயத்தின் வளர்ச்சி அற்கெட்டுப்போய்கொண்டிருப்பது கண்கூடு, இதற்கு இந்து சமயத்தவராகிய நாங்களே பொறுப்புக்கூற வேண்டும். திருவிழாக்கள், வேடிக்கைகள், கொண்டாட்டங்களுக்கு மட்டுமே ஆலயம் செல்பவர்களே அதிகம். இளைய தலைமுறையினர் மட்டுமல்ல வயதானவர்களும்கூட சிவதரிசனத்தை மறந்து மனம்போல் வாழ்கின்றனர், சோம்பல்படுகின்றனர்.

ஆலய தரிசனமும் நோன்புகள் விரதங்களும் மனஅமைதியையும், சாந்தியையும் தரவல்லவை. அத்துடன் அன்பு ஜீவகாருண்யம் ஒழுக்கம் போன்ற சிறந்த விழுமியங்களைப் பெற்றுக்கொள்ள வழி சமைக்கின்றன. பாடசாலைகளில் ஒவ்வொரு சமயத்தினருக்கும் அவரவர்களுக்குரிய சமயங்கள் போதிக்கப்படுகின்றன. இருந்தும் இந்து சமயத்தில் பிறந்து இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளில் தேவாரம்தெரியாத அல்லதுபடிக்க முடியாதவர்கள் ஏராளம்பேர் இருக்கின்றனர், இது எத்துணை விசனமானது.

தேய்ந்து போய்க் கொண்டிருக்[illegible] சைவசமயம் எதிர்காலத்திலாவது சோம்[illegible] முறித்து, முதுகு நிமிர்த்தி ஏனைய ம[illegible]ளுக்குச் சளைக்காது வீறு நடைபோ[illegible]ண்டும். அதற்கு ஆசிரியர்கள், முதியவ[illegible], சைவப் பெரியார்கள் ஊடகங்க[illegible]லக்கிய கர்த்தாக்கள் மற்றும் இந்துமத[illegible]னங்கள் ஒன்றிணைந்து உழைத்தா[illegible]ழிந்து போய்க்கொண்டிருக்கும் [illegible] மதம் மீண்டும் தளைத் தோங்[illegible]தற்குத் தடைகளில்லை.

"மேன்மை கொள் சைவ நீ[illegible] விளங்குக உலகமெலாம்"

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# உளவியல் ஆசிரியர்களின் நியமனம் மிக அவசியமே!

பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்காக புதிதாக 2,753 ஆசிரியர்களை உள்ளீர்க்கப் போவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் விடுத்துள்ள அறிவிப்பு வரவேற்புக்குரியது. உளவியல்சார் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றவர்களே இவ்வாறு ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சிறப்பான உளவியல் ஆலோசர்கள் பாடசாலைகளில் நியமிக்கப்படுவது மிக மிகச் சிறந்ததொரு யோசனை. இன்றைய மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் எதிர்கொள்ளும் மன அழுத்தம் கடந்த காலத் தலைமுறைகளுடன் ஒப்பிடுகையில் மிக மிக அதிகம். புலமைப் பரிசில் பரீட்சை உள்ளிட்ட போட்டிப் பரீட்சைகள் பெற்றோர்களின் மதிப்போடு தொடர்புடையவையாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், அதன் சுமை மாணவர்களின் முதுகுகளிலேயே சுமத்தப்படுகின்றன. இதனால் அவர்கள் உளவியல் ரீதியில் பல்வேறு நெருக்கீடுகளை எதிர்கொள்கின்றனர். பாடசாலைகளுக்கு வெளியே தனியார் கல்வி நிறுவனங்கள் (ரியூசன்) என்கிற பொறிமுறையும், மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளையும், விளையாட்டையும், பொழுதுபோக்கையும் அடியோடு இல்லாமல் ஆக்கிவிட, அவர்கள் புத்தக மூடைகளுடன் படிப்பு படிப்பு என்றே ஓடவேண்டியவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதுவும்கூட மாணவர்களை உளநெருக்கீடுகளுக்கு உட்படுத்துகிறது.

2015ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இலங்கையில் பாடசாலை மாணவர்கள் 16 சதவீதமானவர்களும், மாணவிகளில் 5 சதவீதமானவர்களும் புகையிலை மற்றும் புகைப் பொருள் பழக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று கூறுகின்றது. இந்தப் பழக்கம் அவர்களின் கல்விச் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தியிருக்கின்றது என்றும் அந்த ஆய்வு கூறுகின்றது.

மாணவர்கள் புகைப் பொருள்களால் மட்டும் பாதிக்கப்படவில்லை. அவர்களைத் திட்டமிட்டுப் போதைப் பாவனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் கடந்த காலங்களில் வடபகுதியில் வெளிவந்தன. ஹெரோயின், கஞ்சா போன்ற ஆபத்தான போதைப் பொருள்களின் பாவனையும் மாணவர்கள் மத்தியில் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றது. போதை கலந்த பாக்குப் பைகளின் விற்பனை மாணவர்களை மையமாக வைத்துப் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தலைமுறை மாணவர்கள் இந்தச் சவால்களையும் கவனக் கலைப்பான்களையும் கடந்தேதான் முன்னேற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

அண்மைக் காலமாக மாணவர்கள் வன்முறைக் கும்பல்களோடு தம்மை ஈடுபடுத்திக் கொண்ட செய்திகளும் வெளியாகியுள்ளன. இத்தகைய குற்றச்சாட்டுக்களால் தமது வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டு சிறையில் வாடும் மாணவர்களும் இருக்கிறார்கள். மற்றொருபுறத்தில் சிறுமிகள் கர்ப்பமும் மற்றொரு பிரச்சினையாக வளர்ந்து செல்கிறது.

இப்படிப் பல நெருக்கடிகளையும் சந்தித்து அதனால் உளத் தாக்கத்துக்கு உள்ளாகும் மாணவர்களை நல்வழிப்படுத்தவும் இரண்டும் கெட்டானான பதின்ம பருவத்தில் மாணவர்களுக்குத் தகுந்த வழியைக் காட்டவும் உளவியல் ஆலோசனையாளர்களாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியது கட்டாயமே! அதனைச் செய்வதற்குக் கல்வி அமைச்சர் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது.

அதேநேரத்தில் இந்த உளவியல் ஆசிரியர்கள் வெறுமனே மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குபவர்களாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுவிடக்கூடாது. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உளவியல் ஆலோசனை வழங்கும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு இந்த உளவியல் ஆலோசனைக்குள் ஆசிரியர்களும் உள்வாங்கப்படுவது அவசியம்.

குழந்தை ஒன்று தன் தாயிடம் இருந்து, தந்தையிடமிருந்து, சமூகத்திடமிருந்து கற்றுக்கொள்வதைப் போலவே மாணவன் தன் ஆசிரியர்களிடம் இருந்துதான் பெரும்பாலான குணநலன்களையும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்கிறான். எனவே ஆசிரியர்கள் ஆரோக்கியமான மனோ நிலையுடையவர்களாக இருக்கும்போதுதான் மாணவர்களும் சிறப்பானவர்களாக உருவெடுப்பார்கள். கல்வி அமைச்சர் இந்த விடயத்திலும் அக்கறை கொண்டு செயற்பட்டால் கல்வித்துறை இன்னும் நன்மை அடையும்.

# அரசுடன் முட்டி மோதுவதால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்துவிடுமோ?

சேரலாதன்

தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு கிடைக்காது விட்டால், புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் நடவடிக்கைகளிலிருந்து கூட்டமைப்பு வெளியேறிவிடுமென புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கூட்டமைப்பு, அரசிடம் விரிவாக எடுத்துக் கூறியுள்ளது. வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு ஆகியவை இதில் முக்கியமான அம்சங்களாகும். ஆனால் இவை ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பது சந்தேகமே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது நிகழ்வொன்றில் உரையாற்றும்போது, சமஷ்டி முறையிலான தீர்வைத் தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார். அதேவேளை வடக்கையும் - கிழக்கையும் இணைப்பதற்கான யோசனைக்கும் அரசுக்குள் பெரும் எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளன. தெற்கிலுள்ள இனவாதிகளது நிலைப்பாடு தமிழர்களுக்கு எத்தகைய உரிமைகளும் வழங்கப்படக்கூடாது என்பதே. சமஷ்டி என்பது நாட்டைப் பிளவுபடுத்துகின்ற ஒரு விடயமென அவர்கள் கூறி வருகின்றனர். வடக்கு-கிழக்கும் இணைந்துவிட்டால், தமிழர்களின் ஆதிக்கம் வலுப் பெற்றுவிடுமென அவர்கள் தென்பகுதி மக்களை அச்சமடையச் செய்து வருகின்றனர்.

### அரசுடன் முரண்படாது தவிர்த்து வரும் சம்பந்தன்

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூட்டமைப்புக்குள்ளேயே விமர்சனங்களை எதிர்கொண்ட போதிலும், அரசுடன் முரண்படுவதைத் தவிர்த்து வருகின்றார். நாட்டில் இன்னுமொரு மோதல் ஏற்படுவதை அவர் அறவே விரும்பவில்லை. கடந்த காலத்தில் மோதல்கள் காரணமாகத் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்களை அவர் மறந்துவிடவில்லை. ஆனால் சம்பந்தன் செயற்படுகின்ற வேகம் போதவில்லையெனவும், அரசுக்கு எதிராகப் போராடுவதற்குத் தமிழர்கள் தயாராக வேண்டுமெனவும் கூட்டமைப்பிலுள்ள சிலர் குரல் கொடுத்து வருகின்றனர். ஆனால், கடந்த காலங்களில் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியாதவர்கள் போன்று இவர்கள் செயற்படுவதுதான் வேதனையளிக்கின்றது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கனடாவுக்குச் சென்றிருந்தபோது உணர்ச்சிகரமான உரைகளை ஆற்றிப், புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களின் உணர்வலைகளைக் கிளர்ந்தெழச் செய்ததை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. கடந்த காலங்களிலும் தமிழ் அரசியத்தலைவர்கள் உணர்ச்சி பொங்க ஆவேசமாக உரையாற்றி இளைஞர்களைக் கிளர்ந்தெழச் செய்தமை சகலரும் அறிந்ததே. ஆனால் இதனால் ஏற்பட்ட விளைவுகள் தான் மிகப் பயங்கரமானவை. தமது இன்னுயிரைத் தியாகம் செய்து விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய ஆயுதப் போராட்டம், எவருமே எதிர்பார்க்காத வகையில், வெளிநாடுகளது ஒத்துழைப்புடன் மௌனிக்கப்பட்டது. இந்தப் போராட்டம் காரணமாக நாடு முழுவதும் பேரழிவுகள் ஏற்பட்டன. வடக்கு- கிழக்கில் விவரித்துச்சொல்லமுடியாத அளவுக்குச் சகலவகையிலும் அழிவுகள் இடம்பெற்றன. தமிழர்களின் உயிர்கள் துச்சமாக மதிக்கப்பட்டன. இந்த நிலையில் மீண்டும் அதே மாதிரியானதொரு சூழ்நிலையை உருவாக்க நினைப்பது ஒருபோதுமே புத்திசாலித்தனமானதல்ல என்பதைச் சிந்திக்காது, சிலர் செயற்படுவது, ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் நல்லதல்ல.

### நாட்டில் அமைதி நிலவுவதை விரும்பாத பேரினவாதத் தரப்புக்கள்

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு நன்மை செய்வதையே அவர் பெரிதும் விரும்புகின்றார் என்பதை அவரது ஆரம்பகால நடவடிக்கைகள் தெளிவாகக் காட்டின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை நம்பியதில் தவறொன்றும் இல்லை. தேர்தலில் சிலவேளை மகிந்த வெற்றி பெற்று ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்திருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்ப்பதற்கே அச்சமாக உள்ளது. போர் முடிவடைந்த 2009 இக்கும் 2015 க்கும் இடையிலான காலப்பகுதியில் தமிழர்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. மாறாக அரசுடன் ஒட்டிக் கொண்டிருந்தவர்களின் அட்டகாசம் தான் எல்லை மீறிக் காணப்பட்டது. கடந்த 2015 ஆம் ஆண்டு புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன என்ற எளிய மனிதர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னரே, உண்மையான அமைதி நாட்டில் நிலவ ஆரம்பித்தது. ஆனால் இது நீடிப்பதை இனவாதிகள் விரும்பவில்லை.

கூட்டமைப்பு, அரசுடன் மோதல் போக்கை ஆரம்பிப்பது என்பது சிலருக்கு எளிதான விடயமாகத் தெரியலாம். ஆனால் அதற்குப் பின்னர் கூட்டமைப்பினரிடம் உள்ள திட்டங்கள் என்ன? என்ற வினா எழுந்து நிற்கின்றது. போராட்டம் தான் ஒரே வழியென அவர்கள் நினைத்தால், அதனால் பயன் எதுவும் கிடைக்குமா என்பதையும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். தமிழர் பிரச்சினையை பன்னாட்டுச் சமூகம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. இந்தியா தமிழர்களைக் கைவிட்டு விடாது என்றெல்லாம் கடந்த காலங்களில் பேசப்பட்டது. ஆனால் என்ன நடந்தது? சகலருமே தமிழர்களை நட்டாற்றில் கைவிட்டு விட்டனர். போர் இடம் பெற்றபோது மௌனமாக இருந்த இவர்கள் போர் ஓய்த பின்னரும், தமிழர்களை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. இந்த நிலையில் இன்னுமொரு போராட்டத்தை எமமால் வெற்றிகரமாகக் கொண்டு செல்ல முடியுமா? என்பதைப் பகுத்தறிவுடன் நோக்கவேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதைத் தென்பகுதி மக்கள் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. அந்த அளவுக்கு இனவாதிகள் அவர்களை மூளைச் சலவை செய்துவிட்டனர். தற்போதைய அரசைக் கவிழ்த்து, தான் ஆட்சி பீடத்தில் அமர வேண்டும் என்பதற்காக மகிந்த, வெறியுடன் அலைந்து கொண்டிருக்கிறார். இவரது நோக்கம் நிறைவேறுவதற்கு அவரைத் தோற்கடித்த நாமே உதவிசெய்வது எந்தவகையிலும் நியாயமானதல்ல என்பது மட்டுமல்லாது, புத்திசாலித்தனமாகவும் இருக்க மாட்டாது.

ஆகவே அரசை எதிர்க்கின்ற விடயத்தைக் கூட்டமைப்பினர் பலமுறை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஒருசிலர் மக்களை உசுப்பிவிடுவதற்கு முனையலாம். அவர்களது அரசியல் இருப்புக்கு இது தேவையாகவும் உள்ளது. மக்களைப் பலிக்கடாக்களாக்கிவிட்டு ஆதாயம் தேடுவதற்கு எத்தனிக்கின்றவர்களை மக்கள் இனங்கண்டு ஒதுக்கிவிட வேண்டும். கூட்டமைப்பினர் இன்னமும் சிறிது காலம் பொறுமையாக இருப்பதால் ஒன்றுமே கெட்டுவிடப்போவதில்லை.



# இலங்கையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளும் அவற்றின் பின்னால் உள்ள தமிழினப் படுகொலை மறைப்பும்

சிவா செல்லையா

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் ஏன் இது வரை எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். ஆனால் அந்தக் கேள்விக்கான பதில், ஊழல் மோசடிகளைப் புரிந்த அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் விடுதலைப் புலிகளை அழித்ததாகக் கூறியே பெருமளவு பணத்தைச் சுரண்டி உள்ளனர்.

இவர்களைச் சிங்கள மக்கள் மிகப்பெரும் சாதனை யாளர்களாகவே பார்க்கின்றனர். உண்மையில் இவர்கள் கைது செய்யப்பட்டு முழுமையாக விசாரிக்கப்பட்டால், தமிழின அழிப்பின் உண்மையான விஸ்வரூபம் உலகுக்குத் தெரியவரும். இதனாலேயே 2008 - 2009 ஆண்டுகளின் தமிழினப் படுகொலைகளை மறைத்து, அந்தக் குற்றவாளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து இருந்து தற்போதைய அரசு காப்பாற்றுகின்றது.

குறித்த ஊழல்கள் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழு விசாரணை வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

**தமிழினப் படுகொலைகள் குறித்து பன்னாட்டு விசாரணைக் குழுவின் விசாரணை தேவை**

ஆனால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள், தமிழினப் படுகொலைகளுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப்பட்டு உள்ளதால், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பன்னாட்டு நீதிபதிகள் மூலமே விசாரிக்கப்படல் வேண்டும்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தளம்பலுக்கு தமிழினத்துக்கு எதிரான பெரிய நாசகார அழிப்பே காரணம். அடுத்து, தமிழ் மக்களின் சொத்துக்களும் இராணுவத்தால் சூறையாடப்பட்டன. தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு அவர்களிடம் இருந்து கப்பம் பெறப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத் தளம்பலுக்குத் தீர்வு காண்பதற்கு முன் 2008 - 2009 தமிழின அழிப்புக்கு நீதி வழங்கப்படல் வேண்டும். அன்றேல் தமிழின அழிப்பின் குற்றவாளிகள் நிரந்தரமாகத் தப்பிப்பதற்கு வழி ஏற்பட்டுவிடும். அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்கும், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கும் விற்றுவிட்டு தமிழின அழிப்பால் ஏற்பட்ட பொருளாதார சுமையில் இருந்து இலங்கை தப்பித்துக் கொள்ள முயலுகின்றது.

இந்த நிலையில், தமிழின அழிப்பின் மூலம் பெறப்பட்ட கறுப்புப் பணத்தை முடக்குவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்தியாவில் ரூபா நாணயத்தாளைத் தடைசெய்வது போல், சர்வதேச நிதியத்தின் ஆலோசனை மூலம் இலங்கையில் ரூபா நாணயங்களைத் தடைசெய்து, தமிழின அழிப்புக் கறுப்புப் பணத்தை முடக்க வேண்டும். அடுத்து வடக்கு - கிழக்கு சமஷ்டி அரசுக்குதனியான பணப் புழக்கத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

> 2008– 2009 வன்னியில் ஏற்பட்ட தமிழின அழிப்புக்குத் தேவையான ஆயுதங்களை இலங்கை அரசு, கடனாக சீனா அரசிடம் இருந்து பெற்றது. இவற்றின் தொகை பல மில்லியன் டொலர்களாகும். இதில் தடைசெய்யப்பட்ட பொஸ்பரசு குண்டுகள், கொத்துக்குண்டுகளும் அடங்கும். போர் தளபாடக் கொள்வனவில் பெருமளவு கறுப்புப் பணம், தரகுப் பணமாக அப்போதைய அரசின் அமைச்சர்களாலும் இரா ணுவ உயர் அதிகாரிகளாலும் பெறப்பட்டன. மேலும் 2009க் குப் பின்னர் சீன முதலீடுகளால் பெருமளவு கறுப்புப் பணம் சிங்கள அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் திரட்டப்பட்டது.



**இறுதிப் போருக்கான ஆயுதங்களை மகிந்த அரசு சீனாவிடமிருந்து கடனாகவே பெற்றது**

2008-2009 வன்னியில் ஏற்பட்ட தமிழின அழிப்புக்குத் தேவையான ஆயுதங்களை இலங்கை அரசு, கடனாக சீனா அரசிடம் இருந்து பெற்றது. இவற்றின் தொகை பல மில்லியன் டொலர்களாகும். இதில் தடைசெய்யப்பட்ட பொஸ்பரசு குண்டுகள், கொத்துக்குண்டுகளும் அடங்கும். போர் தளபாடக் கொள்வனவில் பெருமளவு கறுப்புப் பணம், தரகுப் பணமாக அப்போதைய அரசின் அமைச்சர்களாலும் இராணுவ உயர் அதிகாரிகளாலும் பெறப்பட்டன. மேலும் 2009க்குப் பின்னர் சீன முதலீடுகளால் பெருமளவு கறுப்புப் பணம் சிங்கள அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் திரட்டப்பட்டது.

தற்போதைய அரசு, குறித்த மோசடிகளைக் கண்டறிவதற்குப் பின்னடிக்கிறது. உண்மையில் இந்தக் கறுப்புப் பணத்தை வைத்திருக்கும் குற்றவாளிகள் இனங்காணப்பட்டால், தமிழின அழிப்பின் சூத்திரதாரிகளை அடையாளம் காணஇயலும். பொதுச் சொத்துச் சூறையாடல் தொடர்பாக நாடாளுமன்றக் குழு மற்றும் பணமோசடிதொடர்பான குற்றப் புலனாய்வுக் குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் வெறும் கண்துடைப்பாகவே நடைபெறுகின்றன. ■



## வாசகர் திருமுகம்

### அனைவரும் ஒன்றிணைந்து டெங்குநோயை ஒழிக்கப் பாடுபடுவோம்

டெங்கு நோய் நுளம்புக்கடியால் உண்டாகிறது. அரசின் அங்கங்களான மாகாண சபைகள், மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் என்பவை இந்த நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

பொதுமக்களும் இதற்கு குறிப்பிட்ட அளவு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். ஆயினும் எம்மவர்களில் சிலர், இது விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை. உள்ளூராட்சி சபைகள் யாவும் மக்கள் நலன் பேணுவதற்காகச் செயற்படுவனவே. குறிப்பிட்ட தொகையினரான சுகாதாரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களே இந்த உள்ளூராட்சிச் சபைகளால் சுத்திகரிப்புப் பணியில் அமர்த்தப்படுவர். பெரும்பாலான தொழிலாளர்கள் பொறுப்புணர்வுடன் பணி செய்தாலும், ஒரு சிலர் அதற்கு மாறாகச் செயற்படுகின்றனர். யாழ்.மாநகர சபை அதிகாரிகள், ஊழியர்கள் நகரைச் சுத்தமாக வைத்திருக்கப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால் பொதுமக்களில் சிலர் வீட்டில், வளவில் சேரும் கழிவுகளை உரச்சாக்கில் நிரப்பி இரவு வேளைகளில் பொதுஇடங்களில் போடுவதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளிவருகின் றன. நகரின் முக்கிய பெரிய வடிகால் நீண்ட காலம் சுத்தம் செய்யப்படாமல் உள்ளது. அரியாலை பிரப்பம்குளத்து வடிகால், இலந்தக்குள வடிகால், மருதங் குளத்தில் இருந்து தேவரிக் குளத்துக்கு வரும் வடிகால் என்பவை சுத்தம் செய் யப்படாதுள்ளன. நகரின் சில இடங்களில் வெற்றுக் காணிகள் சுத்தம் செய்யப்படாத நிலையில் உள்ளன. விசேடமாக கொழும் புத்துறைப் பகுதியில் பல பெரிய வளவுகள் துப்புரவு செய்யப் படாதிருக்கின்றன. பல காணிகளில் பற்றைகள் வளர்ந் துள்ளதால் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கின்றது. பொதுக் கிணறுகளுக்கு ஒழுங்கு முறையில் குளோரின் இடப்படுவதாகத் தோன்றவில்லை. ஒவ்வொருவரும் தத்தமது வீடு, வளவுகளைத் துப்புரவாக வைத்திருப்பதுடன், மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை என்பவை தமது நிர்வாக பிரதேசத்து வீதிகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இது குறித்துத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களுக்குப் பணி செய்யும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு உதவி, டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முயலுதல் அவசியமாகும். அந்தவகையில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டு டெங்கு நோயை எம் மத்தியில் இருந்து ஒழித்திட முயல்வோம்.

*அ.கொர்னேலியஸ்*
*முன்னாள் மா.ச.உறுப்பினர்*

# 'வாடிவாசல்' நாவலை மையப்படுத்தி படம் இயக்க வெற்றிமாறன் திட்டம்



சி.எஸ்.செல்லப்பா எழுதிய 'வாடிவாசல்' நாவலை மையப்படுத்தி படமொன்றை இயக்க வெற்றிமாறன் திட்டமிட்டுள்ளார். 'விசாரணை' படத்தைத் தொடர்ந்து தனுஷ் நாயகனாக நடிக்கும் 'வடசென்னை' படத்தில் கவனம் செலுத்தி வருகிறார் வெற்றிமாறன். அந்தப் படத்தைத் தொடர்ந்து ஜி.வி.பிரகாஷ் நாயகனாக நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இந்தப் படத்தை ஸ்ரீக்ரீன் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

இதனிடையே சி.எஸ்.செல்லப்பா எழுதிய 'வாடிவாசல்' நாவலின் உரிமையைக் கைப்பற்றியுள்ளார் வெற்றிமாறன். விரைவில் அதனை முன்வைத்து படமொன்றை இயக்கவும் திட்டமிட்டுள்ளார் என்று சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, 'லாக்கப்' என்ற நாவலை மையப்படுத்தி 'விசாரணை' என்ற படத்தை வெற்றிமாறன் இயக்கியமை குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 6 | | | 7 |
| 6 | | 3 | 5 | | 9 | 2 | | 1 |
| | | | | | | 6 | | |
| 1 | | 7 | | | | | 6 | 2 |
| | 2 | | | | | | 3 | |
| 5 | 3 | | | | | 4 | | 8 |
| 3 | 6 | | | | | | 2 | |
| 2 | | | 3 | | 1 | 8 | | 6 |
| 9 | | | 2 | 6 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 9 | 7 | 5 | 2 | 6 | 3 |
| 2 | 7 | 6 | 3 | 8 | 4 | 5 | 9 | 1 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 6 | 4 | 7 | 8 |
| 3 | 2 | 4 | 8 | 1 | 7 | 6 | 5 | 9 |
| 9 | 8 | 5 | 6 | 4 | 3 | 1 | 2 | 7 |
| 1 | 6 | 7 | 5 | 9 | 2 | 8 | 3 | 4 |
| 6 | 1 | 8 | 2 | 3 | 9 | 7 | 4 | 5 |
| 7 | 5 | 3 | 4 | 6 | 8 | 9 | 1 | 2 |
| 4 | 9 | 2 | 7 | 5 | 1 | 3 | 8 | 6 |

நடக்கிறது எல்லாம் நமக்கு சாதகமாகத்தான் இருக்கு



ஜல்லிக்கட்டு பிரச்சினையில் நம்மை மறந்துட்டாங்க

"பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைப்பு" -பத்திரிகை



அடேய்! "பொலிஸ், வாகனங்களுக்கு தீ வைப்பு என்று" பிரிச்சு சரியா எழுதுங்கடா

**பூந்தோட்டம்**

பிரிந்து சேர்ந்த எதுக்குமே பழைய பிடிமானம் இருப்பதில்லை...
நட்பில் கூட...!




காதல் என்பது காக்கா எச்சம் மாதிரி!



எப்போ எவன் தலையில விழும் என்று சொல்லவே முடியாது!

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு.
தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப்பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். கௌரவத்துக்காகப் பணம் செலவழிக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். சுமாரான லாபம் கிடைக்கும்.

**இடபம்:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

**மிதுனம்:** கடந்த கால, உழைப்புக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**கடகம்:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் பெருகும். பெண்கள் பண வசதிக்கேற்ப, ஆடை ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கையைத் தரும். தொழிலில் சுமாரான லாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரால் உதவி உண்டு.





**கன்னி:** செயலில் தடுமாற்றம் உருவாகலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையில் செலவு செய்ய நேரிடலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு, புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாகும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி வந்து சேரும்.



**விருச்சிகம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடும். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகன வகையில் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** மற்றவருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த குளறுபடி சரியாகும். தாராள பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் நகை, பணம் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**கும்பம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். வருமானம் உயரும். பணியாளர்களுக்கு எதிர் பார்த்த சலுகை வந்து சேரும்.

**மீனம்:** கடந்த கால, உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சி வியத்தகு அளவில் இருக்கும். லாபம் பன்மடங்கு உயரும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர் கள். அரசியல்வாதிகளுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

## நாளை தை-15

சனிக்கிழமை -28.01.2017


திதி: அமாவாசை கா.06.46

நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 11.45

ராகுகாலம்:09.36-11.06 வரை

சுபநேரம்:03.36-05.06 வரை

| ஜனவரி | 2017 | | | JANUARY |
|---|---|---|---|---|
| SUN | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED | 4 | 11 | 18 | 25 | |
| THU | 5 | 12 | 19 | 26 | |
| FRI | 6 | 13 | 20 | 27 | |
| SAT | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## கும்பம்

கடின உழைப்பு- முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் உடைய கும்ப ராசியினரே! இந்த காலகட்டத்தில் ராசியில் இருக்கும் சுக பாக்கியாதிபதி சுக்கிரனின் சஞ்சாரத்தால் பணம் வரும் வாய்ப்பு உள்ளது. எதிர்த்து செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள். நீண்டநாள் கஷ்டங்கள் நீங்கும். தன ஸ்தானத்தில் இருக்கும் செவ்வாயின் சஞ்சாரம் பல விதத்திலும் நன்மை செய்யும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். புத்திக் கூர்மையுடன் செயற்படுவீர்கள். தைரியம் உண்டாகும். ராசிக்கு 12இல் சூரியன் சஞ்சாரம் செய்வது செலவுகள் அதிகரிக்கச் செய்யும். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும். தொழில் ஸ்தானத்தில் ராசிநாதன் சனியின் இருப்பு இருக்கிறது. தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்தில் இருக்கிறார்.

தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், புதிய ஓடர்கள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். தொழில் தொடர்பாக அலைய வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். குடும்ப ஸ்தானத்தை செவ்வாய் அலங்கரிக்க குடும்ப ஸ்தானத்தை குரு பார்க்கிறார். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம், கவனம் தேவை. குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும்போது கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. கலைத்துறையினரே, கிரகச் சூழ்நிலை சாதகமாக இல்லாததால் சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு நன்கு உழைப்பது வெற்றிக்கு வழி வகுக்கும்,

அறிவுத்திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். சாமர்த்தியமாக காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். அரசியல்துறையினரே, உங்கள் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். செயற்றிறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். நண்பர்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தை கூட எளிதாகச் செய்து முடிப்பீர்கள். மாணவர்கள் பாடங்களை படிப்பதற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவது நல்லது. புத்திக் கூர்மையுடன் செயற்படுவது எதிர்கால முன்னேற்றத்துக்கு உதவும்.

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வழிபடுவது மனோபலத்தை அதிகரிக்கச் செய்யும். எதிர்ப்புகள் விலகும்.

## மீனம்

எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடும் மீன ராசியினரே! நீங்கள் அவசரமாக எதையும் செய்யும் தயங்காத குணமும் உடையவர்கள். இந்தக் காலகட்டத்தில் ராசியிலுள்ள தனாதிபதி செவ்வாயின் சஞ்சாரத்தால் பணவரத்து கூடும். உடல் சோர்வு உண்டாகலாம். வீண் கவலை அகலும். எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். ராசிக்கு 11இல் சஞ்சாரம் செய்யும் சூரியன் குருவுடன் நாடிப்படி சம்பந்தம் பெறுவதால் எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சொத்துகள் சார்ந்த பிரச்சினைகளில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும்.

தொழில் ஸ்தானத்தை புதன் அமர்ந்து சிறப்பிக்கிறார். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். பயணம் மூலம் வியாபாரம், தொழில் விரிவாக்கம் பெறும். பழைய பாக்கிகள் வசூலாகும். நிதி நிலைமை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயற்றிறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாகச் செய்து முடிப்பார்கள். குடும்பாதிபதி மங்களகாரகன் செவ்வாய் ராசியில் சஞ்சாரம் செய்கிறார். கஷ்டமில்லாத சுக வாழ்க்கை உண்டாகும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். திருமண முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்தினர்கள் வருகை இருக்கும்.

கலைத்துறையினர் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, சில திட்டங்களை ஆலோசிப்பீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராது விடாமுயற்சியுடன் காரியங்களை செய்யுங்கள். வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு மருத்துவச் செலவு ஏற்படும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். கடன் விவகாரங்களில் கவனம் தேவை. அரசியல்துறையினருக்கு மேலிடத்துக்கு பயந்து வேலை செய்ய வேண்டியிருக்கும். உழைப்பு அதிகரிக்கும். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். உங்கள் வசமுள்ள ஆவணங்களை கவனமாக பார்த்துக்கொள்வது நல்லது. சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. எதிர் பாராத செலவு உண்டாகும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த காரியம் வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி உண்டாகும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். விளையாட்டுக்களில் ஆர்வம் உண்டாகும்.

**பரிகாரம்:** முருகனை வணங்கி வழிபட எல்லா நன்மைகளும் உண்டாகும். பணவரத்து கூடும். கடன் பிரச்சினை தீரும்.

# நானும் போகிறேன் நீங்களும் அணி திரள்வீர்!

தமிழகத்து இளைஞர்களின் தன்னெழுச்சியான போராட்டம் வெற்றியைத் தொட்டிருக்கின்றது. சமூக வலைத்தளத்தின் ஊடாக ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் வெற்றியைப் போன்று, தமிழர் தாயகத்துப் போராட்டத்துக்கும் சமூக வலைத் தளத்தின் ஊடாக ஆதரவு திரட்டப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் தன்னெழுச்சியை இங்கேயும் சாத்தியமாக்க இளைஞர்கள் சமூக வலைந் தளத்தின் ஊடாகப் போராடிக் - களமாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஏறு தழுவுதல் தடை நீக்கத்துக்கு எதிராக தமிழகத்தில் ஆங்காங்கே இடம்பெற்ற போராட்டம், மெரீனா என்ற ஒற்றைப் புள்ளியில் சங்கமித்தது. ஒன்று-நூறு-ஆயிரம் என்று இறுதியில் லட்சக் கணக்கானோர் மெரீனாவில் திரண்டனர். மெரீனா போராட்டக் களத்துக்கு ஆதரவாக பல்வேறு பகுதிகளிலும் சமாந்தரமாக கவன வீர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த இளைஞர்களின் - தன்னெழுச்சி எப் படிச் சாத்தியமானது? சமூக வலைத்தளத்தின் ஊடான பரப்புரையே இளைஞர்களை அங்கே ஒருமித்தது. எமது உரிமையில் கைவைப்பதை அனுமதிக்கக்கூடாது என்ற ஓர்மத்திலேயே ஒவ்வொருவரும் அங்கே சுயமாக அணிதிரண்டிருந்தார்கள். அணிதிரள்வில் அரசியல் கலப்பில்லை. தலைவன் - தொண்டன் வேறுபாடில்லை. ஒவ்வொருவரும் தாமே பொறுப்பாளிகள் என்பதில் உறுதியாக இருந்து, இறுதி வரை போராடினார்கள்.

வவுனியாவில் நடைபெறும் காணாமற் போனோரின் உறவுகளின் போராட்டத்துக்கும் சமூக வலைத் தளங்கள் ஊடான அணி திரள்வே முதன்மையாக இருக்கின்றது. ஏறுதழுவுதலுக்கு ஆதரவான போராட்டத்துக்கும் சமூகவலைத் தளங்கள் ஊடாக அறிவிப்பு விடுக்கப்பட்டு, அணி திரட்டல் சாத்தியமாகியது என்பதால், இந்தப் போராட்டத்துக்கும் சமூக வலைத் தளமே பரப்புரை ஊடகமாக இருக்கின்றது.

சமூக வலைத் தளத்தின் ஊடான பரப்புரை வெறுமனே, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவியுங்கள் என்ற கோசத்துடன், கடந்து போவதைப் பார்க்க முடிகின்றது. இதற்குச் சென்று ஆதரவளியுங்கள் என்பதை விட, நானும் செல்கின்றேன் - நீங்களும் வாருங்கள் என்று அழைப்பதுதான் போராட்டத்துக்கான கள ஆதரவை அதிகரிக்கும்.

கடந்த காலங்களில் போராட்டக் களங்களுக்குச் சென்றவர்களுக்கு இடம்பெற்ற கசப்பான அனுபவங்கள் அவர்களை இப்போதும் போராட்டக் களங்களுக்கு காலடி எடுத்து வைப்பதற்கு யோசிக்கச் செய்யும், அது நியாயமானதுதான்.

ஆனால், எனது உரிமைக்காக நான் போராடா விட்டால், எனக்காகப் போராடுவதற்கு எவருமில்லை என்ற யதார்த்தத்தையும் கூடவே உணர்ந்து கொள்ள வேண்டும். யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள் ஒருவாரமாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஆதரவு தெரிவிப்பதற்கு எந்தத் தரப்பும் முன்வரவில்லை. குறைந்தபட்சம் பல்கலைக் கழகத்தின் ஏனைய பீடங்கள் கூட ஆதரவு வழங்கவில்லை. கடந்த காலப் போராட்டங்களில், மருத்துவபீடத்தினர் பங்கெடுத்திருக்கவில்லை. அது கூட இப்போது அவர்களுக்கு ஏனையோர் ஆதரவு வழங்காமைக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

எனக்கு நடந்தால்தான் நான் போராட்டக் களத்துக்கு வருவேன் என்று காத்திருந்தால், நாளை உங்களுக்கு நடக்கும்போது எவரும் வரமாட்டார்கள். அதை மனதில் இருத்தி, இன்றே போராட்டக் களத்துக்கு புறப்படுங்கள். நானும் செல்கின்றேன். நீங்களும் வாருங்கள். மெரீனாவின் எழுச்சியை இங்கேயும் இயல்பாவு சாத்தியமாக்குவோம்.



## யோகாசனத்தின் நன்மைகள்

யோகா பயிற்சியின் மூலம் உடல் மற்றும் மனதில் புத்துணர்ச்சியும் கட்டுக்கோப்பும் ஏற்படுத்த முடியும். யோகா, உடல் உள்ளுறுப்புக்களை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். இதன்மூலம் உடல் உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்கி ஆரோக்கியம் மேம்படும்.

யோகா பயிற்சியின் போது சரியான வழியில் மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால், சுவாசம் ஒழுங்காக இயங்க ஆரம்பிக்கும். இதனால் உங்களது இளமையின் காலம் நீடிக்கும்.

நாம் தன்னம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்லும் ஆற்றலை நமக்குக் கொடுக்கிறது யோகா பயிற்சி. தினமும் தவறாமல் பயிற்சி செய்தால் கோபம், எதிர் மறை எண்ணங்கள் கட்டுப்படும்.

யோகாசனப் பயிற்சியால் உடல் எடை குறையாது என்று பலர் கூறுவார்கள். ஆனால் அது மிகவும் தவறு. உடல் எடை குறைவு மற்றும் உடல் கட்டுக்கோப்புக்கு யோகா மிகவும் அத்தியாவசியமானது. மேலும், செயற்கையை தவிர்த்து, எவ்வித பிரச்சினையும் இல்லாமல், இயற்கையாக உடல் எடை குறைய யோகா மட்டுமே சிறந்த வழி.

நீங்கள் எந்த அளவுக்கு, எத்தனை நிமிடத்துக்கு யோகாசனம் செய்கிறீர்களோ. அதைப் பொறுத்து உங்களுடைய உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்பு கரைந்து, உடல் பருமன் குறையும். அதே நேரத்தில் உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சியால் உடல் எடை குறையும் போது ஏற்படும் சோர்வு, யோகாவில் இருக்காது என்பது உறுதி.



யோகாசனம் செய்யும்போது உடல் உறுப்புகளின் அசைவுகளினால் குருதி ஓட்டம் அதிகரிக்கும். இதனால் குருதி அனைத்து உறுப்புகளுக்கும் பாய்ந்து, அவற்றின் இயக்கம் சீராகும். மற்ற பயிற்சிகளைவிட யோகாவில் மட்டுமே, குருதி ஓட்டம் முகம் மற்றும் சருமத்தின் மீதும் பாய்ந்து உடல் அழகை பாதுகாக்கிறது. இதனால் ஆஸ்துமா, சைனஸ் போன்ற பிரச்சினைகள் குணமடையும்.

யோகா உடம்பைச் சீராக, கட்டுக்கோப்பாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. உடல் பருமனாக இருப்பவர்களில் அனைவருக்குமே உடல் முழுவதும் கொழுப்பு சேர்ந்திருக்க வாய்ப்பில்லை. சில்ருக்கு இடுப்பில், சிலருக்கு தொடையில், சிலருக்கு முதுகில், சிலருக்கு அடிவயிற்றில், சிலருக்கு மேல் வயிற்றில், சிலருக்கு மார்பில் என வெவ்வேறு வடிவங்களில் இருக்கும். குறிப்பிட்ட யோகாசனத்தை மட்டும் செய்தால் போதும். உடல் முழுவதும் ஒரே மாதிரியாக சீராகும்!

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வயதுக்கேற்றபடி யோகா செய்தால் நிம்மதியாக வாழலாம்.



## இது புதுசு


### சிறுவர்களுக்கான உறுஞ்சு தண்ணீர் போத்தல் அறிமுகம்

சிறுவர்களுக்கான உறுஞ்சு தண்ணீர் போத்தல் அறிமுகமாகியுள்ளது. கார்ட்டூன் உருவ அமைப்பில் உருவாக்கப்பட்ட இவை, உறுஞ்சு குழாய் அமைப்பையும் கொண்டுள்ளன. இந்த தண்ணீர் போத்தல் 250 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## முகப்பரு வருவதற்கான முக்கிய காரணங்கள்



- முகத்தின் அழகைக் கெடுத்து, தன்னம்பிக்கையைக் குலைக்கும் பிரச்சினை முகப்பரு. பொதுவாக, 13 வயது முதல் 35 வயது வரை நீடிக்கும். இவை, பருக்கள், சீழ் கட்டிகள், கரும்புள்ளி, வெண்புள்ளிகள் எனப் பல வடிவங்களில் முகத்தில் தோன்றும். முகப் பருக்கள் ஏற்பட, அடிப்படையான 6 காரணங்கள் உள்ளன.
- அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ இளம் வயதில் அதிக முகப்பரு வந்திருந்தால், பிள்ளைகளுக்கும் வர வாய்ப்புள்ளது. சிலருக்கு, உடல் வெப்பம் அதிகம் இருக்கும். உடல் சூட்டின் காரணமாகவும் பருக்கள் ஏற்படும். மேலும், ஜீன் மாற்றத்தால் ஏற்படும் முகப்பருக்கள், ஒரு சிலரின் முகத்துக்குத் தனி அழகைத் தருவதும் உண்டு.
- காற்றிலும், தூசுக்களிலும் உள்ள பக்ரீரியாவால் முகப்பருக்கள் ஏற்படும். இதைத் தவிர்க்க, அடிக்கடி தண்ணீரால் முகம் கழுவலாம். பொடுகுப் பிரச்சினை உள்ளவர்களுக்கு, அவர்கள் பயன்படுத்தும் தலையணை மூலமாகவும் பருக்கள் ஏற்படும். எனவே, படுக்கும் போது தலையணையின் மேல் டவல் விரித்துப் படுக்கலாம்.
- பருவ மாற்றம் காரணமாகவும், ஹார்மோன் மாற்றம் காரணமாகவும் சிலருக்கு முகப் பருக்கள் ஏற்படும். பூப்பெய்துதல், மாதவிடாய் மற்றும் கர்ப்ப காலங்களில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களால் சில பெண்களுக்கு முகப் பருக்கள் ஏற்படும். முகப் பருக்கள் அதிகரிக்க முக்கியக் காரணம் டெஸ்டோஸ்டிரான் (Testosterone) ஹார்மோன்தான்.
- நீண்ட நேரம் தூங்குவதால் உடல் வெப்பம் அதிகரிக்கும். மேலும், அதிக வியர்வையினாலும் பருக்கள் வரலாம். தலைமுடி முகத்தில் படும்போது, அதைச் சரிசெய்வதால் ஏற்படும் கீறல்களினாலும் பருக்கள் வரும். தூங்கும் போது அண்ட்ரோஜன் ஹார்மோன்கள் (Androgen Hormone) முகத்தில் எண்ணெய் சுரப்பை அதிகரிக்கச்செய்கின்றன. அதிக எண்ணெய் சுரப்பின் காரணமாகவும் பருக்கள் வரலாம்.
- அழகு சாதனங்களில் உள்ள வேதிப்பொருள்களினாலும் முகத்தில் பருக்கள், தேமல்கள் ஏற்படலாம். செயற்கை அழகு சாதனங்களைத் தவிர்த்து, இயற்கையாக அழகு பெற, தினமும் முகத்துக்கு பயத்தமா, மஞ்சள் கலந்து பூசலாம்.
- சில உணவுகளில் முகத்தில் பரு, ஒவ்வாமை போன்றவற்றை ஏற்படுத்தும். பித்தம் அதிகமாவதாலும், ஐஸ்கிரீம், சொக்லேட், எண்ணெய் அதிகம் உள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதாலும் முகத்தில் பருக்கள் ஏற்படும். பால், தயிர், முளைகட்டிய பயறு வகைகள், பொன்னாங்கண்ணிக் கீரையை உணவாக எடுத்துக்கொள்வது முகப்பருக்கள் வராமல் தடுக்கச் சிறந்த வழி.




1 படத்தில் காட்டியவாறு 5 பகுதிகளாகப் பிரித்துக் கொள்க.
2 அடிப்பகுதி முடியை மட்டமாக கத்தரித்துக் கொள்க.
3 இரண்டாவதாக இருக்கும் பகுதியில் முந்தைய அளவைவிட சற்றுக் குறைவான மட்டத்தில் வெட்டிக் கொள்க. இதனை மற்றைய பகுதிக்கும் செய்க.
4 மேல் பகுதியை இரண்டாவது பகுதியை விட குறைவானதாக வெட்டிக் கொள்க. இவ்வாறு மற்றைய பக்கத்திலும் செய்து, மட்ப்படுத்திக் கொள்க.
3 அடுக்கு லெயர் கட் தயார்.

## தலைமுடி அலங்காரம்

செ.தமிழ்நம்பி




# விண்வெளிப் பயணம்...!

## காற்று மண்டலம் தாண்டிப் பயணப்படல்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விண்வெளிப் பயணம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. ஆனாலும் அதற்கு முன்பாகவே முன் முயற்சிகள் பல தொடங்கிவிட்டன. சந்திரனில் முதன் முதலாக கால் வைத்தவர்கள் அமெரிக்கர்கள் என்பது எவரும் அறிந்ததே. அதேபோன்று விண்வெளியிலே முதன் முதலில் பறந்தவர்கள் சோவியத் யூனியனைச் சேர்ந்தவர்கள் என்பதும் எமக்குத் தெரியும். ஆனால் இந்த இரு நாட்டினருமே இந்தக் களத்திற்குப் பின் வந்தவர்கள் என்றே சொல்லப்படுகிறது.

### விண்வெளிச் சிந்தனை

விண்வெளிச் சிந்தனை என்பது முதலில் எந்த நாட்டில் தோன்றியது, எந்த விஞ்ஞானிகளிடமிருந்து வெளிப்பட்டது, எந்த நாடு முதன் முதலாக ரொக்கெட்டைக் குறைந்தது ஆயிரம் மீற்றர்கள் தூரத்துக்காவது பறக்கவிட்டுப் பரிசோதித்துப் பார்த்தது என்பது தொடர்பில் ஆராய்ந்தால் அந்த நாட்டினுடைய பெயர் என்பது இன்னமும் உலக வரலாற்றின் ஏடுகளில் சரியாகப் பதிவு செய்யப்படாமல் இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும், தெரிந்துகொள்ள முடியும். ஜேர்மனி தான் முதன்முதலில் இந்த ஆய்வுக் களத்தில் முன்னின்றதாக கூறப்படுகிறது. மிகப்பெரிய சிறப்பை பெற்றுக்கொண்டுள்ளது.

1903 ஆம் ஆண்டு ரைட் சகோதரர்கள் விமானம் பற்றிய முயற்சிகளிலே ஈடுபட்டார்கள். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அந்த முயற்சிகள் நடைபெற்று, வெற்றி பெற்றுக்கொண்டிருந்தன. ஆனால் விமானங்களுக்கும் ரொக்கெட்டுக்குமான அடிப்படை வேறுபாடு என்பது தொடர்பில் சிந்தித்தால் விமானங்கள் காற்று மண்டலத்துக்குள்ளே பறக்கின்றன. ரொக்கெட்டுகள் காற்று மண்டலத்தைக் கிழித்துக் கொண்டு அதன் வெளியாய் பிரபஞ்சத்துக்குப் போகின்றன. இதுதான் அதனுடைய அடிப்படையான வேறுபாடாகக் காணப்படுகிறது.

### சிந்தனையின் பறப்பு

ஜேர்மன் நாட்டைச் சோர்ந்த எருமன் என்ற விஞ்ஞானிதான் முதன் முதலாக ரொக் கெட் பற்றியதான சிந்தனையை வெளியிட்டார். 19 ஆம் நூற்றாண்டினுடைய இறுதியிலேயே அந்தச் சிந்தனைகள் வெளிப்பட்டன. ஆனாலும் அதற்கான முயற்சிகள் 1920 ஆம் ஆண்டுகளிலே தான் இடம்பெற்றதாக சொல்லப்படுகிறது. முதன்முதலாக ஜேர்மன் நாட்டைச் சோர்ந்த ஒரு ரொக்கெட் 1000 மீற்றர்கள் அதாவது 3000 அடிக்குச் செங்குத்தாக மேலே எழுந்து பறந் துள்ளது. அதுவரையிலே விமானம் என்பதெல்லாம் ஊர்ந்து, ஓடி, எழுந்து, பறப்பது என்பதான இயல்புகளே இவற்றின் அடித்தளமாகக் கூறப்படுகிறது.

ஆனால் ரொக்கெட் என்பது நின்ற இடத்திலிருந்து செங்குத்தாக வானை நோக்கிப் பறப்பது. இப்படி முதன் முதலில் பறந்த ரொக்கெட் ஜேர்மனியிலேயிருந்துதான் பறந்தது.1931 ஆம் ஆண்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதன் பிற்பாடு மெல்ல மெல்ல அந்தத் தொழில்நுட்பம் வளர்ந்தது. ஹிட்லர் அந்த நாட்டுக்கு அதிபரானதற்குப் பிறகு ரொக்கெட் தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்கான உதவிகளைச் செய்தார். அவருடைய நோக்கம் வேறாக இருந்த போதும், அந்த விஞ்ஞான வளர்ச்சிக்கு அவர் துணையாக இருந்தார். பேருதவிகளைச் செய்தார்.

### போர் முனை ஏவுதல்

இதன்விளைவே இரண்டாவது உலகப் போரில் ஜேர்மன் முதன்முதலாக இங்கிலாந்தை நோக்கி ரொக்கெட் தாக்குதலை நடத்தி முடிக்க ஏதுவாக அமைந்தது. இது வோர் வரலாற்றின் முக்கிய நிகழ்வாக, செய்தியாக பார்க்கப்படுகிறது. ஆனாலும் இரண்டாவது, உலகப்போரில் ஜேர்மன் தோற்றுப் போனதன் பிற்பாடு அமெரிக்கர்களும் சோவியத் நாட்டைச் சேர்ந்தவர்களும்அந்தத் தொழில்நுட்பத்தைக் கையிலெடுத்துக் கொண்டதாக சொல்லப்படுகிறது. அதிலும் சோவியத் யூனியனே இரண்டாவது உலகப்போரின் இறுதியில் ஜேர்மனியை வெற்றி கொண்டிருந்தது. அங்கு பயணப்பட்ட சோவியத் விஞ்ஞானிகள் வீட்டோ என்ற ரொக்கெட்டையும், அதனுடைய தொழில்நுட்பங்களையும் கைப்பற்றி, தங்கள் நாட்டுக்குக் கொண்டு வந்ததாகவும் கதை கூறப்படுகிறது. இதன் பிற்பாடாகவே சோவியத்தில் விண்வெளி ஆய்வகம் வளர்ந்தது. அதேபோன்று ஜேர்மன் நாட்டிலே மேற்போந்த ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள் சிலர், உலகப் போரினுடைய தோல்விக்குப் பிற்பாடாக குடிபெயர்ந்து அமெரிக்காவிலேயே குடி புகுந்தார்கள். அவர்களே அமெரிக்காவில் இந்த விண்வெளி ஆய்வை வளர்த்ததாகச் சொல்லப்படுகிறது.

ஆக, ஜேர்மனியர்களின் தொழில்நுட்ப அபகரிப்பை பயன்படுத்திக் கொண்டு சோவியத் நாட்டவர்களும் அமெரிக்கர்களும் மிகப் பெரிய வெற்றியை இந்த அறிவியல் உலகத்திலே, விண்ணியல் உலகத்திலே அடைந்திருக்கிறார்கள். அதை எவரும் மறுக்க முடியாது, மறந்துவிட முடியாது.

### விண்வெளி நோக்கிய பாய்தல்

வரலாற்றிலே நாம் குறித்துக்கொள்ள வேண்டியதான ஒரு சில நாள்கள் உண்டு. 1957 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி முதன் முதலாக விண்வெளியில் ஒரு ரொக்கெட் சீறிப் பாய்ந்தது. ரஷ்யாதான் அதை அனுப்பியது. 'ஸ்புட்னிக்-1' என்று அதற்குப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

அந்த ஏவுகணைதான் முதன்முதலாக பூமியைச் சுற்றி வந்தது. அதே ஆண்டு நவம்பர் மாதம் மீண்டும் அந்த ஏவுகணைக்குள்ளேயே ஒரு நாயை வைத்து அனுப்பினார்கள். லைக்கா என்று அந்த நாய்க்குப் பெயர் சூட்டினார்கள். வரலாற்றில் முதன் முதலாக ஏவுகணையுள் பொதிந்து, காற்று மண்டலத்துக்கு வெளியேயாய் ஏவலாகப் பறந்தது பூமியைச் சேர்ந்த ஐந்தறிவு ஜீவனான ஒரு நாய்தான். ஆனாலும் மூன்று வாரங்களின் பின்பாக அந்த ஏவுகணையும், அந்த நாயும் அப்படியே எரிந்துபோய் விட்டன. அந்த முயற்சியானது விண்வெளிப் பயணப்படலில் ஒரு பெரிய வெற்றியை சுவீகரித்திருந்தது.

இதன் பிற்பாடு நான்கு ஆண்டுகளின் பின்பாக 1961 ஆம் ஆண்டில் மீண்டும் சோவியத் 'ஸ்புட்னிக்-2' என்ற இன்னொரு ஏவுகணையை அனுப்பியது. இங்கு முதன் முதலாக ஒரு மனிதன் பயணம் செய்தான். அவன் வேறு யாருமல்ல யூரிககாரின். முதன் முதலாக விண்வெளியிலே பயணம் செய்த மனிதனாக தன்னை அடையாளப் படுத்திக்கொண்டான்.

இதற்குப் பின்பாக 1962ஆம் ஆண்டு விண்வெளியிலே எழுந்து நடந்து, என்பதைவிட மிதந்துகாட்டிய முதல் பெண்மணியாக 'வாலன்டினா' விளங்குகிறாள். இதனையும் நாம் அறிவோம். வாலன்டினா வினுடைய பெயர் இன்னமும் வரலாற்றில், அறிவியலின் பக்கங்களில் எழுதப்பட்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் முதன்முதலாக வான் வெளியிலே மிதந்து பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பி வந்தவர் என்றே சொல்லப்படுகிறது. சோவியத் விண்வெளி ஆய்விலே இப்படியான முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் முதல் வெற்றிகளை பதிவு செய்துகொண்டது. ஆனாலும் நிலவுக்குச் சென்று அங்கு கால் வைத்த பெருமை என்பது அமெரிக்கர்களுக்கே வந்து சேர்ந்தது. அடுத்தடுத்த முயற்சிகளிலே அவர்கள் தான் இருந்தார்கள். இருந்ததாகக் கூறப்படுகிறது. அன்றைய காலங்களில் தொழில் போட்டி என்பது தொழில்நுட்பப் போட்டியாக, விண்வெளி ஆய்வுப் போட்டியாக அமெரிக்காவுக்கும், சோவியத்துக்கும் இடையிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது.அவ்வாறே இப்போதும் சொல்லப்படுகிறது. ஆனாலும் இறுதி வெற்றியை அமெரிக்கர்கள்தான் பெற்றுக் கொண்டார்கள்.

### நிலவின் மீது கால் பதித்தல்

1969 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதி மனித வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நாளாக விளங்குகிறது. முதன் முதலாக நிலவில் மனிதன் கால் வைத்தநாள் அதுவே. மூன்றுபேர் போனார்கள். நீல் ஆம்ஸ் ரோங், ஆல்ட்ரின், மைக்கேல் கொல்வின் என்கிற மூன்று பேர் அந்த ஏவுகணையிலே பயணம் செய்திருந்தனர்.

மூவர் வான்வெளிக்குப் போன போதும் மைக்கேல் கொல்வின் அந்த ஏவு கணையிலேயே சுற்றிக் கொண்டிருக்க ஏனைய இருவரும் நிலவில் கால் பதித்தனர். நீல் ஆம்ஸ் ரோங் தான் முதன் முதலாகச் சந்திரனின் மீது கால் வைத்தார். உலகமே அந்த நாளைக் கொண்டாடியது. உலகத்தினுடைய மிகப்பெரிய வெற்றியாக, விஞ்ஞானத்தினுடைய மிகப் பெரிய சாதனையாக அது அமைந்தது. அமைந்திருக்கிறது.

இது விண்வெளி ஆய்விலே மகிப்பெரிய வெற்றிப்படி என்று கருதப்படுகிறது.அமெரிக்காவுக்கும் சோவியத்துக்கும் இந்த வெற்றியிலே மிகப்பெரிய பங்கு இருந்தாலும்கூட விண்வெளி ஆய்வைத் தொடக்கி வைத்தது ஜேர்மனியே. நன்றியோடு நினைவுகூர வேண்டிய நாட்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள், இன்றும் இருந்து வருகிறார்கள்.!

ஆகவும்,சந்திரனில் மனிதன் கால் வைத்தான். 'நிலவே வா வா' என்று நாம் அழைத்துக் கொண்டிருந்தோம். நிலா...நிலா...ஓடிவா என்றும் இசைத்துக் கொண்டிருந்தோம். நிலவு ஓடிவராது என்று தெரிந்தது. தெரிந்து கொண்டோம். சந்திரன் என்பது ஒரு துணைக் கிரகம். பூமியைப்போல அது இன்னுமோர் கிரகம் என்பதையெல்லாம் அறிவியல் ஆய்வு இந்த உலகத்துக்கு வெளிப்படுத்தியது, எமக்கும் உணர்த்தியது. இன்னமும் பலதை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது.!

## காணாமற்...

வைத்துக் கோரிக்கை விடுத்தார் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள. யாழ். மாவட்டச் செயலகத்தில் அயலுறவுத்துறை அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தை திறந்துவைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் திறக்கப்படுவதில் தாமதம் இருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணி இந்த அலுவலகம் அமைப்பதற்கான சட்டவரைவு மீது முன்வைத்த திருத்தத்தை உள்ளடக்குவதில் ஏற்பட்ட தவறு காரணமாகவே இந்தத் தாமதம் நிலவுகின்றது. அந்தத் திருத்தமும் உள்வாங்கப்பட்டு விரைவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

போர் காரணமாக இரண்டு தரப்புக்களிலிருந்தும் நாம் பெறுமதி வாய்ந்த உயிர்களை இழந்து விட்டோம். நாம் இழந்த பெறுமதி வாய்ந்த அத்தனை உயிர்களும் வெளிநாட்டவர்களுடையது அல்ல. எங்கள் நாட்டின் மக்களது உயிர்களையே இழந்தோம். இனியும் நாட்டில் மீண்டும் போர் ஏற்படாத வகையில் தற்போதைய அரசு பயணித்து வருகின்றது. தற்போதைய அரசு ஊடாக வேறுபட்டிருந்த இரண்டு சமூகம் இன்று இணைந்து செயற்படுகின்றது. இந்த நாட்டில் அனைவருக்கும் சமத்துவம் கிடைக்க வேண்டும். சமத்துவம் கிடைக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்ட அரசு அதனை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கின்றது. பயணத்தின் போது அரசு சில பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தாலும் நாங்கள் இந்தப் பயணத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்.

நாட்டின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இரண்டு வருடங்களில் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் பதினொருதடவைகளுக்கு மேல் பயணம் செய்துள்ளார். வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர் நன்கு அறிவார். இரண்டு ஆண்டுகளில் வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி சிவில் ஆளுநர்களை நியமித் துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் இராணு வக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கபட்டு வருகின்றன. இராணுவத்திடம் உள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனினும் மீதமுள்ள தனியார் காணிகள் உரியவர்களிடம் திருப்பிக் கையளிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினை நியமிக்க சாவித்திரி குணசேகரவின் தலைமையில் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். அதனை மார்ச் மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்று நாடாளுமன்றில் முன்வைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

முன்னைய அரசின் கீழ் செயற்பட்ட அதிகாரிகள் அதே மன நிலையுடன் இன்றைய அரசை நலிவுபடுத்த முயற்சிக்கின்றார்கள். நாங்கள் சில விடயங்களில் பழைய அரசுடன் போராட வேண்டியுள்ளது. நாங்கள் முன்னெடுத்து வரும் நாட்டை முன்னேற்றும் முயற்சிகளை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது பிரிட்டன் ஊடகங்கள் மிக விரைவில் இலங்கை சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு சுவிஸ் நாட்டைப்போல உயர் நிலைக்கு வரும் என்று எதிர்வு கூறியிருந்தன. இலங்கை சுதந்திரம் அடைந்த போது, ஆசியாவிலேயே சிறந்த இரண்டு பல்கலைக் கழகங்கள், சிறந்த அரச சேவை, சிறப்பான பொலிஸ் சேவை எனப் பல துறைகளில் முன்னிலையில் நின்றது. இதனை அனைத்து உலகமும் அறியும்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் தனி நாடாக பிரிந்த வேளையில் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்லியு தனது முதலாவது ஐந்தாண்டு திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது, ஐந்தாண்டு முடிவில் சிங்கப்பூர் இலங்கையை விட முன்னேற்றம் கண்டிருக்கும் என்று தெரிவித்தார்.

ஆனால் என்ன நடந்தது? இன்று நாம் சிங்கப்பூரை பார்க்கும் போது அது எந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை உணர முடிகின்றது. ஆனால் நாம் சுதந்திரம் அடைந்தது முதல் இனத்தாலும் மதத்தாலும் கட்சிகளாலும் பிரிபட்டோம். அதற்குக் காரணம் இலங்கையர் என்ற மன உணர்வு எம்மிடமிருந்து இல்லாமல் போனதாகும்- என்றார். (வ-5-8)

## கறுப்புப்...

மக்கள் நேய ஆட்சி இல்லை. மகிந்த ஆட்சியைப் போல் இந்த ஆட்சியிலும் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. மத்திய வங்கி பிணை முறி மோசடியில் தொடங்கி இப்போதுவரை வெற்றி கரமாக ஊழல்கள் இடம்பெறுகின்றன.

மத்திய வங்கியின் திருடர்களை பாதுகாத்துக் கொண்டுதிருட்டு முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அரசை விரட்டிவிட்டு ஆட்சியை மீண்டும் மகிந்தவிடமா கொடுப்பது? இரண்டு அரசுகளும் ஊழல்மிக்க அரசாக இருக்கும்போது மாற்று அரசு ஒன்றை அமைப்பதுதான் ஒரே வழி. அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

மகிந்த கூறுவதுபோல் இந்த வருடம் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அப்படிக் கவிழ்ப்பதாக இருந்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அப்படி இல்லை என்றால் கறுப்புப் பணத்தைக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கித்தான் ஆட்சியை மாற்ற வேண்டும். இதை மகிந்தவும் செய்யலாம். ஆட்சியைத் தக்கவைக்க ரணிலும் செய்யலாம். கடந்த காலங்களில் மகிந்த செய்ததுதான் இது. ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கும் ஊழல்வாதிகளுக்கு இது ஒரு பெரிய விடயமல்ல - என்றார். (வ-4,5)

## மாணவிகள்...

கீழே பாதுகாப் பாக வெளியேற்றப்பட்டனர். தீ பரவியதால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. தீயணைப்புப் பிரிவினரின் கடும் பிரயத்தனத்தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட் டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பின்புறமாகவுள்ள இந்த விடுதி கடந்த வருடம் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. அதில் நூற்றுக் கணக்கான மாணவிகள் தங்கியுள்ளனர். முதலாம் மாடியிலுள்ள 5 ஆம் இலக்க அறையில் நேற்றுப் பகல் தீ பற்றி அது பரவி மேலும் சில அறைகளிலும் தீச்சுவாலையுடன் பரவியது. அனைத்து அறைகளும் புகை மண்டலமாகக் காணப்பட்டன.

தீ பரவியதையத்து விடுதி நிர்வாகத்தினால் விடுதிக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதோடு யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

தீ ஏனைய அறைகளுக்கும் பரவிக்கொண்டிருந்தது. ஏனைய அறைகளில் தங்கியிருந்த பல மாணவிகள் சிலர் படிகளூடாகவும் ஏனையவர்கள், ஜன்னல் வழியாகவும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் மோசமாகப் பரவிக்கொண்டிருந்த தீயைக் கட்டுட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டனர். தீயின் வெப்பம் கடுமையாகக் காணப்பட்டது. தீ பரவிய அறைகளில் சிலவற்றின் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டன. குறித்த கட்டடம் புதியது என்பதனாலும் தீயை அணைப்பதற்காக அதிகளவில் தண்ணீர் அதிவேக அழுக்கத்துடன் பாய்ச்சப்பட்டாலும் பாதுகாப்புக் கருதி கட்டத்தின் ஏனைய அறைகளிலும் தீ அணைக்கப்பட்ட பின்னரும் மாணவிகள் தங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தீயினால் மாணவிகள் பலரது கணினிகள், அலைபேசிகள், கல்வி ஆவணங்கள், உடைகள் மற்றும் அறையில் காணப்பட்ட தளபாடங்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் எரிந்து நாசமாகியுள்ளன என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கிறது.

தீ ஏற்பட்டதற்கான காரணம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸாரும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் தனித்தனியே விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

'தீ ஏற்பட்டமைக்குக் காரணம் மின் ஒழுக்கு இல்லை என்பது தெரியவந்துள்ளது. சரியான காரணம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. அந்த விடுதியில் தங்கியிருந்த மாணவிகளுக்கு மாற்று விடுதி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சில மாணவிகளின் உடுபுடவைகள் முழுமையாக எரிந்துவிட்டன. அவர்களுக்கான மாற்று வசதிகளையும் உடனடியாகவே நிர்வாகம் வழங்கியுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள விடுதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக எதிர்வரும் திங்கட் கிழமை ஆரம்பமாகவிருந்த ஒரு பீடத்தை அடுத்த வாரம்வரை ஒத்தி வைத்துள்ளோம்' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். (வ-4,101)

## கூட்டாட்சி...

கூட்டாட்சி (சமஷ்டி) நிலைப்பாட்டுக்கு மாறிவிட்டது. இவ்வாறு கூட்டு அரசிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப்போவதாக அறிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு தயாரிப்பு விடயம்தான் இப்போது சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது. ஒற்றையாட்சியை மீறி அது அமைய முடியாது. அதை நாம் நாடாளுமன்றில் தோற்கடிப்போம். இதைத் தோற்கடிப்பதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. நாடாளுமன்ற வாக்கெடுப்பு. அடுத்தது பொது வாக்கெடுப்பு. இந்த இரண்டையும் நாம் பயன்படுத்துவோம். ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் ஒற்றையாட்சியின் கீழ்தான் அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்தது. ஆட்சியைக் கைப்பற்றியதும் கூட்டாட்சிக்கு (சமஷ்டி) மாறிவிட்டது. இந்த நிலைப்பாட்டை ஏற்க முடியாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பத்தில் கூட்டாட்சி என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தது. எமது முயற்சியால்தான் அந்தக் கட்சியை ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்தோம். இருந்தும், இந்த விடயங்களில் அமைதியாக இருக்க முடியாது. விழிப்பாகவே இருக்க வேண்டும்.

பொது வாக்கெடுப்பின்றி அரசமைப்பை நிறைவேற்றுவது இல்லை என்று அரச தலைவர் கூறியுள்ளார். அதேபோல், நிறைவேற்று அதிகாரமிக்க அரசதலைவர் முறைமை நீக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். எவ்வளவு தூரம் உண்மை என்று பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார்.

(வ-5)

## வாக்குறுதியை...

மாலை 6 மணியுடன் முடிவுக்கு வந்தது. தலைமை அமைச்சர் ரணில் தலை மையில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், நீதியமைச்சர் ஆகியோருடன் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 11 மணிக்கு காணாமற்போனோரின் உறவுகள் நேரில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டு போராட்டத்தை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன முடித்து வைத்தார்.

கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்டு, சரணடைந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் 16 பேர், கடந்த நான்கு நாள்களாக வவுனியா நகரில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர். உணவு - குடிதண்ணீர் எதுவுமின்றி இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர். அவர்களது உடல் நிலை மோசமடைந்ததை மருத்துவர்களும் நேற்று உறுதிப்படுத்தியிருந்தனர்.

அரசின் பிரதிநிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன நேற்று மாலை வவுனியாவுக்கு வந்தார். போராட்டக்காரர்களுடன் நேரில் சென்று பேச்சு நடத்தினார். காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு கால அவகாசம் தேவை என்று இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டார். போராட்டக்காரர்கள், இவ்வாறுதான் பல தடவைகள் எங்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. நாங்கள் நம்ப மாட்டோம் என்றனர்.

இராஜாங்க அமைச்சர் தொலைபேசியூடாகப் பேசிய பின்னர், 14 நாள்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும் என்றார். போராட்டக்காரர்கள் உங்களில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. எழுத்தில் தாருங்கள் என்று கேட்டனர். இதன் பின்னர் மீளவும் தொலைபேசியூடாக இராஜாங்க அமைச்சர் பேசினார். இதன் பின்னர், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், நீதியமைச்சர் ஆகியோருடன் தீர்க்கமான கலந்துரையாடலுக்காக எதிர்வரும் 9ஆம் திகதி காலை 11 மணிக்குச் சந்திப்பதற்கு உங்களையும், அருட்தந்தையர்களையும் அழைத்துச் செல்கின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் போராட்டக்காரர்களுக்கு எழுத்துமூலம் உறுதியளித்தார். போராட்டக்காரர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். குடிதண்ணீர் வழங்கி இராஜாங்க அமைச்சர் போராட்டத்தை முடித்து வைத்தார்.

(வ-5)

## நல்லூர்...

நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அநாமதேய அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கோயில் முன்பாக பல்வேறு போராட்டங்கள் கடந்த காலங்களில் நடத்தப்பட்டிருந்தன. ஏறுதழுவுதலுக்கு ஆதரவான போராட்டம் கூட நல்லூர் ஆலயத்துக்கு முன்னால் கடந்த வாரம் நடைபெற்றிருந்தது. காணாமற்போனோரின் உறவுகளின் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் மற்றும் இளைஞர்களின் போராட்டம் என்பன நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறும் என்று அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நல்லூர் ஆலய முன்றலில் திடீரென, அநாமதேய அறிவிப்பு பலகை நடப்பட்டிருந்தது.

அதில், நல்லூர் ஆலயச் சுற்றாடலில் புனிதம் பேணுவோம் என்று தலைப்பிட்டு, கோவில் வெளிவளாகம் (வேலிக்குள்) பாதணிகளுடன் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். கோவில் வளாகத்திற்குள் போராட்டங்கள், கூட்டங்கள் நடத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவித்தல் பலகை யாரால் வைக்கப்பட்டது என்பது குறித்து அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(வ-5-101-37)

## ஊழல்...

ஊழல் மோசடிகள் ஒவ்வொரு அரசின் ஆட்சிக்காலத்திலும் இடம்பெற்றன. ஆனால். ஊழல்

மோசடிகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் எவரும் தண்டிக்கப்படுவதில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பிணை முறி மோசடி தொடர்பான விவாதத்தில் தெரிவித்திருந்தார். அது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த இராஜங்க அமைச்சர் டிலான் பெரேரா:

எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதைப்போல் யாரும் இன்னும் குற்றவாளியாகவில்லை. விசாரணைகளில் தாமதம் இருக்கலாம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் தனிப்பட்ட ரீதியில் சம்பந்தப்படவில்லையென்றாலும் அவரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் வங்கிக் கொள்ளைகள், கொலைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் அமைதியாகவே இருந்தார்.

கொள்ளைகளுக்கும் கொலைகளுக்கும் உதவியளித்தார்கள். இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சி தலைவருக்கு இதுபற்றிக் கதைப்பதற்கு எந்த உரிமையும் கிடையாது. இவரின் கட்சி வங்கிகளை உடைக்கவும் கொலைகளுக்கும் உதவிய கட்சியே - என்றார்.

(வ-4)



கிளிகளே... கிளிகளே!

கிளி என்றதும் எமக்கு பச்சை வண்ணம் தான் நினைவுக்கு வரும். ஆனால், கிளிகளில் 372 இனங்கள் உள்ளன. நீலம், சிவப்பு, மஞ்சள் என்று பல நிறங்களில் கிளிகள் காணப்படும். இவை, சரா சரியாக 50 ஆண்டுகள் உயிர் வாழும் ஆற்றல் உடையவை. ஆஸ்திரேலியாவில் வெள்ளைக் கிளிகள் உண்டு. அமெரிக்காவில் நீல வண்ணக் கிளிகள் அதிகம் காணப்படும். முட்டைகளை ஆண், பெண் என மாறி மாறி அடை காக்கும்.




நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்துகொள்வது அவசியம்
*-அன்னை திரேசா*



## புத்தியைத் தீட்டு.....

ஒரு காட்டுக்கு இரண்டு பேர் விறகு வெட்டச் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும்போது ஒருவரிடம் அதிக விறகும், மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார்.

மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சரியம். எம்மைப்போல தானே அவனும், அவனால் மட்டும் இப்படி இது சாத்தியமானது என்று-ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான்!


இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று-அவன் சொன்னான். இடை விடாமல் வெட்டி கொண்டே இருந்தேன் என்று-சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன். ஆம்! அதிக விறகுகள் பெற வேண்டுமே! ஆனால், நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான்:

நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன் என்று சொன்னான் நண்பன்.

மறுநாள் அவனும் அதே போல் ஓய்வு எடுத்து மரம் வெட்டினான். இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை.

மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியைத் தீட்டிக் கொண்டிருந்தான்!




பலாப்பழம், வங்க தேசத்தின் தேசியப் பழமாகும்.

## சர்வதேச தினங்கள்

### மே

01 - உலக தொழிலாளர் தினம்
03 - பத்திரிகைச் சுதந்திர தினம், சக்தி தினம்
04 - தீயணைக்கும் படையினர் நாள்
மாதத்தின் இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினம்
08 - செஞ்சிலுவை தினம், விலங்குகள் பாதுகாப்புத் தினம்
12 - சர்வதேச செவிலியர் தினம்
15 -குடும்ப தினம்
17 - தொலைத்தொடர்பு தினம்
16 - தொலைக்காட்சித் தினம்
18 - அருங்காட்சியக தினம்
19 - கல்லீரல் நோய் தினம், பயங்கரவாதத்துக்கு எதிரான நாள்
21 - உலக பண்பாட்டுத் தினம், வன்முறை ஒழிப்புத் தினம்
23 - ஆமைகள் தினம்
24 - கொமன் வெல்த் தினம்
31 - புகையிலை எதிர்ப்புத் தினம்

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





1878ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் நவாலியூரில் பிறந்தவரான சோமசுந்தரப் புலவர் தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்டார். அவர் ஏறக்குறையப் பதினைந்தாயிரம் செய்யுள்களை இயற்றியுள்ளார். ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை போன்ற பல செய்யுள்களைச் சுவையான முறையில் எளிய தமிழில் பாடியுள்ளார். பலவகைப் பக்திப் பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார். பனையின் பெருமைகளைக் கூறும் தாலவிலாசம், கதிர்காமம் முருகக் கடவுளைக் குறித்து பாடிய கதிரைச் சிலேடை வெண்பா புகழ் பெற்றவை.

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கில் மானிப்பாய்க் கோவிற்பற்றைச் சேர்ந்த நவாலியூர் என்னும் சிற்றூரில் வன்னியசேகர முதலியார் வழித் தோன்றலாய் கதிர்காமர்-இலக்குமிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் சோமசுந்தரப் புலவர்.

நவாலியூர் அருணாசல உபாத்தியாயரிடம் தமிழ், இலக்கண இலக்கியங்களையும், தனது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடம் ஆங்கிலத்தையும் கற்றார். சிறுவயதிலேயே பேச்சாற்றலையும்-விவாதத்திறமையும் பெற்றார். தனது இளமைப் பருவத்திலேயே அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி முருகன் திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை போன்ற நூல்களை இயற்றினார்.

பதிகம், ஊஞ்சல் என்றும் இரண்டு பிரபந்தங்களையும் பாடிய சோமசுந்தரப் புலவர் கலம்பகம், நான்மணி மாலை, அட்டகம், அந்தாதி, சிலேடை வெண்பா, திருப்பள்ளியெழுச்சி ஆகிய பிரபந்தங்களையும் பாடினார்.

நானூற்றுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட கலிவெண்பாப் பாவகையால் அமைந்த தாலவிலாசம் என்ற இவரது செய்யுள் நூல் பனையின் பெருமைகளைக் கூறுகிறது. இவர் 1953ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

## வரலாற்றில் இன்றைய தினம்



1994 - யாழ். மக்களின் கஷ்டம் நீங்குவதற்கு அரசுடன் தொடர்பு கொண்டு பேசுவேன் என அதி மேற்றிராணியார் அதி வண. நீக்கிலஸ் பெர்ணாண்டோ தெரிவிப்பு.
1995 - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு.
2004 - இந்தியக் குடியரசு தினத்தன்று பிரதமர் வாஜபேயின் பேரன் படுகொலை.
2006 - மர்மப் படுகொலைகளைக் கண்டித்து வவுனியாவில் முழுஅடைப்பு.
2007 - நெல்லியடியில் ஒருவர் சுட்டுக் கொலை.
2008 - ஜெனிவா சமருக்கு முன் 13 ஐ ஒழிக்க தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா ஏ அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**வளர்மதியின் கரப்பந்தாட்டம்**

வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் செல்லத்தம்பி ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கரவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வாலிபர் வட்டம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்;ப்பாணம், ஜன. 27


**மகாஜனக் கல்லூரி**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் மணிசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பாடசாலைகள் வேலைத்திட்டப் பணிப்பாளர் தே.சுரேஸ்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

**உடுவில் மகளிர் கல்லூரி**

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரியின் மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் சுமித்திர ஜெபரெட்ணம் தலைமையில் இடம்பெற வுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மருத்துவர் கோபிசங்கர் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)





நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி கல்லூரி முன்றிலில் நேற்றுக்காலை இடம்பெற்றது. (ம-109)

# நெடுந்தீவு பிரதேச கபடித் தொடர்; ஜோன்ஸ், அன்ரனிஸ் சம்பியன்

யாழ்;ப்பாணம், ஜன. 27

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் அணியும், ஆண்கள் பிரிவில் சென். அன்ரனிஸ் அணியும் கிண்ணம் வென்றன.

நெடுந்தீவு மாகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. பெண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து சென். பற்றிமா அணி மோதியது. இதில் சென். ஜோன்ஸ் அணி 17:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். பற்றிமா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். அன்ரனிஸ் அணி 33:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# இலங்கை சம்பியன்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இலங்கை அணி.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்றது. முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பதிவுசெய்திருந்தமையால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 5 இலக்குகள் இழப்புக்கு 169 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வில்லியர்ஸ் 63 ஓட்டங்களையும், ஹென்றிக்ஸ் 41 ஓட்டங்களையும், மொஸ்லி ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் குவித்தனர். வில்லியர்ஸ் 44 பந்துகளை எதிர்கொண்டே 63 ஓட்டங்களைக் குவித்தார். அவர் ஆரம்பத்தில் 16 பந்துகளுக்கு 12 ஓட்டங்களை எடுத்துத் தடுமாறினார். ரி-20 ஆட்டங்களில் வல்லவரான வில்லியர்ஸின் பெறுதிக்கு ஏற்ற பெறுபேறு இதுவல்ல என்பதே பலரதும் கருத்து.

பந்துவீச்சில் குலசேகர, பிரசன்ன, சன்டகன், குணரத்ன நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை ஒரு பந்து மீதமிருக்க இலக்கை அடைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டிக்வெல்ல 68 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கையை ஏற்படுத்தினார். தரங்க, சில்வா இருவரும் முறையே 20, 19 ஓட்டங்களைப் பெற்று சராசரியில் வீழ்ச்சி ஏற்படாமல் பாதுகாத்தனர். பின்வரிசையில் அதிரடிகாட்டினார் பிரசன்னா. அவர் 16 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்து வெற்றிக்கு வித்திட்டார். ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் டிக்வெல்ல தெரிவானார். (ம)

# ஒருநாள் தொடர் நாளை

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் நளை ஆரம்பமாகிறது.

மத்தியூஸ் நாடுதிரும்பிய கார ணத்தால் தரங்க அணித்தலை வராகச் செயற்படவுள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு வில்லியர்ஸ் தலைமை தாங்குகிறார்.

ரி-20 தொடரில் ஓய்வு கொடுக்கப்பட்ட தென்னாபிரிக்காவின் முன்னணி வீரர்களில் பலர் அணிக்குத் திரும்புகின்றனர். (ம)

# மன்னார் விளையாட்டு வளாகம்; இன்று நடப்படுகிறது அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 27

மன்னார் நானாட்டன் பிரதேச செயலக பிரிவில் அமைக்கப்படவிருக்கும் விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ் அடிக்கல்லை நடவுள்ளார். நிகழ்வில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் கைத்தொழில் அமைச்சருமான ரிசாத் பதியுதீன், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மஸ்தான், சார்ள்ஸ் நிர்மலநாதன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)



# மீண்டும் வென்றது ஆஸி.

பாகிஸ்தானுக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரை 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது ஆஸ்திரேலியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களான வோர்ணர் மற்றும் ஹெட் இருவரும் சிறந்த அடித்தளத்தை அமைத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம்பதிவுசெய்யஇணைப்பாட்டம் 100 ஓட்டங்களைத் தாண்டி நிலைபெற்றது. வோர்ணர் அடித்தாடி விளையாடினார்.ஹெட், சராசரியைப்பேணும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆமிர், ரியாஸ், யுனைட்கான் என்று பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சுப் கூட்டணி முழுவதுமாக முயன்பார்த்தது. இருப்பினும் பயனேதும் இல்லை. இணைப்பாட்டம் தொடர்ந்து நீண்டு நிலைபெற்றது. 78 பந்துகளில் பதிவானது வோர்ணரின் சதம். 11 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் அவற்றில் அடங்கின. வோர்ணர் 150 ஓட்டங்களைப் பகிர்ந்த பிற்பாடே ஹெட், சதத்தைப் பதிவுசெய்தார். இணைப்பாட்மாக 284 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 179 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வோர்ணர். இரண்டு பந்துகளையே சிமித்தால் தாக்குப்பிடிக்க முடிந்தது. 128 ஓட்டங்களுடன் ஹெட் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்த 369 ஓட்டங்களைக் குவித்தது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் யுனைட் கான், ஹசன் அலி இருவரும் தலா இரு இலக்குகளையும் ஆமிர், ரியாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானுக்கு 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் அணித்தலைவர் அசார் அலி. அசாம் ஒருமுனையில் நிலைத்து நின்று சதம் கடந்தாலும் அவருடன் வேறெவரும் இணைப்பாட்டத்தை வழங்கவில்லை. மத்திய வரிசையில் உமார் அக்மல் பெற்ற 46 ஓட்டங்களே இரண்டாவது அதிகபட்சம். முடிவில் 312 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் ஸ்ராக் 4 இலக்குகளையும், கும்மின்ஸ் 2 இலக்குகளையும், கசில்வூட், பல்க் நெர், சாம்பா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)





# வில்லியம்ஸ் சகோதரிகளின் மோதலானது ஆஸி. தொடர்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் செரினா வில்லியம்ஸும் அவரது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸும் எதிர்த்து விளையாடவுள்ளனர்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து வான்வெக் மோதினார். முதலாவது செற்றை 6:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் வீனஸ். ஆனால் சரிவில் இருந்து மீண்ட அவர் அடுத்த இரு செற்களையும் முறையே 6:2, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

தொடர்ந்து நடைபெற்ற பிறிதொரு அரையிறுதியில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளவரான செரீனா வில்லியம்ஸை எதிர்த்து குரோஷியாவின் மிர்ஜானா லூசிக் மோதினார். செரீனா 6:1, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற இறுதியாட்டமொன்றில் செரீனாவும் வீனஸும் எதிர்த்து விளையாடுவது இது 9 ஆவது தடவையாகும்.

செரீனா 22 தடவைகளும் வீனஸ் 10 தடவைகளும் பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற கிண்ணங்களை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சோங்காவை வீழ்த்தினார் வாவ்ரிங்கா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் அதன் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வாவ்ரிங்காவை எதிர்த்து பிரான்சின் சோங்கா மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:6 என்று போராடிக் கைப்பற்றினார் வாவ்ரிங்கா. ஆனால் அடுத்த இரு செற்களிலும் சோங்காவால் பெரிய போராட்டத்தை வெளிப்படுத்த இயலவில்லை. இதனால் அந்த செற்களை முறையே 6;4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றார் வாவ்ரிங்கா. (ம)

# எய்பரைத் தோற்கடித்தது பார்சிலோனா வி.கழகம்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி எய்பரைத் தோற்கடித்தது.

ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள் வரை பலம் மிகுந்த பார்சிலோனாவை எய்பர் சிறப்பாகவே சமாளித்தது. ஆனால் 31 ஆவது நிமிடத்தில் டெனிஸ் முதல் கோலைப் பதிவுசெய்தார். அந்தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

மெஸ்ஸி 50 ஆவது நிமிடத்திலும் நெய்மர் 68 ஆவது நிமிடத்திலும் சுவாரஸ் 89 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 4:0 என்று பலமான வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)




# தீவிர சிகிச்சைப் பிரிவில் மென்னி

ஆஸ்திரேலியக் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடருக்கான பயிற்சியின் போது தலையில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான மென்னி.

சிட்னி சிக்சர்ஸ் அணிக்காக ஒப்பந்தமாகி விளையாடி வருகிறார் மென்னி. நேற்றுமுன்தினம் வலைப் பயிற்சியில் ஈடுபட்ட போது சக வீரர், மைக்கல் லம்ப் அடித்த பந்து மென்னியின் தலையைப் பதம் பார்த்தது. குருதி வடிந்த நிலையில் கீழே சரிந்த அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பரிசோதனையில், மூளையில் குருதிக் கசிவு இருப்பது தெரிய வந்தது. எனினும் அவரது உடல்நிலையில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படுகிறது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. (ம)



# பட்டேலுடனான போட்டி ஆரோக்கியமானது என்றார் சகா

இந்திய டெஸ்ட் அணியின் இலக்குக் காப்பாளர் இடத்துக்கு பார்திவ் பட்டேல், சகா இருவருக்கும் இடையில் மிகவும் போட்டி உள்ள நிலையில் இந்தப் போட்டி மிகவும் ஆரோக்கியமானது என்று தெரிவித்தார் சகா.

டோனியின் ஓய்வின் பின்னர் டெஸ்ட் அணிக்கு இலக்குக் காப்பாளராக சகா செயற்பட்டு வந்தார். அண்மையில் முடிவடைந்த இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சகாவுக்குக் காயம் ஏற்பட்டது. இதனால் பார்திவ் பட்டேல் அணியில் இணைக்கப்பட்டார். அவரது ஆட்டம் சிறப்பாக இருந்தது. தனக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை அவர் கச்சிதமாகப் பயன்படுத்தினார். இங்கிலாந்துத் தொடருக்குப் பின்னரான ஏ பிரிவு ஆட்டங்களில் சகா இரட்டைச் சதத்தையும், பட்டேல் சதத்தையும் பதிவுசெய்துள்ளனர். எனவே ஆஸ்திரேலியத் தொடருக்கான அணியில் எவர் இடம் பெறுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் தங்களது சொந்த இடத்திற்கு வர மிகவும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்பார்கள். நாங்கள் இருவரும் இந்திய அணியில் இடம்பிடிக்க முயற்சி செய்து வருகிறோம். தெரிவுக் குழுவின் முடிவே இறுதியானது. எங்கள் இருவருக்கும் இடையிலான இந்தப் போட்டி அணியை வலுப்படுத்தும். ஆகச் சிறந்தவர் அணிக்குள் செல்வார். இது ஆரோக்கியமானது என்று சகா மேலும் தெரிவித்தார்.






சகாவே தமது முதல் தெரிவு என்று சில தினங்களுக்கு முன்னர் இந்திய அணியின் தெரிவுக் குழு அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியாவை வீழ்த்தியது இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஒருநாள் ஆட்டங்களில் தொடர்ச்சியாகத் தடுமாறிவரும் ராகுல் நேற்றும் தடுமாறினார். அவர் வெறும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 9 பந்துகளை எடுத்துக் கொண்டார். மொத்தத்தில் அவர் ஆரம்பத்திலேயே, இலக்குச்சரிவு, சராசரி என இரு முனைப் போராட்டத்தில் அணியைத் தள்ளிவிட்டுச் சென்றார். கோக்லி 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவர் 26 பந்துகளை எடுத்துக் கொண்டார். 7 முதல் 10 பந்துகள் குறைவாக எடுத்தே அவர் இந்த ஓட்டத்தை எட்டியிருக்க வேண்டும். ரெய்னா 34 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அவர் விளாசிய ஒரு சிக்சரே இந்தியாவின் தரப்பில் பதிவான முதலும் இறுதியானதுமான சிக்சர். டோனி இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்து 36 ஓட்டங்களை எடுத்தார். முடிவில் 147 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.



பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து முதல் இரு பந்துப்பரிமாற்றங்களிலேயே 24 ஓட்டங்களை விளாசி மலைக்க வைத்தது. நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் றோய், பில்லிங்ஸ் என இரு ஆரம்ப வீரர்களையும் வீழ்த்தினார் சாகல். அரைச்சதம் கடந்தார் மோர்கன். ரூட் சிறந்த ஆட்டத்தை வெளிப் படுத்தினார். முடிவில் 11 பந்துகள் மீதமிருக்க பதற்றம் இல்லாத வெற்றியைப் பெற்றது இங்கிலாந்து.

(ம)

**காசி யாத்திரை**

ஆரம்பம் 10.03.2017. நாள்கள்-16. யாத்திரீகர்-20 பேர். தரிசிக்குமிடங்கள் **டெல்லி:** அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா:** தாஜ்மகால், செங்கோட்டை பார்த்தல். **மதுரா:** கிருஷ்ணஜென்மபூமி, **அலகாபாத்:** கங்கா, ஜமுணா, சரஸ்வதி (திருவேணிசங்கமம்) தீர்த்தமாடல், சயனஆஞ்சனேயர் தரிசனம். **சீத்தாமடி:** சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள். **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, காளபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல். அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கைநீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூசை பார்த்தல். **ஹரித்துவார்:** கங்கைநீராடல். 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ரிஷிகேஸ்:** சிவானந்த ஆச்சிரமம் உட்பட்ட இடங்கள் தரிசனம். **குருச்சேத்திரம்:** பாண்டவர்கள் யுத்தம் புரிந்தஇடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல். **கயா:** உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல். **புத்தகயா:** புத்தாலயங்கள் 5 பார்த்தல். **இராமேஸ்வரம்:** (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில், உத்திரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை** வருகை வான்வலம் **திருப்பதி** விஸ்ணு. அலமேலுமங்கா தரித்து சென்னை வருகை. **எமது சேவை:**- 5 விமான ரிக்கட், சுத்தமான குடிநீர், AC வாகனவசதி, மடப்பள்ளி ஆட்கள் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ. 2 பேருக்கு தரமான கட்டில், மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், எயார்போட் போகவர வாகனவசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

விவரங்கட்கு,
குறைந்தகட்டணம் நிறைவான தரிசனம். **கலாநிதி.T. ஸ்ரீரெங்கநாதன்**- மகன், ராஜன்
Office : City Center Shopping Complex
3 rd Floor, No. 59, 3/6, Sea Street, Colombo - 11.
Tel : 077 768 0102, 077 736 2154
E.mail : sriranganathan2601@gmail.com
FB : sridevisriranganathanthuralappa

**SPOUSE VISA**

★ உங்கள் துணை வெளிநாட்டிலா?
★ பல முயற்சிகள் செய்தும் உங்கள் துணை இருக்கும் நாட்டினை சென்றடைய முடியவில்லையா?

**இன்றே நாடுங்கள்!**

**WINSTAR VISA CONSULTANTS**

- எந்த நாடாக இருந்தாலும் சிறந்த ஆலோசனைகள்
- நேர்த்தியான ஆவண ஒழுங்குபடுத்தல்கள்
- நிராகரிக்கப்பட்ட விசாக்கள் தொடர்பாக சிறந்த ஏற்பாடுகள்
- குறுகிய காலத்தில் விசா பெற ஆலோசனைகள்
- எவருக்கும் எவ்விதமான ஏமாற்றங்களும் கொடுக்காமல் இயங்கிவரும் ஓர் நிறுவனம்.

சிறந்த ஆலோசனைகளைப் பெற நேரில் வாருங்கள்

**WINSTAR VISA CONSULTANTS**
106,Post box Junction. Palary Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 300 4641
fb: winstar Visa Consultants
Wed: www.winstarjaffna.com

**சாதனையாளர்களுக்கு வாழ்த்துக்கள்**

2016 ஆம் ஆண்டு என்னிடம் உயிரியல் பாடம் கற்று மருத்துவபீட அனுமதியைப் பெற்ற பின்வரும் மாணவர்களை வாழ்த்துகின்றேன்

| பெயர் | பெறுபேறு | உயிரியல் |
|---|---|---|
| சுலக்சனா முருகதாஸ் | 3A | A |
| ஜெயக்குமார் ஆருரன் | 3A | A |
| ரதினி சண்முகலிங்கம் | 3A | A |
| சுபனித்திரா செல்வநாயகம் | 3A | A |
| சிந்துவர்ஷி திலகராஜா | 3A | A |
| யாழினி கைலாயபிள்ளை | 2AB | A |
| கோபிதா பவளகுமார் | 2AB | A |
| டிவானுகா சிவானந்தன் | 2AB | A |
| புவிலக்சனி ரவீந்திரன் | 2AB | A |
| தக்சிகா புஸ்பகுமார் | 2AB | A |
| தமிழினி கெங்காதரன் | 2AB | A |
| சந்திரமௌளி கௌரிபாலன் | 2AB | A |
| சிவசோதி சிவச்செந்தூரன் | 2AC | A |
| நிதர்சனா குலசேகரம் | A2B | A |
| வேணீபா சிம்மேந்திரன் | A2B | B(கிளிநொச்சி) |
| கிருஸ்ணாந்தா கீர்த்தனன் | A2B | B |
| ரவீந்திரன் சிவலக்சன் | A2B | B(கிளிநொச்சி) |

சு.பொன்.திவாகரன் (உயிரியல் ஆசிரியர்)
New Science World, Jaffna

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

கூடிய நேரம் குறைந்த கட்டணம் தகைமை திறமை அனுபவ விரிவுரையாளருடன் துறைசார் வளவாளர்களின் வழிகாட்டலில்

**அரசமுகாமைத்துவ உதவியாளர் திறந்த பரீட்சைக்கு**
பிரிவு I பிரதி ஞாயிறு காலை 10.00- 2.00 மணிவரை
பிரிவு II பிரதி ஞாயிறு பி.ப. 2.00 – 5.30 மணிவரை
பிரிவு III செவ்வாய், புதன் பி.ப. 4.30 - 6.00 மணிவரை

**அரசமுகாமைத்துவ உதவியாளர் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு**
பிரிவு I பிரதி ஞாயிறு 10.00 - 2.00
பிரிவு II செவ், புதன், வியாழன் பி.ப. 4.30 - 6.00

**இலங்கைவங்கி பயிலுநர் மக்கள்வங்கி ஏனைய வங்கிகளுக்கு**
பிரதி சனி, ஞாயிறு பி.ப. 1.00 - 5.00 மணி

**சட்டமானி நுழைவு**
பிரதி சனி, ஞாயிறு பி.ப. 1.00 - 4.00 மணிவரை

**தொழில் அலுவலர் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு**
பிரதி ஞாயிறு பி.ப.2.00 - 5.00 மணி வரை

**கணக்காளர் சேவை திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு**
சனி, ஞாயிறு 9.30 - 4.00 மணிவரை

**இறைவரி மற்றும் கூட்டுறவு உத்தியோகத்தர்**
சனி 1.00 - 5.00

**ஆசிரியர் தெரிவு மற்றும் M.Ed டிப்புளோமா பரீட்சகளுக்கு**
சனி 11.00 - 3.00 மணி வரை

*சகல ஆட்சேர்ப்பு பதவியுயர்வு வினைத்திறன் பரீட்சைகளுக்குமான வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு:
076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கி அருகில்)

**சமையல் ஆள் தேவை**

வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உயர்தர உணவுச்சாலை (Resturant ) இற்கு தேர்ச்சி பெற்ற சமையல் ஆள்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு கீழ்க் காணும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

**தகைமை:-**
சமையல் கலையில் கற்றுத் தேர்ச்சி பெற்று சான்றிதழ் வைத்திருப்பவர் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

077 421 3931, 077 648 8595
இல.78, மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியா.

**கனடாவில் படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற**

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி
காட்சி அறை இலக்கம் - 185
நேரடியாக எம்மை சந்தியுங்கள்
(27,28,29)-01-2017
V4 EDUCATIONAL CONSULTANCY
0768226236 /0768226240

**வடமராட்சியில் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு**

HONDA CD 200 மோட்டார் சைக்கிள் உடனடி விற்பனைக்கு உண்டு. 2010 ஆம் ஆண்டு உற்பத்தி 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. NP BAH - XXXX புதிய நிலையில் உள்ளது. சிவப்பு நிறம் கூரை மொடல்.
077 105 3422

நீங்கள் பல்லைக்கழக அனுமதி கிடைத்தவரா?

பல்லைக்கழக நுழைவிற்கு தேவையான அடிப்படைக் கற்கை நெறிகள் உங்களுக்காகவே...

assured by PEARSON
IT + ENGLISH
40% off

Dual Certification
Pearson (UK) + ESOFT

உங்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

நீங்கள் ஏன் இப்பிரிவைத் தெரிவு செய்ய வேண்டும்?

- பல்லைக்கழக அனுமதி கிடைத்த மாணவர்களுக்கு மட்டுமேயான விசேட பிரிவு
- மாணவர் வசதிக்கேற்ப விரிவுரை நேரங்கள்
- மாவட்ட ரீதியில் முன்னிலை வகிக்கும் மாணவர்களும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இலகு தவணைக்கட்டண வசதி
- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை

HOTLINE
021 7 57 2572

NEW BATCH
30th Jan 2017 @ 9:00am
(Monday)

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142
www.esoft.lk
The Sri Lanka's Largest Higher Education Network

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## அனெக்ஸ் வாடகைக்கு

நல்லூரில் கோயில் வீதிக்கு அண்மையில்
இருவர் மட்டும் தங்கக் கூடிய அனெக்ஸ்
தனிப்பாதையுடன் வாடகைக்குண்டு.
பி.ப 6 மணிக்குப்பின்னர் தொடர்புகொள்ளவும்.
**T.P : 011 2362 611**



සංවර්ධන වාසනාව
Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 11
சீட்டிழுப்பு திகதி 26.01.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 20 44 52 57
சுப்பர் இலக்கம்: 06
அதிர்ஷ்ட மாதம்: ஜனவரி

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 6, 619, 045/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 488, 494/=
அடுத்த ஜக்பொட் 1, 235, 521/=

28.01.2017 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk


## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் சின்னத்தம்பு

கீரிமலை கருகம்பானையைப் பிறப்பிட மாகவும் சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சின்னத்தம்பு நேற்று (26.01.2017) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஒற்றியூரான்(எரிபொருள் நிலையம், சித்தங்கேணி) சி. அருந்ததிதேவி (முன்பள்ளி ஆசிரியர், சண்டிலிப்பாய்) சி. சிவகுமார் (சுப்பசூ பணியாளர்) சி. மனோர் மணியின்(வலைப்பந்தாட்ட பயிற்றுநர், கச்சேரி, யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையாரும் ஞானேஸ் வரியின் அன்புமிகு மாமனாரும் கிருஸ்ண ராஜாவின் அன்பு மாமனாரும் கிருஷா, கபிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2017) வெள்ளிக்கிழமை மு.ப 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கீரிமலை செம்மண்வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**
**குடும்பத்தினர்**
**(077 338 2085)**

### திருமதி பீஸ் பாக்கியராணி நவரத்தினம்(பெரியகுஞ்சு)



சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் கொழும்பு, கல்கிசையை வதிவிடமாக வும் கொண்ட திருமதி பீஸ் பாக்கிய ராணி நவரத்தினம் 25.01.2017 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பக்கஸ் அரியநாயகம்- அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் ஏழாலை தெற்கைச் சேர்ந்த அல்பிரட் தம்பையா வைத்திலிங்கம்-யூனிஸ் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் யூனிஸ் அனிற்றா, கிறிஸ்சீன் நிரூபினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயன் நஞ்சிற் பிளாஞ்சாட் (ஆஸ்திரேலியா), செல்லையா ஜெயலத் சுஜிற்(H.N.B, கிழக்கு பிராந்திய காரியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் றொமோனா, ரெவின், கிறிஸ்ரியன் ஜெஷீரன், எட்வின் நிஷீரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றேஹானின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான ஜெயராணி, ரெஜினோல்ட், தவத்துரை மற்றும் சவுந்தரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.01.2017) சனிக்கிழமை மு.ப 09.00 மணிமுதல் 95(151), கண்டி வீதி, சுண்டுக்குளியில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு பி.ப 2 மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின்னர் புனித பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே :**
**077 298 0578**
தகவல் :
**சுஜித் (மருமகன்)**

# யாழ். சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் இன்று ஆரம்பம்


SUPER BALL
සුපර් බෝල්
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 607
சீட்டிழுப்பு திகதி 26.01.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 25 53 66 68 P
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.48,132, 905/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.01.28 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1335
சீட்டிழுப்பு திகதி 2017.01.26
வெற்றி இலக்கங்கள்: 11 17 23 51 M
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 16,482,740/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


முதலாவது தேசிய சுதேச மருத்துவ மாநா டும் கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும் என்று வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணை யாளர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்தார். இயற்கையுடன் ஆரோக்கிய வாழ்வு எனும் தொனிப் பொருளில் வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் யாழ். பல் கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவு ஆகிய வற்றின் ஆலோசனையில் யாழ்ப்பாணப் பல் கலைகழக சித்த மருத்துவ மாணவர்களால் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ்: பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரி வில் இன்று காலை 9:30 மணிக்கு ஆரம்ப மாகும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொள்வார். பிற்பகல் 2 மணியில் இருந்து நடைபெறும் மாநாட்டில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்வார். இரண்டாம் நாளான நாளை சனிக்கிழமை தொழில் நுட்ப நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் கிழக்கு பல் கலைகழகத்தின் சித்த மருத்தவ பீட விரிவுரை யாளர் எஸ்.உஷாகாந் தன்மற்றும்யாழ்பாணம் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த உடலியற் கல் வித் தலைவர் திருமதி ஏ.பவானியும் சிறப் புரை ஆற்றவுள்ளனர். மூன்றாம் நாளான நாளைமறுதினம்ஞாயிற் றுக்கிழமை நடைபெ றும் தொழில்நுட்ப நிகழ் வில், மூலிகை தொழில் நுட்ப கல்லூரி அதிபர் திருமதி எஸ்.செல் வேந் திரன் சிறப்புரை யாற்ற வுள்ளார் என்று தெரிவிக் கப்பட்டது. (வ-10, எ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1948.08.13

மறைவு
2016.02.08

### அமரர் தவதேவி இளையதம்பி

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே.....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன் குடும்பத்தினர்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திண்பனை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
**குடும்பத்தினர்.**

## ஆய்வரங்கு

கலை இலக்கிய ஆய் வரங்குத் தொடரின் முதலாவது ஆய்வ ரங்கு மக்கள் இலக்கிய வரிசையில் மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல் என்ற தலைப் பில் நாளை சனிக்கி ழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறும் என்று தேசிய இலக் கியப் பேரவையினர் அறிவித்தனர்.

இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி யில் அமைந்துள்ள தேசிய கலை இலக் கியப் பேரவையின் கவி ஞர் முருகையன் கேட் போர் கூடத்தில் இடம் பெறவுள்ள இந்த ஆய் வரங்கானது தேசிய கலை இலக்கியப் பேர வையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன் னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்றது. இலக் கிய ஆர்வலர்கள் அனைவரையும்கலந்து கொள்ளுமாறு அவர் கள் கேட்டுள்ளனர். (வ-10)


**YAMAHA**
*Revs Your Heart*
அதிகாரமளிக்கப்பட்ட சேவை முகவர்
**J.M. MOTO GUARDS**

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியை
முன்னிட்டு அனைத்து YAMAHA மோட்டார் சைக்கிள்களுக்கும்
J.M.MOTO GUARDS, YAMAHA உடன் இணைந்து
வழங்கும் இலவச சேவை முகாம் நாளை
28 ஜனவரி 2017 சனிக்கிழமை அன்று எமது வளாகத்தில்....
காலை 09.00 மணி தொடக்கம் மாலை 04.00 மணிவரை

**J.M. MOTO GUARDS**
113, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(LITRO GAS களஞ்சியத்துக்கு முன்பாக)
முன்பதிவுகளுக்கு : 077 662 3824

## கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுனராக கடமையாற்றும் **செல்வி மனோன்மணி சின்னத்தம்பு** அவர்களின் பாசமிகு தந்தையார்.

### அருளம்பலம் சின்னத்தம்பு

அவர்கள் 25.01.2017 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்ட செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலபூரணம் மார்க்கண்டு

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலபூரணம் மார்க்கண்டு நேற்று (26.01.2017) வியாழக்கிழமை காலமாகவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மார்க்கண்டு இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் - அன்னமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கா. காசிலிங்கத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஜீவநாதன் டைனேஸ்வரியின் அன்புத் தாயும் ஆசைப்பிள்ளை ஜீவநாதன் (இளைப்பாறிய பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் யாழ். மாநகரசபை), கா.கிரிதரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற ஜீ.நிரோஜன் மற்றும் ஜீ. சோபின்யா (இறுதி வருட LLB மாணவி -London Bucks Univercity), ஜீ. கௌசன்யா (இலங்கை வங்கி - சாவகச்சேரி), ஜீ. பானுயா (மூன்றாம் வருட மாணவி SLIT - மாலபே பல்கலைக்கழகம்), ஜீ. சிறிகயன் ( A/L, 2016 யாழ். பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.10, வைரவர் கோயில் வீதி, அரியாலை மேற்கில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் நாளை (27.01.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**க.ஆ. ஜீவநாதன்**
**(இளைப்பாறிய பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ்.மாநகரசபை)**

**077 408 6190**
**021 222 0693**

# தலைக்கோல் விருது வழங்கல் நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச்சங்கம் பவளவிழா ஆண்டில் நிகழ்த்தும் இசை, ஆடல் அளிக்கையில் கருத் தரங்கமும் தலைக்கோல் விருது வழங்கல் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை தொடங்கி தொடர்ந்து மூன்றுநாள்கள் நடைபெறும் என்று அதன் பொதுச் செயலர் ஆ.கந்தசாமி தெரிவித்தார்.

கொழும்பு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வின் முதல் நாள் நிகழ்வானது மாலை 4.30 மணிக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற வுள்ளது. இரண்டாம் நாள் மற்றும் மூன்றாம் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

நாட்டியக் கலைமணி யசோதரா விவேகானந் தன், இசைமணி வ.செல்லத்துரை, கலாநிதி எஸ். மகேந்திரன் ஆகிய மூவருக்கும் இந்த நிகழ்வில் தலைக்கோல்விருதுவழங்கிக்கௌரவிக்கப்படவுள்ள னர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## மரண அறிவித்தல்கள்

### கிட்ணன் நாராயணன் (நாகராஜா)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1959.07.24 | 2017.01.26 |

(காணித்தரகர்)

கம்பளையைப் பிறப்பிடமாகவும் இல. 4 சீனியர் லேன், யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்ணன் நாராயணன் நேற்று (26.01.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**04, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### பாக்கியம் அருமைநாயகம்



கலட்டி இராமநாதன் வீதியை பிறப்பிடமாகவும் யாழ் நாவாந்துறையை வசிப் பிடமாகவும் தற்போது ஓட்டு மடத்தில் வசித்து வந்த வருமான பாக்கியம் அருமை நாயகம்(25.01.2017) புதன்கிழமை காலமானர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**187/2,மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 411 5387**

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10.11.1952 | 25.01.2009 |



### அருந்ததி செல்லத்துரை
### (சந்திரா)

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மை யெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா.

கோப்பாய்,
தெற்கு கோப்பாய்.

மகன்,மகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch
Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print
Book Printing | Woodent Print




சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த
விலையில் தரமாக
செய்துதரப்படும்.





ES Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

**யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவனின்**
**தேசிய மட்ட சாதனையை வாழ்த்துகின்றோம்**



யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவன்
**குமாரதாஸன் கதீசன்**
Sri Lanka Diabetes Federation நிறுவனமும்
Sri Lanka College of Endocrinologists
நிறுவனமும் இணைந்து நீரிழிவு
தினத்தை முன்னிட்டு 2016ஆம் ஆண்டு
நடத்தப்பட்ட **Multi - Media** போட்டியில்
தேசிய மட்டத்தில் மேற்பிரிவில் **இரண்டாம்**
**இடத்தைப்** பெற்றமைக்காக கடந்த
21.01.2017 அன்று பண்டாரநாயக்க சர்வதேச
மகாநாட்டு மண்டபத்தில் **விருதும்**
**பணப்பரிசும்** வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
இவர் மேலும் பல வெற்றிகளைப் பெற
வாழ்த்துகின்றோம்.
**கல்லூரிச் சமூகம்,**
**யா/இணுவில் மத்திய கல்லூரி.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**அழைப்பின் பேரில் பேருந்து,வான் (Hiace) குளிரூட்டல் வசதியுடன் மற்றும் பொருள்கள் பணியாட்களின் பாவனைக்கான (Crew Cab) வாகனங்களைவாடகைக்குவழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காகவும்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல், விவசாய மற்றும் தொழில்நுட்பபீடங்களின் உத்தியோகபூர்வ தேவைக்காகவும் தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு**(On call basis)**ஆங்கில இலக்கப் பதிவுடைய மேற்குறிப்பிட்டவாகனங்களின் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதிஎரிபொருள்,காப்புறுதிமற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன்,கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

1) **பல்கலைக்கழகத்தின் பிரதானவளாகத்தின் (யாழ்ப்பாணம்) பாவனைக்கு**
   a) பேருந்து–ஆசனஎண்ணிக்கை 54 -அரைசொகுசு
   b) Crew Cab (குழுவினர் வண்டி) - பொருள்கள் மற்றும் பணியாட்களின் பாவனைக்கானது. இது பின்வரும் நிபந்தனைக்கு அமைவாககோரப்படுகின்றது

* ஸிலின்டர் கொள்ளளவு 1400CC– 2000 CC
* சக்கரங்களின் எண்ணிக்கை - 04
* குளிரூட்டல் வசதியற்றது
* பொருட்கள் ஏற்றக் கூடியநிறை 2000Kg - 2500Kg வரை
* வாகனத்தின் உருவமைப்புஅரைஉடலமைப்பாக இருத்தல் வேண்டும்
* இரட்டைபயன்பாடுவாகனமாக இருத்தல்
* டீசல் எரிபொருள் வாகனமாகஇருத்தல் வேண்டும்

2)**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ளஅனைத்துபீடங்களின் பாவனைக்கு**
   a) பேருந்து–ஆசனஎண்ணிக்கை 54 –அரைசொகுசு
   b) வான் (Hiace) குளிரூட்டல் வசதியுடன் - ஆசனஎண்ணிக்கை 14

**மேற்படிவான் (Hiace) இரண்டுபிரிவுகளாகவழங்கப்படவேண்டும்**
*அறிவியல் நகரில் அமைந்துள்ளஅனைத்துபீடங்களுக்கும் கிலோமீற்றர் அடிப்படையில்
* பீடாதிபதி/பொறியியல் பீடத்தின் பாவனைக்கான மாதாந்த கொடுப்பனவு

மேற்படி வாகனங்களின் ஆரம்ப கிலோமீற்றர் கணிப்பீடுகள் யாவும் பல்கலைக் கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனங்களாயின் பிரதானவளாகத்திலிருந்தும், கிளிநொச்சிஅறிவியல் நகரில் உள்ள பீடங்களின் தேவைக்கானவாகனங்களாயின் அறிவியல் நகரில் அமைந்துள்ள பீடங்களில்* இருந்தும் கணிப்பீடுசெய்யப்படும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2014ம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2011ம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்கவேண்டும்.

மேற்படிவாகனங்களின் விண்ணப்பப்படிவம் மற்றும் விலைஆவணங்களையும் மேலதிக விபரங் களையும் 02.02.2017 மதியம் 12.00 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக தனித்தனியாகவாகனம் ஒன்றிற்கு ரூபா 1000.00 பல்கலைக்கழககாசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்றபற்றுச்சீட்டைஉதவிப்பதிவாளர்/நிர்வாகம், திருநெல்வேலி,யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலும் கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல், விவசாய மற்றும் தொழில்நுட்ப பீடங்களினதுகேள்விப் பத்திரங்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பிரதிப்பதிவாளர்/கிளிநொச்சிவளாகம் அலுவலகத்தில் மேற்படி பணத்தினைசெலுத்திகேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை தனித்தனியாக உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் திருநெல்வேலிக்கு பேருந்து வழங்குவதற்கான விண்ணப்பமாயின் **“பேருந்து ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி”**எனவும் Crew cab வாகனத்தின் விண்ணப்பமாயின் **“Crew Cab வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கானகேள்வி”** எனவும் கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ள பீடங்களுக்கு பேருந்துவழங்குவதற்கானவிண்ணப்பமாயின் **“கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ள பீடங்களுக்கு பேருந்து ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கானகேள்வி”**எனவும் அனைத்துபீடங்களுக்கும் வான் வழங்குவதாயின் **“அனைத்துபீடங்களுக்கும் வான் வழங்குதல்”** எனவும் பீடாதிபதிபொறியியல் பீடத்திற்கு வான் வழங்குவதாயின் **“பீடாதிபதிபொறியியல் பீடத்திற்குவான் வழங்குதல்”**எனஅடையாளமிட்டு 2017.02.06 பிற்பகல் 2.30 மணிக்குமுன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர்,கேள்விச் சபை,த.பெ.எண் 57,யாழ்ப்பாணப் பல்கலைக கழகம்,திருநெல்வேலிஎன்னும் முகவரிக்குஅனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்கவிரும்புவோர் மேற்குறித்தகாலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளகேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்விவிண்ணப்பங்கள் 2017.02.06 அன்றுபி.ப 3.00 மணிக்குபரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லதுஅதிகாரமளிக்கப்பட்டபிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமானசபாமண்டபத்திற்குசமுகமளிக்கலாம். பல்கலைக்கழககேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்**
**கேள்விச்சபை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

CAMBRIDGE ENGLISH
Language Assessment
Authorised Centre



**Improve your English Skills**
**@ ICBT Jaffna Campus**

Apply now for New Intake 2017

EQAA

**DIPLOMA IN ENGLISH**
Level 01 & Level 02
(2- 4 Months)
A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.

**IELTS**
**PREPARATION COURSE**
IELTS Registration & Exam Preparation Classes

Weekdays Evening/ Weekend Morning/ Weekend Evening Classes

- All material used are updated and directly from UK.
- Conducted by experienced and qualified lecturers.
- Free Gift Pack with a CD for listening.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence
2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

**மரண அறிவித்தல்**

**திருமதி மேரி தமிழினி போல்வின்**



தோற்றம் 24.02.1984 | மறைவு 25.01.2017

நடுக்குடத்தனை, குடத்தனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி தமிழினி போல்வின் 25.01.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் றேமன் கெனற் போல்வினின் அன்பு மனைவியும் டானியல் சத்தியநாதன் மரியடெய்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற றேமன் கெனற் மேரி இம்மாகுலாற்றா தம்பதி யினரின் அன்பு மருமகளும் சுசானாவின் அன்புத்தாயாரும் மேரி தர்சினி,றொனால்ட் சுமித்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அல்வின், எட்வின், கிளாடிஸ், யமுனா, சிவானந்தம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (27.01.2017) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு தும்பளை தேவமாதா கோயிலில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் பருத்தித்துறை கோயிலடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தேவமாதா கோயில் ஒழுங்கை,**
**தும்பளை,பருத்தித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இல்லமெய்வல்லுனர் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

இன்று (2017.01.27) வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த எமது கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப் பட்டுள்ளது.

யா/ மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை -அதிபர்-

## கலைப்பீடப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

27.01.2017 (வெள்ளிக்கிழமை) திகதியன்று நடைபெறவிருந்த நான்காம் வருட கலைத்தேர்வு -2015. முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

**பதிவாளர்.**

## அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

தற்போது யாழ்ப்பாணம் கோயில் வீதி 57.இல் வசிக்கும் இல.48. சோமர்வெல் றோட்,ஹறோ,மிடில்செக்ஸ்.எச் ஏ2 8ரிரி ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த இராஜரெட்ணம் பிரபாகரனும் பெண் சகுந்தலா பிராபாகரனும் ஆகிய நாங்கள் 57.கொக்குவில் வீதி.யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் சசிகலா என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு ஜே.எஸ்.ஏ மதுரநாயகம் அவர்களால் 1587 ஆம் இலக்கத்தில் அத்தாச்சிப்படுத்தப்பட்டதும்.2014 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 28 ஆம் திகதி என திகதியிடப்பட்டதுமான அற்றோணித் தத்துவப் பத்திரத்தினை இரத்தச் செய்துள்ளதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொதுமக்க ளுக்கும் அறிவித்தல் வழங்குகின்றோம்.(26.01.2017 உதயனில் 2015 எனக் குறிப்பிடப்பட்டமை 2014 என திருத்தப்பட்டுள்ளது.)

இங்கு குறிப்பிடப்பட்ட கலைச்செல்வன் சசிகலா என்பவரினால் எமக்காகவும்,எம் சார்பாகவும் செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம்.

**இராஜரெட்ணம் பிரபாகரன்**
**சகுந்தலா பிரபாகரன்**
**அற்றோனித்தத்துவம் வழங்கியவர்.**

**2017 ஆம் ஆண்டு தை மாதம் 26 ஆந் திகதி.**


## வேலையாள்கள் தேவை

- சமையலாளர்
- சப்ளையர்
- ரொட்டிமேக்கர்
- சமையல் உதவியாளர்

077 229 9675, 021 221 5876

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம்
10.00 / 1.00 / 4.00 / 7.00
சில்வர்
10.15 / 1.15 / 4.15 / 7.15
பிரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் கிளிநொச்சிஅறிவியல் நகரில் அமைந்துள்ளஅனைத்துபீடங்களுக்கும் வாகனங்களை செலுத்துவதற்குஅழைப்பின் பெயரிலான (On-Call Basis) சாரதிதேவை**

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான வாகனங்களை பல்கலைக்கழகம் கோருகின்ற நாட்களில் செலுத்துவதற்கு அழைப்பின் பெயரில் (On-Call Basis) சாரதிதேவை.

**தகைமைகள்:**

1. தரம் 08 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 35வயதிற்கு உட்பட்டவராகவும் கனரக்வாகனம் செலுத்துவதில் குறைந்தது ஒருவருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. இலங்கைமோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரகவாகனங்களைச் செலுத்துவதற் குரியசாரதிஅனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
4. பூரணஉடல் ஆரோக்கியத்தினை மருத்துவப் பரிசோதனை யின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை 09.02.2017நண்பகல் 12.00 மணிவரை பிரதானவளாகம் திருநெல்வேலியில் அமைந்துள்ள உதவிப்பதிவாளர்/ நிர்வாகக்கிளையிடமிருந்தும்,கிளிநொச்சிஅறிவியல் நகரில் உள்ள பிரதிப்பதிவாளர்/கிளிநொச்சிவளாகம்அலுவலகத் திலிருந்தும்பெற்றுக்கொள்ளலாம்.முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் "அழைப்பின் பெயரிலான (On-Call Basis) சாரதிக்கான விண்ணப்பம்" என அடையாளமிட்டு 14.02.2017 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் பதிவாளர், த.பெ. எண் 57,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்குஅனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்**

